
Registered as a News Paper
பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 15.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 14 | வெள்ளி - 31 | 15 - 21செப்ரெம்பர் 2003



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 26.09.2003
மின் அஞ்சல : Ehatham@sltnet.lk

# எய்தவனை நோகவைக்கும் மந்திரம்

**பொங்கு தமிழ்** என்றாலே சிங்கள இனவாதிகளுக்கு பொத்துக்கொண்டு வருகிறது கோபம்.

கோபம் கொப்பளிக்க அதை அடக்கமுடியாத ஆற்றாமையில் வாயில் வந்தவாறும் கைக்கெட்டியவாறும் மிரட்டிப்பார்க்கிறார்கள்.

முதலாவது பொங்குதமிழிலிருந்து நேற்று முன்தினம் நடந்த பொங்குதமிழ் வரைக்கும் இது தான் நிலைமை. இனி நடக்கப்போவதற்கும் இந்த நிலைமை இருக்கக்கூடும்.

ஆனால் ஒவ்வொரு தடைவையும் இதன்மூலம் அவர்கள் என்ன செய்தியை வெளிப்படுத்துகின்றனர் என்றால் மிரட்டியதைச் செய்யமுடியாத கையாலாகத்தனத்துள் தாம் இருக்கிறோம் என்பதையே.

தமிழ் மக்களுக்கு இன்றும் கூட ஒரு சனாயகப் பாதையில் செல்வதற்குள்ள ஆபத்தையும், அந்த ஆபத்தை அவர்கள் ஒரு பொருட்டாக கருதாத அளவிற்கு தமது அபிலாசைகளை வெளிப்படுத்தவும் பெற்றுக்கொள்ளவும் முனைப்புடன் இருக்கிறார்கள் என்பதையும் பொங்குதமிழ் வெளிப்படுத்துவதை விடவும் பொங்குதமிழுக்கு எதிரான நடவடிக்கைகளே சரியான முறையிலும் நம்பகத்தன்மையுடனும் சர்வதேசத்திற்கு வெளிப்படுத்துகிறது.

ஆனால் நகைப்புக்குரியது என்னவென்றால் இது விடயத்தில் தமது கையாலாகாத்தனத்தையும், தமது நோக்கத்திற்கு எதிராகக் கிடைக்கும் விளைவையும் அவர்கள் உணர்ந்துகொள்ளமுடியாத அளவிற்கு அவர்களின் உணர்வுநிலை இருக்கிறது என்பதுதான்.

1977ஆம் ஆண்டு - அதனிலும் முக்கியமாக 1983ஆம் ஆண்டு நடந்த இனவொழிப்புக்கள் தமிழ்மக்களின் முனைப்பானபோராட்டத்திற்கான அதியுச்சமான மிரட்டல்களே.

தமிழர் என்ற இன அடையாளத்திற்காக உயிர்களை நெருப்பில் எறிந்து அதைப் பார்த்து ரசித்து 'போர் என்றால் போர்' என்றும் 'நான் இலங்கை நாட்டின் தலைவர் என்பதை விடவும் சிங்கள இனத்தின் தலைவன் என்று சொல்வதிலேயே பெருமைப் படுகிறேன்.' என்றும் ஜே.ஆர் சொன்ன கூற்றுக்கள் மிரட்டல்களின் உச்சமே.

இப்படி தமிழன் ஏறத்தாள வெறுங்கையுடன் இருந்தபோது கிடைத்தமிரட்டலுக்கே பணியாதவன். இன்று தமிழன் பலசாலியான பின்பு பணிவதெப்படி.

இந்த மிரட்டல்களின் மறுவிளைவாகவே துப்பாக்கிக்கே வளியற்று இருந்த தமிழ்மக்களிடம் இன்று சமாதானம் செய்ய மூன்றாம் தரப்பை அழைத்துவரவேண்டியதாயும் தமக்கு நிதி தேட தமிழ் மக்களின் ஒத்துளைப்புக்காக, கருணைக்காக காத்திருக் வேண்டியதாயும் அவர்களை ஆக்கியது.

போராட்டத்திற்கு மிரட்டல்கள் புதியதல்ல. இந்தியாவும் தமிழர் போராட்டத்தை மிரட்டியது அதற்குப் புலிகள் பணியவுமில்லை. புலிகளின் பணியாமைக்கு மக்கள் துணியாமல் இருக்கவுமில்லை. தாய்மடிச் சூட்டின் பாதுகாப்பில் புலிகள் போராடினார்கள்: வென்றார்கள்.

ரோக்கியோ மாநாட்டிற்கு பல அழுத்தங்கள் ஒரு வகையில் மிரட்டல்களாகவே விழுந்தன. பணியாதபோது திரும்பாத கப்பல்களும் திரும்புகின்றன.

இப்படியிருக்க இன்று பொங்கு தமிழுக்கு மிரட்டல்களை விடுத்தால் அதை மக்கள் மீறும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் சர்வதேச அரங்கில் தமிழ்மக்களின் நியாயத்திற்கு விழுகின்ற அர்ச்சனை மலர்களாகவே அவை அமையும்.

மிரட்டுவது அவர்கள் பாணியாக இருந்தால் மீறுவது எங்கள் பணியாக இருக்கவேண்டும். அதுவே ஆன்மபலத்தை வெளிக்காட்டும் ஆயுதம். அதுவே விடுதலைப்போரின் வெற்றிக்கான சூத்திரமும். ●

---

## தூரனின் பார்வையில்

# தெற்கில் பாதாள உலகம் வடக்கில் வேதாள உலகமா?

**கொழும்பிலும** அதன் சுற்றுப் புறங்களிலும் அதிகரித்துவரும் குற்றச் செயல்களின் வடிவங்களும் தன்மைகளும் அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஊட்டி வருகின்றன.

இக்குற்றச் செயல்களால் சிறிலங்காவின் தலைநகரம் அதிர்ந்து போயுள்ளது. எவரின் தலைவிதி எவரால் எந்த நேரத்தில் எந்தவகையில் என்ன வடிவத்தில் எப்படி எழுதிமுடிக்கப்படும் என்பது தெரியாதவகையில் கொழும்பு வாழ்மக்கள் தமது அன்றாட வாழ்வின் நடமாட்டங்களை பீதியுடன் ஆரம்பித்து அப்பாடா என்ற பெரு மூச்சுடன் முடிக்கிறார்கள்.

இயமன் மோட்டார் சைக்கிளிலும் வரலாம், ஓட்டோவிலும் வரலாம், வேறு சந்தேகம் ஏற்படாத எந்த வாகனத்திலும் வரலாம்...

விழுவது அரிவாள்வெட்டாகவும் இருக்கலாம், கத்திக்குத்தாகவும் இருக்கலாம், எதிர் கொள்ள வேண்டியது வாகன மோதலாகவும் இருக்கலாம், துப்பாக்கி வேட்டாகவும் இருக்கலாம்.

உடல் நட்ட நடுவீதியிலோ, தெருக்கரையிலோ, வீட்டு முற்றத்திலோ ஹோட்டலிலோ சவமாகி அனாதைப் பிணமாக இரத்த வெள்ளத்திலோ அரைகுறையாக கருகிய நிலையிலோ கிடக்கலாம்.

குற்றவாளிகள் தப்பி விடுவார்கள், அவர்களை இயக்குவோர்கள் அவர்களுக்கான சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு ரகசியமாக பாதுகாக்கவும் செய்வார்கள்.

அரசியல் செல்வாக்கும் அதிகாரவர்க்கங்களின் அநுசரணையும் அவர்களை அடுத்த குற்றச்செயலை நம்பிக்கையுடன் மேற்கொள்ளத் தயாராக்கி விடும். இது இன்றைய கொழும்பு வாழ் குற்றவாளிகளின் காலம்.

இந்தக் குற்றவாளிகள் பாதாள உலகத்தவர்கள் என்று அச்சத்துடன் அழைக்கப்படுகின்றார்கள்.

இவர்களில் பிச்சைக்காரர்கள் முதல் அரசியல்வாதிகள் வரை பலரகத்தவர்களும் பல தரத்தவர்களும் இருக்கிறார்கள்.

தப்பியோடிய பாது காப்பு படையினர், பொலிஸ்காரர்கள் - குற்றவாளிகள், சமூகவிரோதிகள், சில முன்னாள் அரசியல் வாதிகள் என பலதரத்தைச் சேர்ந்தவர்களும் இதில் அடங்குவர்.

சட்டவிரோத நடவடிக்கைகள் இவர்களின் பிரதான தொழில்.

இவர்களில் பலரும் தமிழ் திரைப்பட கதாநாயக வில்லன்கள் போன்றவர்கள். கப்பம் வாங்கல், கட்டை பஞ்சாயத்து என்று இந்தியாவில் கூறப்படும், சட்டவிரோத நாட்டாண்மைத் தனத்துடன் கூடிய நீதிவிசாரணை நடவடிக்கைகள், கைமோசக்கொலைகள், ஆட்கடத்தல், என்ற பல தொழில்களை மொத்தமாகக் குத்தகைக்கு எடுத்துள்ள இவர்கள் அதிகார அரசியல் வாதிகளின் அந்தரங்கக் காவலர்கள், அடியாட்கள் என பலவகை அவதாரம் எடுத்துள்ள இவர்கள் சட்ட அங்கீகாரம் பெறாத மிக முக்கிய பிரமுகர்கள் (V.I.P) என்ற அந்தஸ்துடையவர்களாக விளங்குகின்றனர்.



இன்றைய சிறிலங்காவின் அதிகார பீடங்களில் உள்ளவர்களின் மறைமுக ஆசீர்வாதமும் இவர்களுக்குண்டு. என்னும் இவர்கள் பாதாள உலகத்தவர்கள் தான். இவர்களின் பதுங்கிடம், செயலிடம். ஒதுங்கிடம், வதிவிடம் யாவும் நாளுக்கு நாள் மாறும் தன்மை கொண்டது. ஒரு பாதாள உலகப் பிரமுகர் (தற்போது கொல்லப்பட்டு விட்டார்) பத்தேகன சஞ்சீவ என்றவர் சனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் ஒரு முக்கியஸ்தராகவும் இருந்தார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

இந்தப் பாதாள உலகக்கும்பல் பல்வேறு குழுக்களாக - பொழுதுபோக்கு, போதைப்பொருள் வியாபாரம் இவர்களின் பல்வேறுதலைமையின் கீழ் இயங்குவதுடன், இவர்களுக்கிடையேயான மோதல்களும், பழிவாங்கல் நடவடிக்கைகளும் அதிகளவில் இடம்பெறுவதும் உண்டு. இது ஒரு தொடர் நிகழ்வாகும்.

இன்றைய சிறிலங்காவின் தலைநகரில் கொலையுதிர்காலம் நடக்கிறது. இதனைத் தடுக்கவும் கட்டுப்படுத்தவும் முடியாது உள்ளது. போகிறபோக்கில் கொழும்பு பாதாள உலகத்தவரின் ஆட்சிக்குள் விழுந்தாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் பதாள உலகத்தவரின் ரட்சகராக இருக்கும்வரை இந்தநிலை மாறப்போவதேயில்லை.

● ● ●

அது தென்பகுதியின் நிலையென்றால், வடபகுதியில் அதாவது இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளான யாழ். குடாவின் நிலை 1995க்குப்பின்னான இந்த ஏழு வருட காலப்பகுதிக்குள் அதிர்ச்சியூட்டும் வகையில் மாறியுள்ளது.

குற்றச்செயல்களற்ற, அமைதிப் பிரதேசமாக, நெருக்கடிகள் அழுத்தங்களுக்கு மத்தியிலும், போரின் வடுக்களைச் சுமந்தவண்ணம். விளங்கிய யாழ் குடாநாட்டின் இன்றைய நிலைமையும் அச்சமூட்டுவதாகவே உள்ளது.

இதற்கான காரணத்தை ஆராய்வதென்பது நேரத்தைத் கொல்லும் விடயமாகும். உண்மையில் இது ஒரு நீண்டகால திட்டத்துடன் கூடிய சதியின் பின்விளைவுகளேயாகும். இராணுவப் பொறிக்குள் வீழ்ச்சிகண்ட யாழ்குடாநாடு படையினரால் அறிவையும் மனதையும் வெல்லும் நடவடிக்கை என்ற பெயரிலான உளவியல் நடவடிக்கைக் குட்படத் தொடங்கியதும் சிக்கல்கள் ஆரம்பித்தது.

விடுதலை மற்றும் போராட்டச் சிந்தனைகளில் இருந்து மக்களைப் பிரிக்கவே இந்தநடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.

மதுவகைகளின் வருகை, போதை வஸ்துகளின் பாவனை, மூன்றாந் தர சினிமாப்படங்கள் மற்றும் ஆபாசத் திரைப்படங்களின் பரம்பல், என்பன இந்த உளவியல் நடவடிக்கையின் மூல ஆயுதங்களாயின.

இவற்றின் கவர்ச்சியில் மூழ்கிய இளைஞர்களின் சுபாவங்கள் கலாசார பண்பாட்டு ரீதியில் சிதைவடைந்ததன் பாதிப்பினை இன்றைய யாழ்குடா அனுபவித்து வருகிறது. வெளிநாட்டு பொருளாதார பலமும் இதற்கு மற்றொரு காரணம்.

இது இளைஞர்களின் பொறுப்புணர்வை மழுங்கடித்ததுடன் பொழுது போக்கு என்ற பெயரில் சீரழிவு கலாச்சாரத்தினுள் மூழ்கவைத்தது.

சந்திக்கு சந்தி வம்பளக்கும் இளைஞர்களின் கூட்டம் அதிகரித்துள்ளது. சுயத்துவம் இழந்த இளைஞர்களின் மனோபலம் பதிக்கப்பட்ட நிலையில் சமூக உறவுகளில் உடைவுகள் ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது. பெண்கள் மீதான பாலியல் கொடுமைகள் அதிகரித்துள்ளன.

தீனாகுழு, ரெட்குழு, கிங்குழு... என்ற பெயரிலான கும்பல்கள் சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடும் பொழுது போக்கு கலாச்சாரத்தை கொண்ட குழுமோதல்கள், கொலைகள், அடிதடிகள், என யாழ்குடா நாடு அதன் கலாச்சாரத் தனித்துவத்தை இழந்து போயுள்ளது.

ஆயுதபாணிகளான இந்த மக்கள்விரோத சக்திகளின் பின்னணியில் சில அரசியல் சக்திகளும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

வக்கிர உணர்வுகளால் தூண்டப்படும் இந்த இளைஞர் குழுக்களால் குடாநாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

தென்பகுதி பாதாள உலகம் போல் வடபகுதி யாழ் குடாவில் ஒரு வேதாள உலகம் உருவாகிவருகிறதோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இது ஒரு அபாயமான சமிக்ஞையாகும்.

பொறுப்புள்ள சமூகமும் மனித நேயம் கொண்ட மக்களும் இதுகுறித்து கவலைப்பட ஆரம்பித்துள்ளார்கள் என்பது உண்மைதான்.

ஆனால் அவர்கள் எதுவும் செய்ய முடியாத அச்சநிலையிலேயே உள்ளனர். பொறுப்புள்ளவர்கள் சிந்தித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய தருணம் இதுதான். ●

---

துயரம் நீடித்துத் தங்கியிருக்கும், பொறுமையோ, தெய்வீகம் வாய்ந்தது. - ஹென்ரி லாங்ஃபல்லோ

# புலிகளும் மேற்கு நாடுகளும்

**சமாதானத்தின்** மூலம் புலிகள் ஈழத்தை அடையப் போகிறார்கள் என்று கொழும்பிலுள்ள புத்தி ஜீவிகளில் ஒரு பகுதியினர் சாதாரண சிங்களச்சனங்களையும் படித்த சிங்களவர்களையும் பயமுறுத்தத்தொடங்கி விட்டார்கள்.

மீடியாக்களில் அதிகம் செல்வாக்குப்பெற்ற எழுத்தாற்றல், பேச்சாற்றல் மிக்க இந்த விமர்சகர்கள் சொல்கிறார்கள், மேற்குலகம் மறைமுகமாக புலிகளை அங்கீகரிக்கத்தொடங்கி விட்டது என்று.

முன்பு ஒரு இராணுவ இயக்கமாக காணப்பட்ட புலிகள் இப்பொழுது படிப்படியாக ஒரு சிவில் இயக்கமாக மாறி வருவதாகவும், சர்வதேச அளவில் அவர்களுடைய அந்தஸ்து உயர்ந்து வருவதாகவும் இவர்கள் கூறுகிறார்கள்.

இத்தனைக்கும் புலிகள் தமது படையணிகளை அப்படியே வைத்துக்கொண்டு தான் இவ்வளவையும் சம்பாதித்து வருகிறார்கள் என்று கூறும் இவர்கள், புலிகளின் படைப்பலம் அப்படியே இருக்கக் கூடியதாக அவர்களுடைய சர்வதேச அந்தஸ்து உயர்வதென்பது ஒரு கட்டத்தில் புலிகளை மேற்கு நாடுகள் அங்கீகரித்து தனிநாட்டை உருவாக்குவதில் தான் முடியும் என்றும் சுட்டிக்காட்டுகிறார்கள்.

பரிஸில் புலிகள் தமது மாற்று ஏற்பாடுகள் குறித்து மாநாடு கூட்டியது இவர்களுடைய பயங்களை மேலும் அதிகரித்திருக்கிறது. பிரெஞ் அரசாங்கம் புலிகளை அனுசரித்து நடந்தவிதம் சர்வதேச அங்கீகாரத்திற்கான ஒருவித தொடக்க சமிக்ஞையே என்று கொழும்பில் சில வட்டாரங்களில் நம்பப்படுகின்றது.

ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தின் சில தொண்டர் நிறுவனங்கள் புலிகளுடன் சேர்ந்து இயங்க முன் வந்தமை சமாதானத்தின் வழியில் காணப்படும் சாதகமான ஒரு அம்சம் என்று ஜெகான்பெரேரா கூறுகிறார். ஆனால் மேற்சொன்ன விமர்சகர்கள் வேறுவிதமாகச் சிந்திப்பது தெரிகிறது. புலிகளில் சேரவரும் வயதில் குறைந்த சிறுவர்களை பராமரிப்பதற்கான இடைத் தங்கல் முகாம் ஒன்றை நிறுவுவதற்கு ரீ.ஆர். ஓ.வுடன் யுனிசெவ் நெருங்கி ஒத்துழைப்பது குறித்து அவர்கள் கடுமையாக விமர்சித்து வருகிறார்கள்.

யுனிசெவ் போன்ற ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துக்குரிய சர்வதேச தொண்டர் நிறுவனம் ஒன்று ரீ. ஆர்.ஓ. வை அங்கீகரிப்பது போல நடந்து கொள்வது இவர்களுடைய முன் சொன்ன பயங்களை மேலும் அதிகரிப்பதாயிருக்கிறது.

இதுதவிர ரோக்கியோ மாநாட்டில் புலிகள் கலந்து கொள்ள மறுத்ததால், அவர்கள் சர்வதேச அளவில் தனிமைப்பட்டு விடுவார்கள் என்ற இந்த விமர்சகர்களின் எதிர்பார்ப்பும் பிழைத்து விட்டது.

ரோக்கியோ மாநாட்டில் புலிகளை கலந்து கொள்ளச் செய்வதற்காக யசூசிஅகாஷி கிளிநொச்சிக்கு வந்தார். ஆனால் நிலைமையில் எந்தவிதமான மாற்றத்தையும் ஏற்படுத்த முடியவில்லை. ரோக்கியோ மாநாட்டின் தொடர்ச்சியாக அண்மையில் கொழும்பில் நடந்த மாநாட்டுக்கும் புலிகள் போகவில்லை. ஆனால் இதற்கெல்லாம் பிறகும் அகாஷி கிளிநொச்சிக்கு வந்தார் என்பது சமாதானம் எத்துணை கவர்ச்சியானது என்பதை மட்டும் காட்டவில்லை. சமாதானத்திற்கு தயாரான புலிகள் எத்துணை கவர்ச்சியானவர்களாகி விட்டார்கள் என்பதையும் அது காட்டியது. புலிகள் பேச்சுக்களில் இருந்து பின்வாங்கினாலும் கூட சமாதான முயற்சிகளை முறிக்கத்தயாரில்லை என்பது மிகச் சாதகமான ஓர் அம்சமாகவே மேற்கு நாடுகளால் பார்க்கப்படுகிறது. இந்தப் போக்கைப்பாதுகாப்பதற்கே அவர்கள் விரும்புகிறார்கள்.

கிளிநொச்சி இன்னமும் ராஜதந்திர கவர்ச்சி குன்றாமல் இருப்பது இதனால் தான். ஆனால் இதை மேற்சொன்ன சிங்கள புத்தி ஜீவிகள் அஞ்சுவது போல, சமாதானத்தின் மூலம் தனிநாட்டை உருவாக்குவதற்கு புலிகளுக்கு மேற்கு நாடுகள் உதவுகின்றன என்று வலிந்து அர்த்தம் கற்பிக்கத் தேவையில்லை.





புலிகளின் விசயத்தில் மேற்கு நாடுகள் ஒருவித இரட்டை அணுகுமுறையை கையாள்வது தெரிகிறது.

ஒருபுறம் புலிகளை சமாதானத்தால் வசப்படுத்தும் விதத்தில் அவர்களை அரவணைப்பது. மறுபுறம் அவர்களை சர்வதேச சமூகத்துக்கு பொறுப்புக் கூறும் ஒரு அமைப்பாக மாற்றும் விதத்தில் அவர்களின் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பது.

இதில், புலிகளை தடை செய்திராத நாடுகளுக்கூடாக புலிகளை அரவணைப்பது முதலாவது அணுகுமுறை. இதற்கு மேற்கு நாடுகளில் புலம்பெயர்ந்து படிப்படியாக ஸ்தாபிதம் அடைந்து வரும் தமிழர்களையும் பயன்படுத்தும் ஏதுநிலைகள் உண்டு.

மற்றது, புலிகளின் மீதான தடையைத்தொடர்ந்தும் வைத்திருப்பதும் யுத்த நிறுத்த காலத்தில் அரச படைத்துறையை மறுசீரமைப்பதற்கு உதவுவதும் போன்றவை.

இந்த அணுகு முறையை சிறிது கொச்சையாகச் சொன்னால், காதலிக்கத்தயார், ஆனால் கல்யாணம் செய்யத்தயாரில்லை என்பது போல.

கடந்த சுமார் இருபது மாத கால சமாதான முயற்சிகளின் விளைவாக இதுவரை எந்தஒரு நாடும் புலிகளின் மீதான தடையை நீக்கியிருக்கவில்லை என்பதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். குறிப்பாக இதில் அமெரிக்கா எடுக்கும் முடிவு ஏனைய மேற்கத்தைய நாடுகளின் மீது செல்வாக்குச்செலுத்த வல்லதாய் இருக்கும்.

முன்பு வந்த சில செய்திகளின் படி அமெரிக்கா புலிகளின் மீதான தடையை சில மாதங்களுக்கு முன்பு மீள்பரிசீலனை செய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பிந்திக் கிடைத்த செய்திகளின் படி வரும் ஒக்டோபர் 8ஆம் திகதி இது பற்றிய முடிவுகள் எடுக்கப்படும் என்று கூறப்படுகின்றது.

அமெரிக்காவுக்கும் ஏனைய மேற்கு நாடுகளுக்கும் தற்சமயம் அதிகம் அச்சுறுத்தலாய் இருப்பது தற்கொலைக்குண்டுத் தாக்குதல்களே. இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் ஆகப்பிந்திய வெற்றிகரமான போர் முறையாக இது காணப்படுகிறது. இந்தப்போர் முறையின் முன்னோடிகள் கரும்புலிகளே என்று அமெரிக்கா கூறிவருகிறது. புலிகள் வன்முறையை கைவிடுவதாக

**நிலாந்தன்**

பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்று அமெரிக்காவற்புறுத்தி வருவது கரும்புலிகள் என்ற வெற்றிகரமான முன் உதாரணத்தை அரங்கிலிருந்து அகற்றுவதற்காகவே.


புலிகளிடமிருந்து இதற்கான சாதகமான சமிக்ஞைகள் காட்டப்படும் வரை அமெரிக்கா புலிகள் தொடர்பான மேற்சொன்ன இரட்டை அணுகுமுறையை தொடர்ந்தும் பேணுவதற்கான வாய்ப்புக்களே அதிகம்.

மனிதக்குண்டுத் தொழில் நுட்பம் உலகு பூராகவும் வெற்றிகரமாக பரவிவருவதால் அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் அதிகம் விசனமடைந்து காணப்படுகின்றன. ஆனால், புலிகளிடம் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு சிறப்புப் படையணியாக கரும்புலிகள் காணப்படுகிறார்கள் என்பதற்காக, உலகம் முழுவதும் பரவிவரும் மனிதக் குண்டுத் தொழில்நுட்பம் புலிகளுடையது என்று சொல்வது மிகைப்படுத்தப்பட்ட ஆதாரம் ஏதுமற்ற ஒரு கூற்றே.

மனிதக்குண்டுகளின் முன்னோடிகள் என்று பார்த்தால் நவீன வரலாற்றில் ஜப்பானின் கமிகாஷி தற்கொலைப்படை தான் முதலில் நினைவிற்கு வரும். இரண்டாம் உலக மகாயுத்த சூழலில் எதிரிக் கப்பல்களின் புகை போக்கிகளைக் குறிவைத்துப்பாய்ந்த வான் வழித்தற்கொலைப்படைப்பிரிவு இது. சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்பு தனது இலக்குகளை வெல்வதற்காக மனிதக்குண்டுகளை வானில் இருந்து குதிக்கச்செய்த ஜப்பான் இப்பொழுது இலங்கைத்தீவில் சமாதானம் செய்ய வந்திருக்கிறது என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டிய சுவாரஸ்யமான ஒருமுரணே.

அதோடு, மனிதக்குண்டுத் தொழில் நுட்பத்தின் கற்பனை வடிவம் புலிகளுக்கு முன்பு ஏற்கனவே ஹொலிவூட் திரைப் படங்களில் காட்டப்பட்ட ஒன்று தான் என்று கூறப்படுகிறது. இப்படிப்பார்த்தால் நவீன மனிதக் குண்டுகளுக்கான கற்பனை ஹொலிவூட் திரைப்படங்களிலிருந்து அதாவது அமெரிக்காவிலிருந்தே தொடங்குகிறது. இதற்கு அமெரிக்கா பொறுப்பேற்குமா?





இது தவிர, வேறொரு மிக முக்கியமான தொழில் நுட்ப அம்சத்தையும் இங்கே சுட்டிக் காட்ட வேண்டும். தகவல் தொழில் நுட்பம் அறிவை முன்னெப்பொழுதையும் விட வேகமாக விடுதலை செய்து வருகிறது. விடுதலை செய்யப்பட்டு வரும் அறிவை இன்ரநெற் மூலம் யாரும் பெறலாம், பிரயோகிக்கலாம். இதற்கான ஆகப்பிந்திய உதாரணம் சில மாதங்களுக்கு முன்பு ஒஸ்ரேலியாவில் நடந்தது. இன்ரநெற் மூலம் ஏவுகணைத் தொழிநுட்பத்தை பெற்ற ஒரு கெட்டிக்கார ஒஸ்ரேலியர் உள்ளூரில் கிடைக்கக்கூடிய பொருட்களைக் கொண்டு ஒரு சிறிய ஏவுகணையை வெற்றிகரமாக வடிவமைத்து விட்டார். அவருக்குக்கிடைத்த வளங்களின் அளவைப் பொறுத்து ஏவுகணையின் பருமனும் வீச்செல்லையும் அமைந்திருந்தனவாம். இது இனிவரும் காலங்களில் சிறிய அளவிலான அணுக்குண்டுகளைத் தயாரிப்பது வரை போகக்கூடும்.

தொழில் நுட்ப வார்த்தைகளில் கூறினால் அமெரிக்காவின் பலமாய் இருப்பது தகவல் தொழில் நுட்பம்தான். ஆனால் அதுவே அமெரிக்காவின் பலவீனமாகவும் மாறக்கூடிய ஏதுநிலைகள் உண்டு. தகவல் தொழில்நுட்பம் ஒருபுறம் அமெரிக்காவின் பலமாய் இருக்கிறது. இன்னொருபுறம் அது அறிவை விடுதலை செய்து வருகிறது. இப்படி விடுதலை செய்யப்பட்ட அறிவை அமெரிக்காவின் எதிரிகளும் பாவித்து பலமடைய முடியும். செப்ரெம்பர் 11 தாக்குதல் இத்தகையதே.

எனவே மனிதக் குண்டுத் தொழில் நுட்பம் ஈழப்போர் அரங்கிலிருந்து தான் உலகம் முழுவதும் பரவ வேண்டும் என்பதில்லை. அப்படி ஒரு எடுகோளை வைத்துக்கொண்டு அமெரிக்கா புலிகளை அணுக வேண்டும் என்றுமில்லை.

அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகளின் இந்த இரட்டை அணுகுமுறை ஏற்கனவே பிசகி விட்டது.

இந்த இரட்டை அணுகு முறை தான் ரோக்கியோ மாநாட்டை பலியிட்டது. கடந்த ஐந்து மாத காலமாக பேச்சுக்கள் தேங்கி நிற்பதும் இந்த அணுகுமுறையின் தோல்வியே. ரோக்கியோ மாநாட்டின் தொடர்ச்சியாக கொழும்பில் அண்மையில் இடம் பெற்ற மினி மாநாட்டை புலிகள் புறக்கணித்தமையும் இந்த இரட்டை அணுகு முறைக்கு கிடைத்த தோல்விகளின் தொடர்விளைவே. இந்த இரட்டை அணுகு முறை காரணமாக பெற்ற துணிச்சலால் தான் ரணில்விக்கிரம சிங்க சர்வதேவ பாதுகாப்பு வலை பற்றிப்பேசித்திரிந்தார்.

இந்த இரட்டை அணுகு முறை அரசாங்கத்துக்கே லாபகரமானது. புலிகளைப் பொறுத்த வரை இது அவர்களுடைய பேரம் பேசும் சக்தியை ஒரு கட்டத்துக்கும் மேல் உயரவிடாது.

இந்நிலையில் தமிழர்களின் நோக்குநிலையில், மேற்குலகுடனான உறவு எனப்படுவது, கல்யாணத்தை பற்றிய உத்தரவாதங்கள் ஏதுமற்ற ஒரு சூழலில் காதலில் ஈடுபடும் ஒருதமிழ் பெண்ணுக்கிருக்கும் எல்லாப்பயங்களும் நிறைந்ததொன்று தான்.

கொழும்பிலிருக்கும் சில கற்பனை கூடிய புத்தி ஜீவிகள் விபரீதமாக சிந்திப்பது போல நிலவும் சமாதான முயற்சிகளுக்கூடாக புலிகள் சர்வதேச சமூகத்தை தமது இறுதி இலட்சியத்தை நோக்கி வளைத்தெடுக்கப்போகிறார்கள் என்பதல்ல.

மாறாக மேற்குலகின் இரட்டை அணுகு முறையின் இறுதி இலக்கு புலிகளை அரசாங்கத்தை நோக்கி வளைப்பது என்பதே சரியானது.

புலிகளை எதுவரை வளைக்கமுடியும் என்பது ஏற்கனவே எந்தவொரு பாடப்புத்தகத்திலும் சொல்லப் பட்டிராத ஒரு விசயம்.

ஆனால், புலிகளை வளைத் தெடுப்பதில் மேற்குலகிற்கிருக்கும் வரையறைகளை தீர்மானிக்கும் முக்கிய அம்சங்கள் இரண்டு. ஒன்று, புலிகளின் படைபலம். மற்றது, புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மேற்கு நாடுகளில் தம்மைப் படிப்படியாக ஸ்தாபித்து வருவதும் இதனால் ஈழப்போருக்கான சர்வதேச அளவிலான ஒரு நிதித்தளம் விரிவடைந்து வருவதும்.

இந்த இரண்டு பலங்களையும் கவனத்திற்கொண்டு எடுக்கப்படும் முடிவே சமாதான முயற்சிகளை இப்போதுள்ள தேக்கத்திலிருந்து விடுவிக்கும்.

வரும் 8ஆம் திகதி அமெரிக்கா எடுக்கப்போகும் முடிவு இந்த யதார்த்தத்தை பிரதிபலிக்கத்தவறின் அதாவது முன் சொன்ன இரட்டை அணுகு முறையின் தொடர்ச்சியாக அது அமையுமாயின் சமாதான முயற்சிகள் மேலும் இறுகி நிற்கும் வாய்ப்புக்களே அதிகரிக்கும் ●

# நறுக்கென...

## அதிகார அம்மணிக்கு....



**நாளொரு** அறிக்கையும் பொழுதொரு மறுப்பும் வெளியிடுவதில் சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகாவுக்கு நிகர் அவரேதான்.இதனை விளக்க உதாரணங்கள் தேவையில்லை. மிக அண்மையில் அவர் வெளியிட்டுள்ள 'அறிக்கை' சற்று மாறுபட்டது. 'தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழீழக் கோரிக்கையை கைவிட்டுநாட்டை இரண்டாகப் பிரிக்கமாட்டோம் என்ற ஒப்பந்தத்தில்கைச்சாத்திடும் பட்சத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குஅரசியல் 'அதிகாரங்களை வழங்குவது குறித்து ஆராயப்படும்' என்பதே அதன்சாரம்.

இங்கும் கவனிக்கவேண்டிய விடயம். உரிமைகள் வழங்கப்படும்என்று உறுதி கூறப்படவில்லை. அது குறித்து ஆராயப்படும்என்று அவர் குறிப்பிட்டிருப்பதேயாகும். விடுதலைப்புலிகள் கேட்பது அரசியல் அதிகாரங்கள் அல்ல... தமிழ்மக்களின் அரசியல் உரிமைகளையே... இதை சந்திரிகா முதலில் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

உரிமைகள் இருந்தால் அதிகாரங்கள் இயல்பாகவே இருக்கும். உரிமைகள் வழங்காது அதிகாரங்களை வழங்கும் ஒரு அரசுக்குஅந்த அதிகாரங்களை கட்டுப்படுத்தும் அல்லது நீக்கும் வல்லமையும் இருக்கும் என்பதே உண்மை.

இத்தகைய அதிகாரங்கள் சலுகைகளாகவே இருக்கும் ஆக, தமிழர்கள் தன்னிடம் சரணாகதியடைந்து தான் வழங்கும் அரசியல் பிச்சையை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றே சந்திரிகா இன்னமும் கருதுகிறார்.

தமிழீழக் கோரிக்கையோ, பிரிவினைக்கான முனைப்போ சிங்களத் தலைவர்களின் இம்மாதிரியான ஏமாற்று வார்த்தைப் பிரயோக உத்திகளின் எதிரொலியாகவே தோற்றம் பெற்றவை என்பதை சந்திரிகா போன்றோர் சுலபமாக மறந்து செயற்படுவதுதான் பரிதாபகரமான விடயம்.

அம்மணியாரே.... உங்களது அதிகாரத்தில் இருந்து எங்களுக்கும் கொஞ்சம் பிச்சை தாருங்கள் என்று நாங்கள் கேட்கவில்லை.. எங்களுக்கானஎங்களின் உரிமைகளைத்தான் நாங்கள் கேட்கிறோம்.. எங்களின் உரிமைகள் எங்களுக்கான அதிகாரங்களை எங்களுக்கு வழங்கும்.. புரிகிறதா?

## கதிர்காமரின் காட்டிக்கொடுப்பு



**திருகோணமலை** பாதுகாப்பு நிலவரம் தொடர்பாககதிர் காமர்விடுத்த எச்சரிக்கை ஒலியின் எதிரொலிகள் தொடர்ந்து ஒலித்த வண்ணம் உள்ளது.

அதியுயர் பூாதுகாப்பு இரகசியம் என்று வர்ணிக்கப்படும் ஒரு விடயத்தை, அதுவும் திருகோணமலைத் துறைமுகம், கடற்படைத் தளம்மற்றும் ஒட்டுமொத்த திருமலையின்பாதுகாப்புக்கு விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று கதிர்காமர் விடுத்த அபாய எச்சரிக்கைக்கு இந்த அளவு விமர்சனங்களும், கண்டனங்களும் வரும் என்று கதிர்காமர்எதிர்பார்க்கவில்லை.

தனது அறிக்கையும், பேட்டியும் அரசுக்கு நெருக்கடி யைஏற்படுத்தும்,சனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரங்களைப் பயன் படுத்தி ரணில்அரசுக்கு அழுத்தங்களை ஏற்படுத்த அது சாத்தியமான சூழ்நிலையை உருவாக்க உதவும், விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இது தொடர்பாக முறுகல் நிலையொன்றை ஏற்படுத்த வாய்ப்பான சூழலையும் அது உருவாக்கக்கூடும் என்றெல்லாம் கதிர்காமர் கனவுகண்டிருக்கக்கூடும்.

திருமலையின் பாதுகாப்பு நிலவரம் இந்தியாவின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் என்றுகூட கதிர்காமர் டில்லிக்கு அரசியல் காலடி எடுத்தபோது கூறியிருந்தார்.


ஆனால் அவரது நோக்கம் 'மாறி' அவரது அறிக்கையின் உள்ளபக்கம் அதியுயர் பாதுகாப்பு இரகசியங்களை வெளியிடுவதாக உள்ளது என்றகுற்றச்சாட்டுக் கண்டனம் பூதாகரமாக எழுந்துள்ள நிலையில், அவருக்கு அந்த பாதுகாப்பு இரகசியம் குறித்த தகவலை கசியச்செய்தவரான கிழக்குப் பிராந்திய கடற்படை அதிகாரியை 'காட்டிக்கொடுத்து' தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் அவரது துரோக சுபாவத்தை வெளிப்படையாகவே இனம் காட்டியுள்ளார்.

மேற்படி அதியுயர் பாதுகாப்பு இரகசியமான திருமலையின் பாதுகாப்பு தொடர்பான தகவல்களை ஊடகங்கள் மூலமாக வெளியிடும்படி கிழக்குப் பிராந்தியக் கடற்படைத்தளபதி தன்னை கேட்டுக்கொண்டதன் பேரிலேயே தான் அதை வெளிப்படுத்தியதாக கதிர்காமர் தெரிவித்துவிட்டார்.

பாவம் அந்தத் தளபதி!

சனாதிபதியின் ஆலோசகரான கதிர்காமரின் 'காட்டிக்கொடுப்புத்தனம்' குறித்து அறியாத ஏமாளியாகிவிட்டாா்.

## கோமாளிகளின் அரசும் ஏமாளிகளின் அரசியும்



**அரசாங்கத்தில்** பல கோமாளிகள் இருக்கிறார்கள். இவர்களின் தலைவராக ரணில் விளங்குகிறார். ஐக்கிய தேசிய முன்னணி அரசை ஒரு நகைச்சுவையாகவே தான் பதவியேற்றி வைத்துள்ளதாகவும் தெரிவித்திருப்பவர் சந்திரிகாவேதான்.

அருமையான உவமானம்

அரசியலில் - அதுவும் சிறிலங்காவின் அரசியலில் கோமாளிகளின் அரசியலில் - அதுவும் சிறிலங்காவின் அரசியலில் கோமாளிகளின் ஆதிக்கம் இன்று நேற்றல்ல சுதந்திரமடைந்த காலத்தில் இருந்தே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

ரணில் அரசில் பல கோமாளிகள் இருக்கிறார்கள் என்பதை சந்திரிகா அவ்வளவு தெளிவாகக் கூறக்கூடியதாக இருக்கக் காரணம், அவர்களில் பலர் முன்னர் சந்திரிகா அரசில் அவரது கோமாளித்தனமான நெறிப்படுத்தலில் உருவாக்கப்பட்டவர்கள் என்பதேயாகும்.

சந்திரிகாவின் ஏழாண்டு கால ஆட்சி ஒரு கோமாளிகளின் கும்மாளமாகவே இருந்ததை அனைவரும் அறிவர்.

ஆட்சியைக் கோமாளித்தனமாக நடத்தினார்.

போரை கோமாளித்தனமாக நடத்தினார்.

இங்கே கோமாளித்தனம் என்று குறிப்பிடுவது பொறுப்பற்ற தன்மையைத் தான்.

அவரது பயிற்சிப் பாசறையில் பயின்றவர்கள் பலர் இன்றைய அரசியல் பிரமுகர்களாக உள்ளனர்.

அதனால் தான் அவரால் நகைச்சுவைக்காக, இந்த கோமாளிகளின் அரசுக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைக்க முடிந்தது.

ஒரு கோமாளித்தனமான அரசிற்கு, சனாதிபதியாக இருப்பவர் அதியுச்ச கோமாளியாக இருக்கவேண்டிய அவசியம் உண்டு.

அது தனக்கு இருப்பதை சந்திரிகா இப்போதாவது ஒப்புக்கொண்டிருக்கிறார்.

அது அவரது ஆலோசகர்களாகவும், கோமாளிகள் இருப்பதாகவே தென்பகுதி சிங்கள ஆங்கில ஊடகங்கள் பகிரங்கமாகவே கூறி வருகின்ற நிலையில் அரசாங்கத்தில் பல கோமாளிகள் இருப்பதாக சந்திரிகாவும் கூறியிருப்பது தான் மிகவும் நகைச்சுவையான விடயம்.

கோமாளிகளின் ஆட்சியில் ஏமாளிகளாவது மக்கள் மட்டுமே...

பாவம் சிறில்ங்கா மாதா.....

## 'திருமலை'யும் ராஜபக்ஷவும்



**இதுவும்** திருகோணமலை வ!வகாரம் பற்றியதுதான். மிகுந்த பரபரப்புக்கிடையே திருகோணமலைக்கு, அங்குள்ள பாதுகாப்பு நிலவரங்களை நேரில் பார்த்து மதிப்பீடு செய்து, சனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காகச் சென்ற எதிர்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் விஜயம் புஜ்வானமாகி விட்டது போல் உள்ளது.

திருகோணமலைத் துறைமுகத்தைச் சுற்றி விடுதலைப்புலிகள் புதிதாக 13 முகாம்களை அமைத்துள்ளார்கள் என்று ஜே.வி.பி, சிஹல உறுமய உட்பட எதிர்க்கட்சிகள் பலவும் 'பேய்க்கத்தல்' போட்டதை அடுத்து சனாதிபதி சந்திரிகாவும் அரசுக்கும் கடும் தொனியிலான கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அந்தக் கடிதத்திற்குப் பதில் அளித்த ரணில் சனாதிபதியின் குற்றச்சாட்டுக்களை முற்றாக நிராகரித்ததுடன், சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில்தான் நாட்டின் பாதுகாப்பு நிலவரம் மோசமானதாகவும், தோல்விகரமானதாகவும் இருந்தது என்று குற்றம் சாட்டியும் இருந்தார்.

இதனையடுத்து 'சென்றுவருவேன் வென்றுவருவேன்' என்ற தொனியில் எதிர்க்கட்சித்தலைவர் திருகோணமலைக்கான திக்விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

உத்தியோக பூர்வமான இந்த விஜயத்தின் உள்நோக்கம் அரசின் மீது கரி பூசுவதுதான் எனினும் என்ன நடந்ததோ தெரியவில்லை. தனது திருமலை விஜயத்தில் துறைமுகப்பகுதி கடற்படைதளப்பகுதி ஆகியவற்றிற்கு நேரில் சென்ற ராஜபக்ஷ அங்குள்ள அதிகாரிகளைச் சந்தித்து சில மணிநேரம் பேச்சுவார்த்தைகளையும் மேற்கொண்ட பின்னர் வெளியிட்ட கருத்துத்தான் எதிர்க்கட்சி வட்டாரங்களைக் குழப்பத்திலும் சினத்திலும் ஆழ்த்தியுள்ளது.

'திருகோணமலைத் துறைமுகத்தை தாக்கும் இலக்குடன் விடுதலைப்புலிகள் 13 முகாம்களைப் புதிதாக அமைத்துள்ளார்கள் என்று எங்கள் மக்கள் தான் கூறுகிறார்கள் அங்கே சென்ற நான் எந்த முகாமையும் காணவில்லை'.. என்று மகிந்த ராஜபக்ஷ கூறியிருப்பதானது திருமலை விவகாரத்தை அர்த்தமற்றதாக்கியுள்ளது.

அது மட்டுமல்ல அவர் மேலும் விபரிக்கையில், 'திருகோணமலையில் தற்போது விடுதலைப்புலிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால் அதற்கேற்ப அவர்கள் வசதிகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கலாம்' என்று இப்பிரச்சினையை இயல்பான விடயமாக்கி - இது ஒரு விவகாரமேயல்ல என்றாக்கிவிட்டார்கள்.

சந்திரிகா திருகோணமலையை மையப்படுத்தி அரசுக்கு வைத்த இலக்கை ராஜபக்ஷ தட்டிவிட்டார்.

கதிர்காமர் தான் பாவம். சந்திரிகாவின் அடுத்த நகர்வுக்கான 'சதி' ஆலோசனையை திட்டமிட வேண்டியவராகிவிட்டார்.

**செங்குட்டுவன்**

## மதவடி மயிலர்



**செய்தி :-** *கூட்டணி முயற்சி தோல்வியல்ல... கருத்து முரண்பாடுகள் மட்டுமே உள்ளதுஜே.வி.பி - சுதந்திரக்கட்சி அறிக்கை.*

**மயிலர் :-** வீழுந்தாலும் மீசையிலை மண் படேல்லஎன்ற கதைதான் பாருங்கோ... முரண்பாடு கள்மட்டும் தான் உள்ளன என்றால்... அவற்றுடன் உடன்பாடுகள் காணமுடியுமெண்டு நம்புறீனம்போலகிடக்கு... இது சுட்டமண்ணும் பச்சை மண்ணும் ஒட்டுற கதைதான்.. நான் சொல்லுறது சரிதானே...

**செய்தி :-** *சுதந்திரக்கட்சிக்கு எதிராக ஜே.வி.பி எதிர்ப்பு ஊர்வலம் கண்டியிலிருந்து கொழும்புக்கு நடத்த ஏற்பாடு....*

**மயிலர் :-** சபாஷ்... சரியான போட்டி என்று கத்தவேணும் போல கிடக்கு.... தங்களுக்குள்ளேயே முட்டுப்பாடு. இந்த இலட்சணத்திலை எதிரிக்குக் குட்டுப்போட நினைக்கினம் பாருங்கோ... அது சரி இந்த பாதயாத்திரையில அநுராவும் கலந்து கொள்வாரோ? இது விமல் வீரவன்சவுக்கான கேள்வி பாருங்கோ...

**செய்தி :-** *அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்போடு ஓய்வூதியமும் உயரும்.*

**மயிலர் :-** நல்ல செய்திதான் பாருங்கோ.... ஆனால் இதோட விலைவாசியும் உயரும் எண்டு செய்தி வரும் பாருங்கோ...

**செய்தி :-** *அமெரிக்கப் படை அதிகாரிகள் 20 பேர் கொழும்புக்கு வருகை; பயிற்சிகளையும் வழங்குவர்.*

**மயிலர்:-** இதுவும் சமாதான நடவடிக்கையில் ஒன்றுதான் என்று அமெரிக்கா சொல்லுமோ... துப்பாக்கியையும் வழங்கி, பயிற்சியையும் கொடுத்து படைகளை ஊக்கப்படுத்தி விட்டு, சமாதானத்தை விரைவுபடுத்துங்கள் என்றால் என்ன மாதிரி? இதுதான் அமெரிக்க 'ஸ்ரைல' பாருங்கோ....

**செய்தி :-** *இடைக்கால நிர்[illegible]கம் அவசியம் என உலக நிதி நிறுவனங்கள் [illegible]லியுறுத்து.....*

**மயிலர்:-** உலக நிதி நிறுவனங்களுக்கு விஷயம் விளங்குது உள்ளூர் அரசியல் வாதிகளுக்குத்தான் எல்லாம் குழப்பமாக உள்ளது. இடைக்கால நிர்வாகத்திற்கு இடைக்காலத் தடை விதிக்க நடவடிக்கை எடுக்கிற கட்சிகள் எதனையும் விளங்கிக் கொள்ளாது பாருங்கோ. ஓதுவார் ஓதினாலும், கேட்கமாட்டேன் என்று அடம் பிடிப்பவர்களை என்ன செய்வது?

**செய்தி :-** *பிக்குகள் முன்னணி இன்று சத்தியாக்கிரகப் போராட்டம்.*

**மயிலர் :-** வேலை வெட்டியில்லாட்டி இப்படித்தான் தாறுமாறாக எதையாவது செய்யத் தோன்றும் பாருங்கோ.. புத்தம் சரணம், கச்சாமி என்று சொல்லிக்கொண்டு இருக்கவேண்டியவை யுத்தம் சரணம் கச்சாமி என்று சொல்ல வெளிக்கிடுகினம் போல... போற போக்கை பார்த்தால் காவியுடை காக்கியுடையாக மாறினாலும் ஆச்சரியமில்லைப் பாருங்கோ...

ஆன்மா, தன்னுடன் தானே உரையாடிக் கொள்வதற்குப் பேரே சிந்தனை. - பிளேட்டோ

# பயங்கரவாதத்தின் ஒரு பக்கவிளைவே; கொண்டாடப்படும் ஆய்வாளர்கள்

*பேராசிரியர் றோஹான் குணரத்ன ரணிலின் பாதுகாப்பு ஆலோசகர். 1984ஆம் ஆண்டில் இருந்தே சிறிலங்கா புலனாய்வுத்துறையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர் ஹாவர்ட் பல்கலைக்கழகத்தில் பயின்ற காரணத்தால் CIA இன் செல்வாக்குக்கு உட்பட்டு CIA இன் முன்னாள் தலைவரான அட்மிரல் ஸ்ட்ரான்ஸ் பீல்ட் ரேனர் போன்ற உயர் மட்ட நெருங்கிய தொடர்பு கொண்டவர். விடுதலைப்புலிகளைப் பற்றிய வதந்திகளை புலனாய்வுத்தகவல் என்ற பெயரில் அவிழ்த்து விட்டு, தனக்குள்ள தகைமைகளையும், தொடர்புகளையும் இவ்வதந்திகளை வலுப்படுத்த, பயன்படுத்துபவர். சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாதத்தில் தன்னை நிபுணனாகக் காட்டியவர் இப்போது மூக்குடைபட்டுத் தோலுரியும் கதை இது.......*

**புலனாய்வு** சேகரித்தல் என்ற நிழல் உலகத்திலே எல்லாமே வெளிப்படையாக தோன்றுவதுபோல் இருப்பதில்லை. புலனாய்வு ஆய்வாளர்கள் என்ற நிழல் உலகத்துக்கும் இது பொருந்தும் என்று தோன்றுகிறது.

உதாரணத்துக்கு றோஹான் குணரத்னவை எடுத்துக்கொள்வோம். சர்வதேச பயங்கரவாதம் என்ற விடயத்தில் உலகளாவிய அறிஞர் என்று ஊடகத்துறையினரால் புகழப்படும் அவர் அல்-குவைதாவின் உள்ளே (Inside Al - Qaeda) என்று சிறப்பாக விற்பனையாகும் நூலின் ஆசிரியருமாகும்.

தங்களுடைய சொந்த அநாமதேய தகவல் வட்டாரங்களினால் கசிய விடப்படும் தகவல்களை அடிப்படையாக வைத்து பத்திரிகைச் செய்தித்தலைப்புகளை உருவாக்கிக்கொண்டு பிரமாண்டமான தகவல் இணையங்களில் இருக்கும் விபரங்களைப்பெற்றுக்கொண்டு பயங்கரவாதத்தை எதிர்த்துப்போராட அரசுகள் போதியளவில் முயற்சி எடுப்பதில்லை என்று குற்றம் சாட்டிக்கொண்டு உலகை வலம் வந்துகொண்டிருக்கும் கொண்டாடப்படும் ஆய்வாளர்கள் என்ற புதிய இனத்தவர்களில் விரைவாக வளர்ந்து கொண்டிருக்கும் நட்சத்திரங்களில் பேராசிரியர் குணரத்னவும் ஒருவராவார்.

பெருமளவில், அவரது கருத்தைக் கவரும் விதத்திலான, நம்பிக்கையூட்டும் விதத்திலான சிறப்புப்பட்டங்களின் காரணமாக 2001 செப்ரெம்பர் 11க்குப்பின் அமெரிக்க, பிரித்தானிய, அவுஸ்ரேலிய, தொலைக்காட்சிவலையமைப்புகள், வானொலிகள், சஞ்சிகைகள் செய்தித்தாள்கள் முதலியவை, பயங்கரவாதத்தின் மீதான போர் குறித்த நிபுணத்துவமான ஆய்வுக்கென இவரைத்தேடுகின்றன.

அல்-குவைதா அல்லது பயங்கரவாதத்தைப் பற்றிய கருத்துகள் ஏதாவது தேவைப்படும் போது அதை வழங்குவதற்கு றோஹான் குணரத்ன தயாராக இருப்பார்.

இவர் யார்?

அவருடைய நூலில் தரப்பட்டுள்ள அவரைப்பற்றிய சுய தகவல்கள், அவர் உதவிப்பேராசிரியராக இருக்கும் சிங்கப்பூரின் பாதுகாப்பு மற்றும் மூலோபாய ஆய்வுகள் நிலையத்தினது உள்ளிட்ட பல்வேறு இணையத்தளங் களில் உள்ள தகவல்கள் முதலியவை, வியன்னாவிலிருந்து செயற்படும் போதைப் பொருள் மற்றும் குற்றச்செயல் தொடர் பான ஐ.நா அலுவலகத்தின் ஒரு பகுதியாக இருக்கும் ஐ.நா பயங்கரவாத தடுப்புப்பிரிவின் முதன்மை விசாரணையாளர் என அவரைக்குறிப்பிடுகின்றன.

ஆனால் வியன்னாவிலிருக்கும் ஐ.நாவின் பயங்கரவாத தடுப்பு கிளையின் முதுநிலை குற்றத்தடுப்பு, குற்றவியல் நீதித்துறை அதிகாரியான அலெக்ஸ் ஸ்மிட் (ALEX SCHMID) பேராசிரியர் குணரத்ன, தங்கள் அமைப்பில் முதனிலை விசாரணையாளராக ஒருபோதுமே சேவையாற்ற வில்லை என்று "த சண்டே ஏஜ்" (The Sunday Age) இற்குத் தெரிவித்தார். உண்மையைச் சொல்லப் போனால் முதனிலை விசாரணையாளர் என்ற பதவியே எமது அமைப்பில் இல்லை என்று அவர் தெரிவித்தார்.

"சிலகாலம், பயங்கரவாத தடுப்புக்கிளைக்கு ஆலோசகராக இருந்தார். அவர் ஒரு முதனிலை விசாரணையாளர் அல்ல. ரோக்கியோவில் உள்ள ஐ.நா பல்கலைக்கழகத்திலும் சில வேலைகள் செய்திருக்கிறார்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

காபூலின் தலிபான் ஆட்சியாளர்கள் ஆப்கானிஸ்தானில் பாமியனில் உள்ள பாரிய புத்தர் சிலைகளைத்தகர்ப்பதற்கு ஆணையிட்டு விட்டார்கள் என்று தெரிந்து கொண்ட அந்த 2001 மார்ச் மாதத்தின் தினமானது ஆன்மீகரீதியாக வரையறை செய்யும் ஒரு கணமாக இருந்தது என றோஹான் குணரத்ன விவரிக்கிறார்.

ஆனால் இதற்கு ஆறு மாதங்களின் பின் நிகழ்ந்த நவீன உலகத்தின் குறியீடு ஒன்றின் - அதாவது நியூ யோர்க்கின் உலக வர்த்தக மைய மாடி களின் அழிப்புத்தான் அவரது வாழ்க்கையை அதிக நடைமுறை ரீதியாக மாற்றியது. சர்வதேச பயங்கரவாதம் தொடர்பான உலகளாவிய அறிஞர் என்ற விண்ணை முட்டும் தொழிலை அது அவருக்குப் பெற்றுத்தந்தது.

சரியான நேரத்தில் சரியான இடத்தில் இருக்கும் 'சரியான' மனிதராக குணரத்ன இருந்தார்.

உலகத்தின் ஊடகத்துறை வெளியீட்டகங்கள் எல்லாம் உலகம் எப்படி மாறிவிட்டது? ஏன் மாறிவிட்டது என்பதை தெளிவு படுத்தக்கூடிய நிபுணர்களைத் தேடிக்கொண்டிருந்தன. அந்த வேளையில் சிறிலங்காவில் பிறந்தவரான இந்தக் கல்விமான் பெரும் 'திறமைசாலி'யாகக் காணப்பட்டார். ஒஸாமாபின்லேடனின் அல்-குவைதா வலை அமைப்புப் பற்றிய பாரதூரமான எச்சரிக்கைகளை அவர் வழங்கிக்கொண்டிருந்தார்.



செப்ரெம்பர் 11 தாக்குதல்கள் நிகழும் வரை குணரத்னவின் அங்கீகரிக்கபபட்ட நிபுணத்துவம் தமிழீழ விடுதலைப்புலிகளின் அல்லது தமிழ் புலிகளின் நடவடிக்கைகளுக்கே மட்டுப் படுத்தப் பட்டிருந்தது என்பது பற்றி எவரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

2002 மேயில், அவுஸ்ரேலிய விசேட வான் சேவைகள் படையினர் பின்லேடனின் ஆதரவாளர்களை தென்கிழக்கு காபூ லில் தேடிக்கொண்டிருந்தனர். குணரத்னவின் நூலான "அல் - குவைதாவின் உள்ளே: பயங்கரவாத வலையமைப்பு" (Inside Al-Qaeda Network Of Terror) சுடச்சுட விற்பனையாகும் நூலாகியது. அதையொட்டி குணரத்னவின் புகழும் வளர்ந்தது. இஸ்லாமிய பயங்கரவாதம் தொடர்பான உலகின் முன்னணி நிபுணர்களில் ஒருவர் என அவர் புகழப்பட்டார்.

42 வயதான குணரத்ன நிரம்பலும் கேள்வியும் என்ற அடிப்படை விதியினால் செலுத்தப்பட்ட வெற்றி அலையில் மிதந்தார். கருத்தைக்கவரும் மேற்கோள்களை அல்லது தலைப்புகளை தரக்கூடிய புலனாய்வு, பகுப்பாய்வு நிபுணர்கள், ஊடகத்துறையினர் வெளியீட்டாளர்களுக்கு போதிய அளவில் கிடைக்கவில்லை. இந்த வெற்றிடத்தை நிரப்புவதில் மகிழ்ச்சியடைபவராக குணரத்ன காணப்பட்டார். சில சமயங்களில், தனது சொந்தப் புலனாய்வு வட்டாரங்களை அடிப்படையாகக் கொண்டவை என அவரே கூறிக்கொள்ளும் திடுக்கிட வைக்கும் தகவல்களையும் அவர் வெளியிடுவதோடு, குடிசார் உரிமைகள் பற்றிய மிகை அக்கறை கொள்வதாகவும் பயங்கரவாதத்துக்கு எதிராக போதுமான அளவு செய்வதில்லை என்று கன்பரா உள்ளிட்ட அரசுகளைக் குற்றம்சாட்டுவார்.

பெயாபாக்ஸ் (Fair Fax) இனால் வெளியிடப்படும் செய்தித்தாள்கள் உள்ளிட்ட அவுஸ்ரேலிய ஊடகங்கள் இஸ்லாமிய பயங்கரவாதம், தொடர்பான கேள்விக்கிடமில்லாத முன்னணி நிபுணர் என்ற நிலைக்கு உயர்த்தி விட்டன. குறிப்பாக கடந்த வருடம் இடம் பெற்ற பாலி குண்டு வெடிப்புக்கு பின் இது நிகழ்ந் துள்ளது. ஆனால் இந்த ஊடகங்களை திருப்திப் படுத்தும் விதத்திலான கருத்துத் தெரிவிப்பாளர்கள் என்ற புதிய இனத்தைச் சேர்ந்த குணரத்னவும் ஏனையவர்களும் அறிவு சார்ந்த பகுப்பாய்வுக்கும் அரசியலுக்குமிடையேயான வேறுபாட்டைத் தெளிவற்றதாக ஆக்கிவிடுவதோடு, அநாமதேயமான புலனாய்வு முதல்களை அடிப்படையாகவைத்து ஆய்வுகளை மேற்கொள்வதும் சில வட்டாரங்களிலே கவலையை ஏற்படுத்தியுள்ளது.

பயங்கரவாதிகள் உருவாக்கக்கூடிய அபாயங்கள் பற்றி சுட்டிக்காட்டும் ஆய்வாளர்களுக்கும் அதனால் அதிகரிக்கின்ற பயச்சூழல் காரணமாக இலாபமீட்டக்கூடிய தனியார் பல்கூட்டு நிறுவனங்களுக்குமிடையேயான நிதி ரீதியான தொடர்பும் ஆராயப்பட்டுவருகிறது.

ஜெம்மா இஸ்லாமியாவலையமைப்பின் தலைவர் என்றும் அல்குவைதாவின் முதுநிலை உறுப்பினர் என்றும் கூறப்படு பவருமான ஹம்பாலி அடிக்கடி அவுஸ்திரேலியாவுக்கு வந்து போயிருக்கிறார் என்பது போன்ற குணரத்னவின் பரபரப்பூட்டும் விதத்திலான கூற்றுக்களை அவுஸ்திரேலியபுல, சமூகத்தின் உறுப்பினர்களுள் குறிப்பாக ASIO ஐச்சேர்ந்தவர்கள், நிராகரிக்கும் போக்கை கொண்டிருப்பதாக அறியப் படுகின்றது.

பிரித்தானியாவிலோ, "த ஒப்சேவர்" இதழின் உள்ளூர் விவகாரங்களுக்கான ஆசிரியரும் இஸ்லாமிய பயங்கரவாதக்குழுக்கள் பற்றி நீண்ட காலம் எழுதி வருபவருமான மாட்டின்பிறைற். "பின்லேடன் பற்றிய நிபுணர்களில் ஆகக்குறைந்த நம்பகத்தன்மை கொண்டவர்" என குணரத்னவை விவரிக்கிறார். கடவுள் அருள் வெளிப்பாட்டு சக்தி கொண்டவர் (Apocalyptic) போல் குணரத்ன மீது தங்கியிருக்கலாம் என்பதால், இஸ்லாமிய பயங்கரவாத சந்தேக நபர்களுக்கு எதிரான வழக்குகளில் அவரை, நிபுணத்துவ சாட்சியாளராக பிரித்தானிய அதிகாரிகள் அவரை அடிக்கடி பயன்படுத்துகிறார்கள்.

அவுஸ்திரேலியாவிலிருக்கும் ஊடகவியலாளரும் புலனாய்வு விவகாரங்களில் ஆய்வாளராக இருப்பவருமான பிறையன் ரூஹி (Brian Toohey) குணரத்னவின் சிறப்புப்பட்டங்கள் குறித்து வெளிப்படையாகவே கேள்வி யெழுப்புபவர்களில் ஒருவராக இருக்கிறார். "தானே தன்னை பிரகடனப்படுத்திக்கொண்ட நிபுணர்" என்று குணரத்னவை வர்ணிக்கும் அவர் அவருடைய கூற்றுகளில் சிலவற்றை "வெறும் முட்டாள் தனமானவை" என்று நிராகரித்து விட்டிருக்கிறார்.அவுஸ்திரேலிய /இஸ்ரேலிய மற்றும் யூத விவகார கவுண்சிலின் 'றிவீயு' இதழில் பயங்கரவாத குழுக்கள், 10,000 - 20,000 வாக்குகளை பெற்றுக்கொடுப்பதன் மூலம் அவுஸ்ரேலிய அரசியல்வாதிகள் மீது செல்வாக்குச் செலுத்தக்கூடும் என்று 2001 நவம்பரில் குணரத்ன தெரிவித்திருப்பதை அவர் இதற்கு உதாரணமாகக் குறிப்பிடுகிறார்.

மோனாஸ் பல்கலைக் கழகத்தின் உலகளாவிய பயங்கரவாதம் தொடர்பானமைய புத்தாய்வு உறுப்பினராகவும் தேசிய மதிப்பீட்டு அலுவலகத்தில் 2002 ஆம் ஆண்டு வரை முதுநிலை பயங்கரவாத ஆய்வாளராக இருந்தவருமான டேவிட் றைற்நெவில் இருக்கிறார். அவர் நேரடியாக குணரத்னவையோ அல்லது வேறு தனிப்பட்ட ஆய்வாளர்களையோ சுட்டிக் காட்டாவிட்டாலும், வேறு எந்த தொழிலிலும் போலவே பயங்கரவாதம் தொடர்பான நிபுணர்கள் எனப்படுபவர்களின் இயலுமைகள், மிகச்சிறப்பானவை என்பதிலிருந்து கேள்விக்கிடமானவை எனப்படுவதுவரை வேறுபடுகின்றன என்று கூறுகிறார். பொதுமக்களின் அறியும் ஆர்வம் என்ற கேள்வியை நிரம்பல் செய்யக்கூடிய ஆய்வாளர்கள் மற்றும் நிபுணர்களின் தட்டுப்பாடும் இதற்கு ஒரு வகையில் காரணமாகும் என நெவில் றைற் கூறுகிறார்.

ஊடகங்களுக்கு தங்கள் ஆய்வுகளைத் தெரிவிக்கும் போது தெரிந்த உண்மைகள் என்ற திடமான நிலத்தை விட்டு தெரிந்த உண்மைகளிலிருந்து பெறப்பட்ட தங்கள் மதிப்பீடுகளுக்குள் எப்போது போகிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்தாத பொழுது பிரச்சினைகள் எழுகின்றன என்று அவர் கூறுகிறார்.

சில ஆய்வாளர்களால் பயன்படுத்தப்படும் அடையாளம் தெரிவிக்கப்படாத புலனாய்வு அல்லது பாதுகாப்பு துறை வட்டாரங்கள் இன்னுமொரு காரணியாகும் என்கின்ற நெவில்றைற் புலனாய்வு அமைப்புக்கள் எல்லாமே ஒரே அளவிலான நம்பகத் தன்மையைக் கொண்டிருப்பதில்லை என்றும், குறிப்பாக சில தென்கிழக்கு ஆசிய நாடுகளின் அமைப்புகள் அதிகளவில் அரசியல் மயப்படுத்தப்பட்டவையாகதங்கள் அரசுகளின் உத்தேசங்களுக்கமைவாக தகவல்களை வெளிக்கொண்டு வருபவையாக இருக்கின்றன. புலனாய்வு அமைப்புக்களிலே இருக்கின்ற தனிநபர்கள், பொது மக்களுடைய வாதப்பிரதிவாதங்களின் மீது செல்வாக்குச்செலுத்தும் விதத்திலான தகவல்களை ஆய்வாளருக்கு அல்லது ஊடகங்களுக்கு கசிய விடுவார்கள் என்கிறார்.

தகவல்கள் பெறப்படுகின்ற சூழல்கள் மிக முக்கியமானவை புலனாய்வு தகவல் முதல்களின் மீது அதிகளவு நம்பிக்கை வைக்கா மலிருப்பது மிகமுக்கியமானது. புலனாய்வு என்பது திட்பநுட்பமான அறிவியல் துறையாக இல்லை என்பதே இதற்கு காரணமாகும் என்று றைற் நெவில் மேலும் கூறுகிறாா

(அடுத்தவாரமும் வரும்)

ஆங்கிலம் மூலம் :- கறி ஹியூஸ்
தமிழில் :- வின்சென்ற்புளோறன்ஸ்

# ஒகோ! அப்படியா!



மகிந்த விஜய சேகரா. கண்காட்சி திறப்பு விழாவில

சமாதானத்தை ஏற்படுத்த சனாதிபதி விரும்பினும் சூழவிருப்போர் இடமளிப்பதில்லை.

## ஒகோ !அப்படியா!



டக்ளஸ். லங்காதீபவிற்கு.

நாங்கள் பனங்காட்டு நரிகள் எமக்கு பயமில்லை. வடபகுதி மக்களை புலிகளின் பாஸிஸவாத நடவடிக்கையிலிருந்து காப்பாற்றும்வரை நாங்கள் போராட்டத் தைக் கைவிட மாட்டோம்.

## ஒகோ !அப்படியா!



அனுரா ஸ்ரீ.சு.க உறுப்பினர் கூட்டம்

எனது பேச்சுக்கள் மூடத்தனமானவை என ஐ.தே.க இனர் கூறிவருகின்றனர்.

## ஒகோ !அப்படியா!




கதிர்காமர் ஒரு அரசியல் வாதியல்ல. இராஜதந்திரியாக இருக்கமுடியும்.

## ஒகோ !அப்படியா!



மங்கள சமரவீர செய்தியாளர்களிடம்

ஐக்கிய தேசியக் கட்சியின் இப்போதைய தலைவரைப் பார்க்கும் போது சு.பிறேமதாஸா எவ்வளவோ நல்லவர் போல் தெரிகிறார்.

## ஒகோ !அப்படியா!




மகேஸ்வரன். செய்தியாளர்களிடம்.

குடாநாட்டில் பாசையூர் குருநகர், பொம்மைவெளி பகுதி களில் 75 நாட்களில், 750 வீடுகள் அமைக்கப் படவுள்ளது.



நன்றி: கேணல் சங்கர் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு தினமான இன்று வெளியிடப்படும் **சங்கரண்ணா!** என்ற நூலில் இருந்து....

**சாவு உனது முடிவல்ல**



## சரித்திரம் மறக்காத சோக நிகழ்வு

மனிதன் பிறக்கும்போதே சாவும் அவனோடு சேர்ந்து பிறப்பெடுக்கிறது. அந்தச்சாவின் பிடியிலிருந்து யாரும் தப்பிவிட முடியாது; யாரும் ஓடியொளிந்துகொள்ளவும் முடியாது. அது வாழ்வின் ஒரு நிகழ்வாக, என்றோ ஒரு நாள் எதிர்கொள்ளப்படவேண்டியதுதான். இப்படிக்கூறி நாம் சங்கர் அண்ணையினுடைய சாவிற்கு ஆறுதல் கூறமுடியாது. அவரது சாவு தனி மனிதனின் மரணம் அன்று; ஒரு சகாப்தத்தின் முடிவும் அன்று. சரித்திரம் மறக்காத சோகநிகழ்வு; தமிழினத்தின் தேசிய ஆன்மாவை உசுப்பிவிட்ட நிகழ்வு. சுதந்திர வேட்கையைக் கொழுந்து விட்டெரியச் செய்த நிகழ்வு.

சங்கர் அண்ணையினது வாழ்வுப் பாதை வித்தியாசமானது; தனித்துவமானது. மனிதர்களது இருப்பைவிட மனிதர்களது செயற்பாடு தான் முக்கியமானது என வாழ்ந்து காட்டியவர். அவர் அறிமுகமான நாள் முதல் அவருக்குள் ஓர் ஆழ்ந்த சக்தி இருப்பதைக் கண்டேன். அது அவரது அனுபவத் திரட்சியாகவும் ஆளுமை வீச்சாகவும் எல்லோரையும் ஈர்த்தது. அது எமக்கிடையே ஆழமான நட்பாக வளர்ந்தது. நான் அவரை ஆழமாகவே நேசித்தேன்.

எமது விடுதலை இயக்கம் நெருப்பாறுகளைத் தாண்டிய வேளைகளிலும், புயல்களையும் பூகம்பங்களையும் சமாளித்த வேளைகளிலும், எரிமலைகளை எதிர்த்து நின்று எதிர்நீச்சல் போட்ட வேளைகளிலும் அவர் என்னோடு உறுதுணையாக நின்றார். விதையாக இடப்பட்ட எமது இயக்கம் முளைத்து, துளிர்த்து, பெருவிருட்சமாக எழுந்து நிற்கின்ற ஒவ்வொரு வளர்ச்சிப் பாதையிலும் அவர் உறுதியாகப் பங்கெடுத்தார்.

அவர் கண்ணியமானவர்; நேர்மையுள்ளவர்; இரக்க சிந்தனையாளர்; எல்லாவற்றுக்கும் மேலாக ஓர் இலட்சியவாதி. அந்த இலட்சியவாதியினது இழப்பு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு. அந்த இலட்சியவாதியினது வழியிலேயே அவரது குடும்பமும் ஒன்றிப்போயிருந்தது. அந்த வகையில் அவரது உடன்பிறப்புகளில் மூவர் இந்த விடுதலைப் போரிற்கு தம்மை அர்ப்பணித்திருக்கிறார்கள்.

அவரது மூளையத்தின் மென்மையான இழைகளில் தவழ்ந்த உள்ளத்து உணர்வுகளை நான் அறிவேன். அவரது பசுமையான நெஞ்சத்திற் பற்றியெரிந்துகொண்டிருந்த விடுதலை வேட்கையையும் நான் அறிவேன். அவர் உண்மையில் இறந்துவிடவில்லை; எமது விடுதலை வரலாற்றின் உயிர்மூச்சாகத் தொடர்ந்து வாழ்கிறார்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

வே.பிரபாகரன்
தமிழீழத் தேசியத் தலைவர்,
தமிழீழம்.

# உயிர்மூச்சாகத்தொடரும் கேணல் சங்கர்



**எனது இதயத்தின் துடிப்பு**

யாரும் சத்தம் போட்டு, நீ என்று கதைத்தாலே அதைத் தாங்கும் இதயம் எனக்கு இல்லை.

அப்படிப்பட்ட என் வாழ்க்கை எதையும் தாங்கும் இதயமாகிவிட்டது.

காலத்தின் கோலம்.

1977 இல் கப்டன் பண்டிதருடன் எனது மைத்துனர் வசீ (லெப். சித்தார்த்தன்), எனது அம்மப்பாவிடம் கிணற்று வெடி மருந்து கேட்டு வீட்டிற்கு வந்தபோதே ஓரளவு புரிந்துகொண்டேன்.

1978ஆம் ஆண்டு மனோகரனுக்கும் (கப்டன்.கரன்) எனக்கும் திருமணப் பேச்சு வந்தபோது, சொந்த மைத்துனர் என்பதால் மறுப்புத்தெரிவிக்கவில்லை.


தமையனார் சொர்ணி (கேணல் சங்கர்) திருமணமாகாது இருக்கும் போது ஏன் தம்பி கரனிற்குத் திருமணம் பேசுகிறீர்களென மாமியிடமே கேட்டபோது ஒரு கடிதம் எடுத்துத் தந்தார் 77 ஆம் ஆண்டு சொர்ணியால் தம்பியாருக்கு எழுதப்பட்ட கடிதம். தமிழீழம் தான் என் இலட்சியம். திருமணம் வேண்டாம். 7 மணி பஸ் பழுதடைந்தால் 8 மணிபஸ் போகவேணும்தானே போகட்டும் என்று கடிதவரிகள் அமைந்திருந்தன.

சரி இரண்டாவது மைத்துனர் சொர்ணியும் நாட்டுக்கான போராட்டத்திற்காக... புகுந்த வீட்டிற் போராட்டக்காறர்கள். என்ன செய்கிறது என்று இருக்க, புகுந்த வீட்டின் தலைவி - மாமி திடீரென மாரடைப்பால் இறந்துவிட்டார்.

எனது அப்பா தபாலதிபராக இருந்த போது, சிறிமா ஆட்சிக்காலத்திற் சிங்களச் சோதனை சித்தியடையாததால் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டபோது ஏற்பட்ட தாக்கம் அடிமனத்திற் கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருந்தது. அந்தத் தாக்க வெறியால் ஒற்றுமையாகப் புகுந்த வீட்டின் போக்கில் என்னை மாற்றிக்கொண்டேன்.

வெளிநாட்டிலிருந்து வந்த மைத்துனர் சொர்ணி, ஒரு பொறியியலாளராக இருந்தும் சும்மா இருப்பது பலருக்கும் கேள்விக்குறியானதைச் சமாளிக்க மன்னாரில் இரண்டு மீன்பிடி ரோலர்களை வாங்கி விட்டதுடன், என் கணவரும் அவரது தம்பியுமான கரனுக்கு, 18.09.80 இல் தனது பிறந்த நாளன்று ஒரு மாட்டுப்பண்ணையையும் ஆரம்பித்துக்கொடுத்தார்.

1980 ஆம் ஆண்டே, போராட்டத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என முத்திரை குத்தாதகுறை. இராணுவம், பொலிஸ், சி.ஐ.டி. என வருவார்கள். எப்படி எப்படிக் கதைக்க வேண்டும் என்று முன்னெச்சரிக்கையாகக் கூறிவிடுவார்கள். புலிகளுடன் தொடர்பு எனத் தங்களைப் பற்றி விசாரிக்கத் தொடங்க அதிலிருந்து தப்பிக்கொள்ளத் தாங்களே தங்களைப் பற்றி பெட்டிசன் போடுவார்கள்.



"புளொட்டுடன்" தொடர்பு என்று அதில் இருக்கும் இராணுவத்தினரும் பொலிசாரும் குழம்பி விடுவார்கள். இவர்கள் நல்லா இருப்பது பிடிக்காமல் இப்படிப்பெட்டிசன் வருகுது என இராணுவத்தினரும் பொலிசாரும் நினைத்தனர்.

1983இல், சித்தாவின் கைதைத் தொடர்ந்து, இராணுவ பொலிஸ் கெடுபிடியால், வெளிநாடு போவதாகக் கூறிவிட்டுச் சொர்ணி இந்தியா சென்றார். பெண் சகோதரிகள் இல்லாத, ஆறு ஆண் சகோதரர்களைக் கொண்ட குடும்பம் எனது புகுந்த வீடு.

நான்தான் அங்கு முதற்பெண். தங்கள் சகோதரிபோலவே என்னைக் கருதினர். எப்படி என்னை வளர்த்தார்கள் என்று எழுத வார்த்தைகள் இல்லை.

தூசுபட்டால் தூசுக்கும் கூடத் தண்டனை கொடுக்க முடிந்தாற் கொடுக்கத் தயங்க மாட்டார்கள். அப்படி ஒரு நுணுக்கமான கவனிப்பு.

1983 இல் ஒவ்வொருவராகப் புறப்பட நான் தனிமைப்படத்தொடங்கினேன். இயக்கச்செயற்பாடுகளில் எல்லோரும் ஈடுபடத்தொடங்க, தனிமை அதிகரித்துச் சென்றது.

என்னைக் கரடுமுரடாக வளர விட்டிருக்கலாமே என அடிக்கடி கேட்டுப் பேசி அழுவேன். பதில் ஏதும் பேசாது தலை குனிந்து நிற்பார்கள்.

05.10.1987 இல் கரன் வீரச்சாவடைய, 5வருடங்கள் விதவையாக இருந்தேன்.

04.05.1992 இல் பிள்ளைகள் இருவருடன் என்னைப் பொறுப்பேற்றார் சொர்ணி.

இந்தியாவில் இருந்த என்னை 1990ஆம் ஆண்டு நாட்டுக்கு அழைத்தார் சொர்ணி. இருந்தும் 1992 இலேயே என்னைத் திருமணஞ்செய்தார். இரண்டு வருடம் திருமணத்தைத் தள்ளிப்போட்டமை பற்றிப் பலருங் காரணம் கேட்டனர். திருமணத்தின் பின் ஒரு நாள், "இரண்டு வருடமாக முடிவு செய்தியளா?, என்ன குழப்பம்" என்று சொர்ணியிடம் கேட்டேன். "நீ திரும்ப விதவையாயக் கூடாதென்ற காரணத்தால் முடிவெடுக்க முடியவில்லை" என்றார். ஆனால் இன்று இரண்டாவது தடவையாக விதவையாகி உள்ளேன். எனக்கு ஏற்பட்டது ஒருவருக்கும் நடக்கக்கூடாது.

வேறு எவருக்கும் இப்படி நடந்ததாக நான் கேள்விப்படவும் இல்லை. கடவுளை நம்பினேன். இருநாள் முன் கனவு ஒன்று கண்டேன் இரண்டாவது தடவை வராது என நம்பினேன். ஆனால்...

இறுதி மூச்சே நாடு என்பார். எல்லோரும் முன்னேறவேணும், படிக்க வேணும், பண்பு, நேர்மையுடன் வாழ வேணும் என்பார்.

நகம் அளவேனும் எரிச்சல், பொறாமை, பொய், பெருமை எதுவும் இல்லாத தூய்மையானவரைக் கணவனாகக் கொண்டு அவரோடு சிறிது காலமே வாழ்ந்தாலும் அதுவே போதும்.

சில நேரங்களில் மனஸ்தாபங்கள் ஏற்படும். கூறுவார் செருப்பு இல்லாததற்குக் கவலைப்படக் கூடாது. கால் இல்லாதவனை நினை. செருப்பில்லாத கவலை இராது என்பார்.

மேலே பாராது கீழே பார் என்பார். கிளைமோரில் போனாலும் போவேன் என வாய் கூசாமாற் கூறுவார். எரிச்சற்படுவேன். தலைவர் இருக்கும் வரை ஒரு குறையும் விட மாட்டார். தலைவரை நம்பு என்பார்.

தலைவர் காலத்தில் தமிழீழம் நிச்சயம், எல்லாம் விடுதலையின் பெயரால் பொறுமையாக இரு என்பார்.

வீட்டைக் கவனிக்காது நாடு, நாடு என்று திரிந்தாலும் பிள்ளைகளின் படிப்பில் அக்கறை காட்டினார். எல்லோரின் பிள்ளைகளும் படித்து முன்னேறவேண்டும் என்ற ஆசை நிறைய உண்டு.

தன்னைப்போலப்பிறரை நேசிக்கும் குணம் படைத்த மனிதர்கள் சிலர். அதில் ஒருவர் இவர்.

சுயநலமற்ற தன் குணத்தையும், நாட்டின் தேவையையும் எங்கள் மூவருக்கும் ஊற வைத்துவிட்டுப் போட்டார்.

அழுவதற்காகக் கட்டப்பட்ட சமாதி யல்ல எனக்கூறி அடிக்கடி துயிலும் இல்லம் செல்வார். எனக்கு அடிக்கடி துயிலுமில்லம் போய்ப்பார்க்கும்மனநிலை இருக்கவில்லை. தாங்கும் சக்தி இல்லை. தற்போது துயிலும் இல்லமே கதி என ஆக்கிவிட்டார்.

சூகா
மனைவி

# நேர்நோக்கு

## ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டம்

யாழ் குடாநாட்டிலுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் சில பகுதிகளை அகற்றி அங்கு மக்களை மீளக்குடியமர அனுமதித்தல் தொடர்பாக கடந்த வியாழக்கிழமை சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலகத்தில் நடைபெற்ற மாநாடு தோல்வியில் முடிவடைந்திருக்கிறது. படைஅதிகாரிகளின் விடாப்பிடியாக நின்று கோரிக்கை விடப்பட்ட எப்பகுதியிலுமே மக்களை குடியமர அனுமதிக்கமறுத்து விட்டனர்.

இந்த உயர்மட்ட மாநாடு சிறிலங்காவின் தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சரான தி.மகேஸ்வரனின் கோரிக்கையின் பேரில் கூட்டப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இது தோல்வியில் முடிந்ததாகவும் அவரே அறிவித்திருக்கிறார்.

இந்த முட்டுக்கட்டை நிலை அல்லது சமாதானத்தை அடைவதற்கான பாதையில் மாறாத தடைக்கல்லாக அமைகின்ற இந்த விடயத்தில் சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் மட்டுமல்ல சிறிலங்கா அரசாங்கமே விடாப்பிடியாக நிற்கிறது என்பது ஐயமின்றி நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

சமாதானப்பேச்சு வார்த்தைகளின் ஆரம்பகட்டத்தில் அமைக்கப்பட்ட பாதுகாப்பு உபகுழுக்கள் பலமுறை கூடிய போது யாழ். குடாநாட்டின் பெரும் பகுதியை ஆக்கிரமித்து நிற்கின்ற அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் ஏதாவது மாற்றத்தை ஏற்படுத்தி கடந்த 13 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து துன்பமுறும் மக்களுக்கு விமோசனம் கிடைக்க வழிசெய்ய முடியுமா? என்றே விடுதலைப் புலிகள் முயற்சி செய்தனர். ஆனால் அம்முயற்சியால் பயனெதுவும் கிட்டவில்லை.

பேச்சு வார்த்தைகளின் போதுகூட இவ்விடயம் முக்கியமான இடத்தைப்பிடித்திருந்தது. ஆனால் அவற்றின் போது ஒப்புக்கொள்ளப்பட்ட யாழ் நகரின் மத்தியில் அமைந்துள்ள ஞானம் விடுதி பாதுகாப்பு வலயம் கூட இன்னமும் அகற்றப்படவில்லை. இந்தப்பாதுகாப்பு வலயத்தை அகற்றுவதற்கு மக்களுக்கு இடைஞ்சலை ஏற்படுத்தக்கூடிய இடங்களில் முகாம் அமைக்க அனுமதிக்க வேண்டுமென்று படைத்தரப்பு கோருகிறது.

இவ்வாறு நகரின் மத்தியில் உள்ளமுகாமை அகற்றுவதற்கே வேறிடம் கோரும் படைத்தரப்பு யாழ். குடாநாட்டின் பெரும் பகுதியை ஆக்கிரமித்துள்ள அதியுயர் பாதுகாப்பு வலயங்களைக்கைவிடும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

இப்பொழுது நடைபெற்றுள்ள உயர்மட்ட மாநாடு தோல்வியில் முடிந்தமைக்கு படைத்தரப்பு மட்டும் காரணமல்ல. ஏனெனில் அன்று சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன வெளியிட்ட அறிக்கையொன்று, இறுதித்தீர்வு ஏற்படும் வரை அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படமாட்டாது எனக்கூறுகிறது. இதுவே அரசாங்கத்தின் தீர்மானம் என்பது புலப்படுகின்றது. எனவே அமைச்சர் மகேஸ்வரன் இது தொடர்பாக இனிமேல் தனது அரசாங்கத்துடனேயே பேச்சுக்களை நடத்தவேண்டும்.

ஆனால் பாதிக்கப்பட்ட மக்கள் இவ்விடயத்தை இத்துடன் விட்டுவிடுவதாக இல்லை. அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்கு எதிராக தொடர்ச்சியான மறியல் போராட்டங்களை நடத்த அவர்கள் தீர்மானித்துள்ளார்கள்.

அடுத்ததாக இவ்விவகாரத்தை ரணில் விக்கிரமசிங்க ஐ.நா.மன்றத்தில் உரையாற்றவுள்ள சமயத்தில் ஐ.நா.செயலாளரின் கவனத்திற்கு கொண்டு செல்ல முயற்சிக்கின்றனர்.

அத்துடன் உயர்பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே படையினர் நிலை கொண்டுள்ள தமது வீடுகளை மீள ஒப்படைக்கக்கோரி வழக்குத்தாக்கல் செய்யவும் திட்டமிட்டுள்ளனர்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இம்மக்களுக்கு தற்காலிக அகதி முகாம்களை அமைத்து வேறு இடங்களில் குடியமர வைக்க அரசசார்பற்ற நிறுவனங்கள் சில மேற்கொள்ளும் முயற்சிகளை முற்றாக நிராகரித்து வருகின்றனர்.

எந்த ஒரு நாட்டினது படையும் அந்நாட்டு மக்களை குடியிருப்புகளிலிருந்து விரட்டியடித்துவிட்டு அங்கு படைத் தளங்களை அமைத்துக்கொள்ளாது. அவ்வாறு செய்யும் படையொன்றை ஆக்கிரமிப்புப்படையென்றே அழைக்கமுடியும்.

தமிழ் மக்கள் சிறிலங்காப்படைகளை எப்பொழுதும் அவ்வாறு தான் கருதி வருகின்றனர். இப்பொழுது சமாதான முயற்சிகள் இடம்பெற்று வருகின்ற வேளையில் மக்களைப் பாதுகாக்கவெனக்கூறி ஆக்கிரமித்துக்கொண்ட சிறிலங்காப் படையினர் அந்த இடங்கள் எல்லாம் தமது பாதுகாப்புக்குத் தேவையெனக்கூறி விலகமறுப்பது இதனை மேலும் உறுதி செய்கிறது. எனவே ஆக்கிரமிப்புக்கெதிராக குரல் கொடுப்பவர்கள் யாழ்.குடாநாட்டில் சிறிலங்காப்படையினர் பிரகடனப்படுத்தியுள்ள அதியுயர்பாதுகாப்பு வலயத்துக்கு எதிராக குரல் கொடுக்கவேண்டும். இதற்கு எதிராக தமிழ் மக்கள் நடத்திய/ நடத்தி வரும் எத்தகைய போராட்டத்தையும் ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டமாகவே கருதவேண்டும்.

**வேலவன்**

# உலகின் மிகவும் கடினமான சைக்கிள் ஓட்டப்போட்டி



உலகின் முதலாம் இலக்கச் சைக்கிள் ஓட்டப் போட்டி என்றும், கடினத்தில் ஒப்பற்றதென்றும் வர்ணிக்கப்படும் டூவர் டி பிரான்ஸ் (Tour de France)2003 ல் தனது நூறாவது வருட நிறைவைக் கொண்டாடியுள்ளது. 1903 ஆம் ஆண்டு தொடக்கம் இப்போட்டி ஒவ்வொரு வருடமும் யூலை மாதத்தில் நடைபெறுகின்றது. தொடங்கி முடிவுற இப்போட்டி மூன்று வாரங்களுக்கு கூடுதலாகவும் ஒரு முழு மாதத்திற்குக் குறைவாகவும் எடுக்கின்றது.

போட்டியில் பங்குபற்றுவதற்கு உலக நாடுகள் பலவற்றிலும் இருந்து வீரர்கள் பிரான்சு நோக்கி வருகின்றனர். அண்மைக்காலமாக அமெரிக்கர்கள் இப்போட்டியில் தொடர்ச்சியாக சாதனை படைத்து வருகின்றனர். ஆம்ஸ்ரோங் என்பவர் கடந்த மூன்று வருடங்களாக முதலாம் இடத்தைப்பிடித்துள்ளார். இவருடைய வெற்றியின் சிறப்பிற்கு இன்னுமோர் காரணம் உண்டு. இவரொரு முன்னாள் புற்றுநோயாளர்.


ஒவ்வொரு வருடமும் கோடை வெய்யில் எறிக்கும் காலத்தில் இப்போட்டியை கண்டு கழிப்பதற்காக ஒரு மில்லியனுக்கும் கூடுதலான சைக்கிள் 'பைத்தியங்கள்' பிரான்சிற்கு வருகை தருகின்றனர். தொலைக்காட்சி சேவை நடத்தும் நிறுவனங்களும் பிற ஊடகத் துறையினரும் ஓட்டம் நடக்கும் இடங்களில் தமது முகவர்களை நிறுத்தி போட்டியை ஊக்குவிப்பதோடுதாமும் இலாபம் சம்பாதிக்கின்றனர்.

சரி, இனி ஓடவேண்டிய தூரம் பற்றிய விபரங்களை கவனிப்போம். 3000 மைல் அதாவது 4800 கிலோமீற்றர் தூரத்தைப்பந்தயத்தில் பங்குபற்றுவோர் ஓடி முடிக்க வேண்டும். பிரான்சின் செயின்ற் டெனிஸ் விளையாட்டரங்கில் ஓட்டம் ஆரம்பித்து தலைநகர் பாரிசின் ஆலேசா (ELYSEES) சனாதிபதி மாளிகைக்கு அண்மையில் முடிவுறும். பிரான்சின் மலைப்பகுதிகளின் ஊடாகச்செல்லும் நெடுஞ்சாலைகள் ஓட்டப்பந்தயத்திற்கு ஒதுக்கப்படுகின்றது.

ஓட்டக்காரர்கள் ஆறு பெரு நகரங்களில் தங்கிச்செல்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வாறு நகரங்களின் நான்கு மலை உச்சிகளிலும் மிகுதி இரண்டு சற்று பதிந்த உயரத்திலும் காணப்படுகின்றன. நெடுஞ்சாலைகள் ஏறியும் இறங்கியும் செல்வதால் சைக்கிள் ஓட்டம் ஒரு சாவாலாகத்தான் அமைகின்றது. இப்போட்டி மனித வலு மற்றும் சைக்கிள் தொழில்நுட்பம் ஆகியவற்றுக்கு சமகாலத்தில் விடப்படும் சவால் என்றால் மிகையல்ல.

இவ்வோட்டப்பந்தயத்தில் பங்குபற்றுவோர் பயன்படுத்தும் மிதிவண்டிகள் ஓட்டப்பந்தயத்திற்காகவே உறுதியான ஆனால் எடை குறைந்த உலோகங்களால் தயாரிக்கப்படுகின்றன. மிதிப்பதற்கு இலகுவாக இருப்பதற்காக சைக்கிளின் 'பார்' என்று நாம் அழைக்கும் அடிச்சட்டம், (FRAME) சக்கரங்கள், (WHEELS) கியர், பிறேக் என்பன கணனி மூலம் வடிவமைக்கப்படுகின்றன. சடுதி நிறுத்தம் மிகவும் முக்கியம் என்ற காரணத்தால் பிறேக் வடிவமைப்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படுகின்றது.

உலகின் தலைசிறந்த மிதிவண்டிகள் யாவும் கேபிள் (CABLE BRAKE SYSTEMS) பிறேக் ஒழுங்கமைப்பையே கொண்டிருக்கின்றன. அமெரிக்காவின் ஷிமானோ (SHIMANO) நிறுவனம் பிறேக் மற்றும் கியர் தயாரிப்பில் முதலிடம் வகிக்கின்றது. இந்த நிறுவனத்தின் தயாரிப்புகளை பிறநாடுகளில் சைக்கிள் தயாரிக்கும் நிறுவனங்கள் கொள்வனவு செய்து தமது தயாரிப்புகளில் பொருத்துகின்றன. பிரித்தானியாவின் ஸ்ரேமி ஆக்கர் (STURMY ARCHER) நிறுவனம் தரமான மிதி வண்டிக்கியர்களை தயாரிக்கின்றது ஷிமானோவுடன் ஒப்பிடும்போது ஸ்ரேமி ஆக்கர் இரண்டாம் இடத்தில் நிற்கின்றது. ஜப்பான் நாடும் கியர் பிறேக் போன்றவற்றை தயாரிக்கின்றது. ஆனால் தரத்தில் அவை மிகவும் குறைவானவை.



மெக்லைற் 909 மக்னீசியம் பைக் (MAGLIGHT 909 MAGNESIUM BIKE)




சர்வதேசப்போட்டிகளில் பங்குபற்றும் தரமுள்ள 'றேசிங் பைக்ஸ்' (RACING BIKES) மிகவும் பெறுமதி வாய்ந்தவை. இப்படியான வண்டிகள் கூட்டுத்தயாரிப்பாகவே வெளிவருகின்றன. இந்த ரக உயர்தர வண்டிகளின் அடிச்சட்டம் கணனியின் கட்டளைப்படி றோபோ எந்திர சாதனங்களால் வெல்டிங் (WELDING) செய்யப்படுகின்றன. விளக்கமாக கூறுவதாயின் எமது நாட்டுச் சைக்கிள்களின் பார் 'குலைச்சு' போன்ற செருகும் குளாய்கள் மூலம் ஒன்றிணைக்கப்படுகின்றன. ஆனால் ஓட்டப்போட்டிச்சைக்கிள்களின் பார் குலைச்சைப்பயன்படுத்தாமல் ஒன்றிணைத்து எலற்றிக் வெல்டிங் முறையில் ஒட்டப்படுகின்றன.

பிரான்சின் ஓட்டப் போட்டியில் பங்கு பற்றும் பலவற்றுள் ஒரு வண்டியை இப்போது ஆய்வுக்கு எடுப்போம். அது நிச்சயம் ஒரு கூட்டுத் தயாரிப்பு என்பதில் சந்தேகமில்லை. பிரன்சு, ஜேர்மனி, அமெரிக்கா, அல்லது தாய்வான் போன்ற நாடொன்றின் முன்னணித் தொழிற்சாலையில் அது ஒன்றிணைக்கப்பட்டிருக்கும். அதற்குரிய உதிரிப்பாகங்கள் பிற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கும். பின்பு இத் துறையில் கைதேர்ந்த பொறியியலாளர்கள் இறுதி வடிவம் கொடுப்பதில் முனைப்பாக ஈடுபடுவர்.

இந்த ரகச்சைக்கிள்கள், தங்கம், வெள்ளி, செம்பு என்று மூன்று தலைப்பின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன. தாய்வானின் மெரிடா இன்டஸ்றி கொம்பனி (MERIDA INDUSTRY COMPANY) தயாரிக்கும் மெக்லைற் 909 மக்னீசியம் பைக் (MAGLIGHT 909 MAGNESIUM BIKE) தங்கம் என்று தரப்படுத்தப்பட்ட ஒரு வண்டி என்பதை ஆர்வலர்கள் அறிவர். இது மிகவும் உயர்வாக போற்றிப் புகழப்படும் வாகனம். உலகின் எடைகுறைந்த உலோகங்களில்ஒன்றான மக்னீசியம் இதன் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகின்றது. ஒரு உதாரணதிற்காகவே இதை ஆய்வுக்குஎடுக்கின்றோம்.

இந்த வண்டியின் முன் 'போக்' (FORK) கார்பன் பைபர் (CARBON FIBER) எனப்படும் வைரத்தின் வலுவுள்ள இரசாயனக் கலவையும் கண்ணாடி நார் நூலிழையும் ஒன்றாக்கி அதில் உருவாக்கப்பட்டது. இந்த ரகபோக் எம் 90 சிஎப் (M90CF) என்று வகைப்படுத்தப்படுகின்றது. பிறிதோர் இடத்தில் கூறப்பட்டது போல் இந்த வண்டியில் பொருத்தப்பட்ட பிறேக்கும் கியரும் ஷிமானோ நிறுவனத் தயாரிப்பாகும். றிம், கம்பிகள், என்பன தாய்வானில் செய்யப்பட்டவை. விசேடம் என்னவென்றால் முன்னுக்கும் பின்னுக்கும் ஒரே எண்ணிக்கையில் கம்பிகள் கொழுவபட்டுள்ளன. கம்பியின் எண்ணிக்கை ஒவ்வொரு சக்கரத்திலும் எட்டு மாத்திரமே.



இந்த வண்டியின் ரயர்கள் ஜேர்மனியின் புகழ்பூத்த கொன்றினென்ரல் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டவை. நைலோன் இறப்பர்கலவை கொண்டு தயாரிக்கப்படும் கொன்றினென்ரல் சைக்கிள் ரயர்கள் (CONTINENTAL BIKE TIRES) உலகின் மிகவும் கூடுதலாக விற்பனையாகும் மிகச் சிறந்த ரயர்களில் ஒன்றாகும். றேசிங் சைக்கிள்களில் பொருத்தப்படும் விசேட இருக்கைகள் பெரும்பாலும் இத்தாலியில் தயாரிக்கப்படுகின்றன. செல்லே இத்தாலியா (SELLEI TALIA) என்ற நிறுவனம் தயாரித்த இருக்கைகள் மெக்லைற் 909 சைக்கிளில் பொருத்தப்பட்டுள்ளன. பிரித்தானியாவின் புறூக்ஸ் (BROOKS) நிறுவனம் முன்பு தரமான சைக்கிள் இருக்கைகளை தயாரித்தது, இப்போது சீற் தயாரிப்பை புறூக்ஸ் நிறுத்தி விட்டது.

சைக்கிள் என்பது எம் போன்ற வசதி குறைந்தோரின் வாகனம் என்று எண்ணுவது தவறு. பணத்திற்கு ஏற்ற பொருளை நாம் கொள்வனவு செய்கிறோம், கிடைப்பது மட்டமானவைதான். எமது தேவையும் வித்தியாசமானது. ஆனால் ஒன்றை மாத்திரம் நினைவில் இருத்த வேண்டும், உலக விளையாட்டரங்கில் சைக்கிள் உன்னதமான இடத்தை வகிக்கின்றது. மனித உடல் வலு, மனவுறுதி போன்றவற்றிற்கு ஈடுகொடுத்து உழைக்கும் வாகனம் சைக்கிள் ஒன்று மாத்திரமே. இன்றைய உலகின் மக்களால் பாவிக்கப்படும் மிதிவண்டிகளின் எண்ணிக்கையை மதிப்பிடமுடியாது. அவை பல கோடிகளைத்தாண்டி, அதற்கும் அப்பால் சென்றுவிட்டன. பிறிதோர் வாகனத்திற்கு இந்தச் சிறப்புக் கிடையாது.

மிதிவண்டிகள் பற்றிய ஆய்வாளர்கள் கண்ணோட்டத்தில் அவை நான்கு வகைப்படுகின்றன.

(அ) நாளாந்திரப்பாவிப்புக்கான சாதாரண சைக்கிள்கள்.

(ஆ) வலது குறைந்தோருக்கான விசேட வசதிகள் பொருத்தப்பட்ட சைக்கிள்கள்

(இ) ஓட்டப்போட்டிக்கான சைக்கிள்கள்.

(ஈ) பாதை இல்லாத மலை, காடு, மணல் பிரதேசங்களில் பயணிப்பதற்காக தயாரிக்கப்பட்ட 'மவுன்ரின் பைக்ஸ்' (MOUNTAIN BIKES) ஈ ரகச் சையிக்கிள்கள் மிகவும் பலமானவை, றிம்கள் அகலமாகவும் தடித்த ரயர்கள் பொருத்துவதற்கு ஏற்ற வகையில் இருக்கின்றன. மேட்டுப் பூமியில் இருந்து பள்ளத்தை நோக்கி இந்த ரகச்சைக்கிளில் ஓடிக் கொண்டு பாயலாம். அவ்வளவு பலமானது.

'ராண்டம்' (TANDEM) எனப்படும் மிதிவண்டிகள் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டும். இதில் இரு இருக்கைகள், இரு சோடி பெடல்கள், இரண்டு கான்டில்கள் (HANDLES) பொருத்தப்பட்டுள்ளன. இருவர் இதில் ஏறிக் கொண்டு, இருவருமே மிதித்துக் கொண்டு செல்லலாம். ரோந்து செல்லும் இராணுவத்தினர் உல்லாசப்பயணம் செல்லும் கணவன் மனைவியர், காதலர்கள், நண்பர்கள் போன்றோர் இதை அதிகமாகப் பயன் படுத்துகின்றனர். ஆனையிறவு இராணுவ முகாம் எம் வசம் வீழ்ந்த பின் இந்த ரக வண்டிகள் எமக்கு கிடைத்தது நினைவிருக்கலாம்.

நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டிகளில் சையிக்கிள் ஓட்டம் முக்கிய இடம் வகிக்கின்றது. உலக நாடுகளின் தலைசிறந்த ஓட்ட வீரர்கள் இதில் பங்குபற்றுகின்றனர். இந்தப்பந்தயத்தில் வெற்றியீட்டும் சைக்கிள்களைத் தயாரிக்கும் நிறுவனத்திற்கு பேரும் புகழும், வர்த்தக விளம்பரமும் கிடைக்கின்றது. உதிரிப்பாகம் தயாரிக்கும் நிறுவனத்திற்கும் அதேயளவு அனுகூலம் உண்டு. உலக நாடுகள் ஒவ்வொன்றிலும் சையிக்கிள் ஓட்டப் போட்டிகள் இடைவிடாது நடைபெறுகின்றன. போட்டிகளின் நோக்கங்களில் ஒன்று ஒலிம்பிக்ஸ் போட்டியில் பங்கு பற்றுவோரைத்தெரிவு செய்வதாகும். அமெரிக்காவின் 'பணத்திற்காக ஓடாதவர்களின் மிதி வண்டிச்சங்கம்' வருடம் பூராகவும் நெடுஞ்சாலை ஓட்டம், அரங்க ஓட்டம் என்பனவற்றை நாடு தழுவிய ரீதியில் நடத்துகின்றது. இதன் பின்னணியில் மிதி வண்டித்தயாரிப்புடன் தொடர்புடைய நிறுவனங்கள் செயற்படுகின்றன. அமெரிக்காவின் கல்வி நிலையங்களும், பல்கலைக்கழகங்களும் தமக்கிடையில் பல சுற்று மிதிவண்டிப்போட்டிகள் நடத்துகின்றன.

மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஒன்றிணைந்து அனைத்துலக மிதிவண்டி ஒன்றியத்தை (UNION CYCLISTE INTERNA TIONALE) உருவாக்கி ஓட்டப்போட்டிகளை நடத்துகின்றன. நாளாந்திர மிதிவண்டிப் பாவனையில் டென்மார்க், நெதர்லாந்து, பிரான்சு ஆகிய நாடுகள் மேற்கு ஐரோப்பாவில் முன்னணி இடம் வகிக்கின்றன. இந்த நாடுகளில் அதியுயர் பதவி வகிப்போரும் சாதாரணரும் ஒன்றாக சையிக்கிள் மிதித்தபடி தெருவில் போவதைக்காண முடியும். சனநாயக வாகனம் என்ற ரகம் இருக்குமாயின் அது மிதிவண்டியாகத்தான் இருக்கும்.

உலகின் முதலாவது மிதிவண்டியை ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த இரும்புக்கொல்லர், கேர்க்பற்றிக் மெக்மிலன் (KIRKPATRICK MACMILLAN) 1840 இல் உருவாக்கினார். அது ஓடுபவரின் எலும்பை நொருக்கும் கருவி. அதில் தடித்த இரும்பினாலான றிம் மாத்திரம் இருந்தது, ரயர் இல்லை. இலகுவாக ஓடுவதற்கு ஏற்ற போல்ஸ் (BALLS) அதில் கிடையாது. சில வருடங்களில் மிதிவண்டிக்கான 'கல்லுரயர்' கண்டு பிடிக்கப்பட்டது. 1888இல் ஜோன்போயிற்டன்லப் (JOHN BOYD DUNLUP) இன்றைய உருவத்திலான காற்றடித்து ஓடும் ரயர் ரியூப்பை கண்டு பிடித்தார். மிதிவண்டி வரலாற்றில் 1840, 1888 என்பன மைல் கற்களாகும்.

முதலாவது சைக்கிள் ஓட்டப்போட்டியை நடத்திய நாடு (1903) பிரன்சு என்பது வரலாற்றுச் செய்தி. அதேபோல் முதலாவது மோட்டார் சையிக்கிள் போட்டியை நடத்திய நாடும் (1906) பிரஞ்சு தான். உலக மட்டத்தொழில் நுட்ப வளர்ச்சியின் அளவீடுகளில் ஒன்றாக "இரும்புக்குதிரை" என்று அழைக்கப்படும் மிதிவண்டி கருதப்படுகின்றது. எத்தனை வளர்ச்சியைக் கண்டாலும் மிதிப்பதை மாத்திரம் தவிர்க்க முடியாது.

மிதிவண்டியின் வளர்ச்சிப் போக்கை இன்னுமொரு வகையில் அவதானிக்கலாம். இந்தியாவின் ஹீரோ (HERO) சையிக்கிள் நிறுவனம் 1956 இல் நாளொன்றுக்கு 25 சையிக்கிள்களை மாத்திரம் தயாரித்தது. 2003 இல் வெளிவந்த தகவலின்படி அது நாளொன்றுக்கு 20,000 (இருபதாயிரம்) சையிக்கிள்களைத்தயாரிக்கின்றது. இதை சாதனைப்பட்டியலை பிரசுரிக்கும் கின்னெஸ் நிறுவனம் உறுதிப்படுத்துகின்றது. உலகின் மிகக்கூடுதலான மிதிவண்டிகளைத் தயாரிக்கும் நிறுவனம் என்றும் ஹீரோ சிறப்பிக்கப்படுகின்றது.

•


அன்பரசு

துயரம், கடன் எதையும் திருப்பிச் செலுத்துவதில்லை. — ஜான்ரே

# விழுதுகள் அல்ல, வேர்கள்

இக்காலப்பகுதியில் ஐயாவின் பேரன் "கண்டு" IPKF தடுப்பிலிருந்து தப்பி ஓடுகின்றார். இச் சந்தர்ப்பத்தை அடுத்து IPKFஇனர் கண்டுவின் சகோதரர்களான கண்ணன், நாதன் இருவரையும் கைது செய்து ஐயாவின் சேனைப் பயிர்த் தோட்டத்திற்கு வந்தார்கள். ஐயாவின் முன்னிலையில் கண்ணன், நாதன் இருவர்மீதும் மண்ணெண்ணை ஊற்றிவிட்டு தீப்பெட்டியை ஐயாவிடம் கொடுத்து தீவைக்கும்படியும் அப்படியில லாவிட்டால் பேரன் கண்டுவைத் தம்மிடம் ஒப்படைக்கும்படியும் கேட்டனர். இந்நெருக்கடி நிலையைச் சமாளிக்க "கண்டுவை" ஒப்படைக்கப்பொறுப்பு ஏற்று நின்றவராயினும் அதனைச் செய்யவில்லை. ...

# எம்தேசம் மதிக்கும் சிற்றூர் பெரியவர்



திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஆலங்கேணி ஊரிலிருந்து சுமார் பத்துக் கிலோமீற்றர்கள் தொலைவில் சுங்கான்குழி சிற்றூர் உள்ளது.

எப்பொழுதும் சுங்கான் குழிக்குளத்தில் நீர் தேங்கி இருக்கும். நெற்பயிர் செய்கைகளுக்கு ஏற்ப நீர் திறந்து விடப்படும்.

இவ்வூர் மக்கள் வரண்ட நிலங்களைப் பயன்படுத்தி விவசாய நிலங்களாக்கினர். நாளுக்கு நாள் செழிப்புற்று வளர்ச்சி அடைந்து கொண்டிருந்தது. இவ்வூர்மக்கள் கால்நடை வளர்ப்பிலும் முன்னேற்றம் கண்டனர்.

இவ்வூர் வளர்ச்சிக்கு முன்னோடியாக விளங்கியவர் தம்பிராசாஐயா. கடின உழைப்பும்.வழிகாட்டுதலும். சிறந்தகுணங்களுக்காகவும் ஐயா அவ்வூர் மக்களால் பெரியவராக மதிக்கப்பட்டார்.

அறுபத்திஐந்து வயதான ஐயா முதுமையிலும் தளர்ச்சியற்றவராய் இயங்கினார். தேசிக்காய் அளவு சிறிய குடுமி. தோளில் சால்வைத்துண்டுடன் தான் ஐயாவை எப்பொழுதும் காணமுடியும். ஒட்டுமொத்தமாக தமிழ்த்தேசியத்தின் அடையாளத்தை தன்னுள் ஆழமாகப் பதித்த ஒரு தமிழராகவே வாழ்ந்தார்.

ஐயாவிற்கு தமிழ்த்தேசிய அரசியல் பற்றிய தெளிவு - அது தொடர்பாக நீடு தோக்குகிற அரசியல் பார்வை இருந்தது.

மாறி மாறி இந்த நாட்டை ஆண்டு வந்த அரசாங்கங்கள் தொடர்ச்சியாக மேற்கொண்ட ஏமாற்றுப் போக்குகளுடனான அரசியலையும் சிங்கள அரசியல் சக்திகளின் அயோக்கியத்தனங்களையும் மெய்யாக காணத்தக்க வகையில் இருந்தது ஐயாவின் அரசியல் அனுபவம்.

இவ் அரசியல் அனுபவம் ஆயுதப் போராட்டத்தைமுன்னெடுக்கும் போராளிகளை அரவணைப்பதை தனிச்சிறப்பிற்குரிய பணியாக ஐயாவை அப்போதே உணரவைத்திருந்தது.

1985. 1986 ஆம் ஆண்டுகளில் போராளிகளின் நடமாட்டம் இச்சிற்றூரில் வெளிப்படத் தொடங்கியது. போராளிகளின் நகர்வுகள். உணவு ஏற்பாடுகள். ஓய்வு எடுக்கும் இடைத்தங்கல் என கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக இவ்வூர் மாற்றம் அடைய ஆரம்பித்தது. ஐயாவின் எதிர்பார்ப்பும் நிறைவேறத்தொடங்கியது.

சிங்கள மேலாதிக்க ஆக்கிரமிப்பு சக்திகளுக்கு எதிராகப்போராடும் போராளிகளின் ஆயுதத்தை ஐயா முதல் முதலாகக்கண்டு. தொட்டுத் தூக்கிப் பார்த்தார். போராளிகளை மதித்து நோக்குகிற ஐயாவின் பண்பு போராளிகளை மகிழ்ச்சியூட்டும் ஊராக இச்சிற்றூரை உணர வைத்தது.

ஐயாவின் போராட்டப்பணி காலப்போக்கில் விரிவடைந்தது. பிள்ளைகள். பேரப்பிள்ளைகள். உறவினர்கள். அயலவர்கள் என அனைவரையும் தமிழ்த் தேசிய உணர்வினுள் கலக்கச்செய்தார்.

உணவு சமைத்துக் கொடுத்தல். பாதுகாப்பான இரவுத்தங்கல் ஒழுங்குகளை ஏற்பாடு செய்தல். பாதைகளை இனங்காட்டுதல். உணவுப் பொருட்கள். வெடிபொருட்கள் என்பனவற்றை மாட்டு வண்டில்கள் மூலம் ஏற்றியிறக்குதல் ஆகிய பணிகளை மிகுந்த ஆர்வத்துடன் இவ்வூர் மக்கள் செய்து கொடுத்துப்போராளிகளுக்கான பின்புலப் பாதுகாப்புப்படையாக இயங்கினார்கள்.

ஐயாவின் மூத்த மகள் வீடு. பேரப்பிள்ளைகள்வீடு. உறவினர் வீடு. சேனைப்பயிர் இடம். என அனைத்தும்போராளிகள் ஓய்வு எடுத்து வரும் இடமாகவும். சில நாட்கள் தங்கும் முகாமாகவும் மாறியது.

இத்தனை மனநிறைவான செயற்பாடுகளுக்கு மத்தியிலும் ஐயாவின் மனஓரத்தில் ஒரு வேதனை ஒட்டிக்கொண்டிருக்கத்தான் செய்தது. சிலவருடங்களாகத் தொடர்ந்து வரும் வேதனையை ஒரு தடவை மூத்த உறுப்பினர் புலேந்தி அம்மானிடம் பகிர்ந்து கொண்டார். அது சுங்கான் குழிப்பாடசாலையின் நலமேம்பாடு பற்றியதாகும்.

இதனையடுத்து புலேந்தியம்மான் அவ்ஊர் மக்களின் ஒத்துழைப்புடன் சிரமதானப்பணியினை மேற்கொண்டார். கல்வியை மேம்படுத்தல். ஊட்டச் சத்து வழங்குதல் ஆகிய ஒழுங்குபடுத்தலுடன் பாடசாலையை நன்னிலைக்குக்கொண்டு வந்தார். ஐயாவும் அவ்வூர் மக்களும் விடுதலைப் புலிகள் மீதிருந்த பற்றுதலை இன்னும் வலுவாக்கினார்கள்.

ஐயா மேல் நிறைந்த மதிப்பும் மரியாதையும் கொண்டு பழகும் அயலவர்கள். உறவினர்கள் தம் பாசத்தையும் அன்பையும் வெளிப்படுத்த அடிக்கடி போராளிகளைச்சந்தித்தார்கள்.

இப்படி இருக்கையில் தான் 1986ஆம் ஆண்டு முள்ளிப்பொத்தானை மினிப்பொலிஸ் நிலையம் மீது வெற்றிகரமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலுக்கான விளக்கக் கலந்துரையாடல். சாப்பாட்டு ஒழுங்கு. ஓய்வு அனைத்தும் இச்சிற்றூரிலேயே நடைபெற்றது. கைப்பற்றப்பட்ட ஆயுதங்களுடன் விக்கி. மது. வரதன். பரமன்.பரதன்.வாகீசன்.சறோன். வசந். அலோசியஸ். சமுத்திரன் ஆகிய போராளிகள் வந்து சேர்ந்தார்கள்.

**இ.கபிலன்**

எதிரியிடம் கைப்பற்றிய ஆயுதங்களை ஐயா தூக்கிப் பார்த்து இந்த ஆயுதங்களாலேயே சிங்களவனுக்கு அடிகொடுக்க வேண்டுமென தன்முனைப்பான கருத்தை வெளியிட்டார்.

ஐயா ஒரு சில தடவைகள் பாதை வழிகாட்டியாக காந்தி என்ற போராளியின் தலைமையில் அல்லைக் கந்தளாய் வேவுக்காகச் சென்று வந்தார். இச்சந்தர்ப்பங்களில் தானும் ஒரு போராளி என்ற எண்ணப் பாங்குடன் செயற்பட்டார்.

போராட்டப்பணிகள் தவிர்ந்த ஏனைய நேரங்களில் வயல்களுக்குச் சென்று மற்ற வேலையாட்களுடன் தானும் ஒருவராக நின்று ஏர் பிடித்துழுவார். விதை விதைப்பார். நாற்று நடுவார். களை எடுப்பார். எதைப்பற்றியும் கவலைப் படுவதில்லை. உடல் உழைக்க வேண்டுமென்பதில் அவர் உறுதியாகவே இருந்தார். உழைப்பு என்பது ஒவ்வொரு குடிமகனுக் குமுரியகடமை என்பதுஅவரின் கருத்தாகும்.

காலநகர்வில் இவ்வூர் சிங்களப்படைகளின் பருந்துப் பார்வைக்குள்ளாகியது. அரச படைகளின் சுற்றிவளைப்புக்கள் வருடத்திற்கு ஒரு தடவையென்ற நிலையிலிருந்து மூன்று மாதத்திற்கு ஒரு தடவையென்று இறுக்க நிலைக்குள்ளாகியது.

இச்சுற்றிவளைப்பினுள் போராளிகள் அகப்பட்டு உயிர்தப்பிய நிகழ்வுகளுமுண்டு. ஐயாவின் வயதான தோற்றம் அரசபடைகளின் கவனத்தை ஈர்ப்பதில்லை. அப்படியிருப்பினும் ஐயா எருமை மாடுகளைச் சாய்த்துக்கொண்டு வெளியேறித் தப்பித்துக்கொள்வார். மகன். பேரப்பிள்ளைகள் போராளிகளைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் சென்று விடுவார்கள்.

ஒருசில சுற்றிவளைப்புக்கள் பற்றிய தகவல்களை ஐயா மூலம் போராளிகள் முன் கூட்டியே அறிந்து கொண்டு சுலபமாகப்பின் வாங்கிப் பாதுகாப்பாகச்சென்ற நிகழ்வுகளுமுண்டு. சுற்றிவளைப்பில் ஈடுபட்ட அரச படைகள் முழுமையாக ஊரை விட்டு விலகிச்சென்றதனை உறுதிசெய்து போராளிகளுக்குத் தெரியப்படுத்துவதில் ஐயா கவனம் செலுத்தி வந்துள்ளார்.

நெருக்கடியான கால கட்டங்களில் ஐயா மாலையானதும் ஆடுகளைச்சாய்த்துக்கொண்டு வந்து கொட்டிலுக்குள் கட்டி விட்டு சேனைப்பயிரின் இரவுக் காவலுக்குச் சென்று விடுவார். காலையானதும் காவல் குடிசைக்குப் பின்புறம் நின்று வயல்வெளிகளைப் பார்ப்பார். பூமிக்கு பச்சைக்கம்பளம் விரித்து அழகு பார்ப்பது போன்று எங்கும் பசுமையே நிறைந்திருக்கும். அத்தோடு குயில்கள் கூவும் இனிய சங்கீதத்தைக் கேட்டுக்கொண்டு. தூரத்தில் போராளிகள் ஆயுதங்களுடன் வரம்பில் நடப்பது தெரிந்ததும் ஐயா தேனீர் கொடுப்பதற்கான தயார் நிலையில் இருக்கும் நிகழ்வுகள் அவ்வப்பொழுது நடைபெறும்.

ஐயாவின் மூத்த மகள் உணவு சமைத்துக் கொடுப்பதிலும். மகன் ராசா போராளிகளுக்குத் தேவையான உணவு. அத்தியாவசியப்பொருட்கள் கொள்வனவு செய்துகொடுப்பதிலும் நிலமைகளை அறிந்து சொல்வதிலும் ஈடுபடுவார்கள். இன்னொரு மகள் வாதநோயால் பாதிக்கப்பட்டு படுக்கையில்தான் காலத்தைக் கழிப்பவர். ஐயாவின் அரவணைப்பே பொன்னாளுக்கு. அப்படியிருக்கின்ற போதும் போராளிகளுக்கு தேனீர் போடச் சீனி இல்லையென்றால் பொன்னாள் அக்காள் தனக்குரிய தன் சிறியசீனிப்பாசலை தன் தலைமாட்டிலிருந்து எடுத்துக்கொடுத்து தேனீர் வழங்க உதவுவார். ஒரு சந்தர்ப்பத்தில் போராளிகளான சறோன். கபிலன் சுற்றிவளைப்பில் உயர்தப்பியதற்காகத் தன் தலையில் பிள்ளையார் கோயிலைச்சுற்றிக் கற்பூரச்சட்டி நேர்த்தியை ஐயாவின் உதவியுடன் செய்தார்.

பேரப்பிள்ளைகள் பாதை வழிகாட்டிகளாகவும். முகாமிற்குத் தேவையான பொருட்களை மாட்டு வண்டில்களில் ஏற்றி இறக்குபவர்களாகவும் உதவினார்கள்.

இவ்வூர் மாடுகள் சலங்கை ஒலியுடன் மண் தெருவில் நடக்க வண்டிலில் போராளிகள் மாடுகளை விரட்டிக்கொண்டு பிரயாணம் செய்வதில் ஏற்படும் மகிழ்ச்சி தனியானது. இத்தகைய பிரயாணங்கள் பட்டியனூற்றிலிருந்து வைராவெளித்துறை. சாவாறு துறை. கல்லறப்புத்துறை என நடைபெறும்.

இத்தகைய காலகட்டத்தில்தான் இந்திய - இலங்கை ஒப்பந்தம் 1987 ஆம் ஆண்டு மத்திய காலப்பகுதியில் கைச்சாத்தாகியது.

தமிழீழத் தமிழர்கள் தாய் மண்ணுக்காக உரிமைக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் போது அந்த விடுதலைப் போரை தனது பிராந்திய அரசியல் நலனுக்கு உரியமுறையில் பயன்படுத்திக் கொள்ளவே இந்தியா தன் படைகளை IPKF ஆகத் தமிழீழத்திற்குள் அனுப்பி வைத்தது.

இதன் பின்பு ஒரு சில மாதங்களில் IPKF உடனான போர் ஆரம்பித்தது. இவ் வரலாற்று நெருக்கடி மிகுந்த காலகட்டங்களில் கூட ஐயா சோர்ந்து விடவில்லை. ஒதுங்கியும் வாழவில்லை. மாறாக முனைப்புடன் செயலாற்றி வந்தார்

1988 ஆம் ஆண்டு நடுக்காலப்பகுதியில் ஐயாவின் சிற்றூர் IPKF முகாமாக மாறியது. போராளிகள் நடமாட்டம் இவ்வூரில் இல்லாமல் போனது. ஆனாலும் பக்கத்து ஊரான குரங்குப்பாஞ்சன் காட்டுப் பகுதியில் போராளிகள் நடமாடும் செய்தி ஐயாவிற்கு கிடைத்ததும் இடையிடையே ஐயா போராளிகளைச் சந்திப்பார்.

IPKF இனர் ஐயாவை உள்வாங்கும் பலதரப்பட்ட அணுகுமுறைகளைக் கையாண்டும் அனைத்தும் தோல்வியையே சந்தித்தன. சரஸ்வதிப் பூசை காலத்தில் ஆயுதபூசை நடைபெறும் நாளன்று ஐயா வீட்டிற்கு IPKF இருவர் வந்து ஆயுத பூசையில் கலந்துகொள்ள வரும்படி தம் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதனைத் தெரிவித்து அழைத்த போது ஐயா செல்ல மறுத்துவிட்டு "நான் ஒரு அணியுடனே தான் சேர்ந்து சாப்பிடுகின்றவன். இன்னொரு எதிரான அணியுடன் சேர்ந்து சாப்பிடுகின்றவன் அல்ல" என்று சொன்னார். இதனை அடுத்து ஐயா கைது செய்யப்பட்டு முகாம் கொண்டு செல்லப்பட்டு சில மணித்தியாலங்களின் பின் விடுதலையும் செய்யப்பட்டார். "திமிர்பிடித்த கிழவன்" என்று அவர்கள் சொல்லிப்பேசியதனை பின்னாளில் ஐயா போராளிகளிடம் நினைவு கூர்ந்தார்.

IPKF இனர் தண்ணீர் எடுப்பதற்கு சுங்கான்குழிப் பகுதிக் குளத்திற்கு அண்மையில் உள்ள கிணறு ஒன்றுக்கு வந்து செல்லும் தகவலைப் போராளிகள் அறிந்தனர். இதனையடுத்து மூன்று போராளிகளால் IPKF இனர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் இரு IPKF இனர் காயங்களுடன் தப்பிச் சென்றனர். இச்செய்தியுடன் போராளிகளைச் சந்தித்தார் ஐயா.

இதன் பிற்பாடு 1989ஆம் ஆண்டு காலப்பகுதியில் கச்சக்கொடித்தீவு என்னும் இடத்தில் வைத்து IPKF மீதான தாக்குதல் ஒன்று வரதன். குணம். விசு ஆகிய முன்னணிப்போராளிகளால் மேற்கொள்ளப்பட்டது.

இத் தாக்குதலைச் செய்த போராளிகளின் வீரம் வரலாற்றில் பதியப்பட வேண்டியது.

அதாவது பட்டப்பகலில் பத்துப் போராளிகள் நிலை எடுத்துக் கொண்டு கிண்ணியா முகாம் IPKF இனரைச் சண்டைக்கு வரும்படி அழைப்பு விடுத்தனர்.

போராளிகளைப் பொறுத்தவரையில் எந்த நிலையையும் சந்திக்கத் தயாராகவே இருந்தார்கள்.

IPKF இனர் எந்த நேரமும் முற்று முழுதான சுற்றிவளைப்பிற்குள் தம்மை உள்வாங்கலாம் என்ற நிலையில் போராளிகள் முழுமையான அர்ப்பணிப்பிற்குத்தயாராகவே இருந்தனர். இலக்கை எய்தவேண்டும் என்ற எண்ணமே அவர்கள் மனதில் நிறைந்திருந்தது.

அதன்படி வந்த IPKF மீது தாக்குதல் மேற்கொண்டு படையினர் சிதறியோடினர். குறிப்பிட்ட தூரம் IPKF இனரைத் துரத்திச் துரத்திச் சுட்டார்கள். தாக்குதலில் போராளிகள். தாக்குதற் திறன் வாய்ந்த "பிறண் LMG" ஒன்றையும் கைப்பற்றினர். அத்தாக்குதலில் கப்டன் ரஜனியை இழந்தார்கள்.

இத் தாக்குதலிற்குப் பின்புல ஆதரவுகளை இச் சிற்றூர் மக்கள் ஐயாவின் உணர்வுடன் கலந்தே செய்தார்கள்.

இக்காலப்பகுதியில் ஐயாவின் பேரன் "கண்டு" IPKF தடுப்பிலிருந்து தப்பி ஓடுகின்றார். இச் சந்தர்ப்பத்தை அடுத்து IPKF இனர் கண்டுவின் சகோதரர்களான கண்ணன். நாதன் இருவரையும் கைது செய்து ஐயாவின் சேனைப் பயிர்த் தோட்டத்திற்கு வந்தார்கள். ஐயாவின் முன்னிலையில் கண்ணன். நாதன் இருவர்மீதும் மண்ணெண்ணை ஊற்றிவிட்டு தீப்பெட்டியை ஐயாவிடம் கொடுத்து தீவைக்கும்படியும் அப்படியில்லாவிட்டால் பேரன் கண்டுவைத் தம்மிடம் ஒப்படைக்கும்படியும் கேட்டனர். இந்நெருக்கடி நிலையைச் சமாளிக்க "கண்டுவை" ஒப்படைக்கப்பொறுப்பு ஏற்று நின்றவராயினும் அதனைச் செய்யவில்லை. அன்று இரவு மரவள்ளிக் கிழங்கு பிடுங்கி பேரன் "கண்டு"வுக்குக் கொடுத்து சாவாறுப்பக்கம் போராளிகளுடன் செல்லுமாறு ஐயா அறிவுரை வழங்கினார். பின் நாளில் "ரகுவரன்" என்ற பெயரில் அவர் போராளியானார்.

இந்தகைய உறுதிமிக்க மனப்பாங்குடன் ஐயாவின் போராட்டவாழ்வு நகர்ந்தது. ஐயாவின் வாழ்க்கைக் காலத்தில் அவர் குடும்பம் பல உயிர் இழப்புக்களை அடுக்கடுக்காகச் சந்தித்தது.

அதாவது மூத்த மகன் ஐயாத்துரை தீப் பிடித்தபோது இறந்தார். மூன்றாவது மகன் சோமன் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொலை செய்யப் பட்டார். மூத்த பேரன் ஜெயசங்கர் சிறிலங்கா இராணு



(15ஆம் பக்கம் பார்க்க)




**தென் பகுதிகளில்** வாழும் தமிழ் மக்களை சிங்களவர்கள் அடித்து கலைக்கிறார்களாம். லொறிகளில் ஏறிச் சனங்கள் வருகுதாம் என்ற செய்தி கிராமங்கள்வரை எங்கும் பரவியது.

லொறிகளில் வந்த சனங்கள் பரந்தன் சந்தியில் நின்று அழுது குளறியதைப் பார்த்து எல்லோரும் திகைத்துப்போய் நின்றார்கள். இப்படியும் நடக்குமா என்று நம்ப மு[illegible]ாமல் நின்றார்கள். அப்படி வந்[illegible] னங்களை சந்தியிலிருந்து கிழக்கு [illegible]ரும்பிய வீதியில் பத்துமைல் தூரத்தில் உள்ள தர்மபுரம் கிராமத்தில் குடியிருக்கவைத்தார்கள். நாடு முழுவதும் கொந்தளிப்பு ஏற்பட்டது பற்றிய செய்திகளை வானொலியில் தொடர்ந்து கேட்டார்கள்.

அன்று மாலை சிவம் மரியக்கண்டுவுடன் வயலில் நின்ற போது பண்டா பயத்துடன் ஓடிவந்தான்.

"தம்பி இண்டைக்கு காலையில அருநோசு சந்திக்குப் போன போது தமிழாட்களை உங்கட ஆட்கள் அடிச்சுக் கலைக்கினம். பிறகு நீங்கள் ஏன் இங்க இருக்க வேணும் எண்டு ஆரோ கேட்டவையாம். இங்க இருக்க எங்களுக்குப் பயமாய் இருக்கு. பொலிஸ் ஸ்ரேசனுக்கு போகலாம் எண்டால் கரடிப்போக்குச் சந்தி கடந்து போகப் பயம். என்ன செய்யிறது எண்டு தெரியாமல் இருக்கு"

பண்டா மிகவும் பயந்து போயிருந்தான்.

"நீங்கள் பயப்படாதேங்கோ, இங்க ஒருதரும் உங்களுக்குக் கரைச்சல் தரமாட்டினம்."

சிவம் சமாதானம் சொன்னான். பண்டாவின் முகத்திலிருந்த பயம் சிறிதும் மாறவில்லை.

"எங்கட ஆட்கள் அங்க அநியாயம் செய்தால் நாங்கள் அதுக்கு என்ன தம்பி செய்யலாம். இன்றைக்கு முழுவதும் வீட்டில சமையலே இல்லை. பிள்ளையள் எல்லாம் பயந்து ஏங்கிப்போய் இருக்குதுகள்."

பண்டாவின் குரல் நடுங்கியது. பொழுது நன்றாய் சாய்ந்து கொண்டிருந்த நேரம்.

திடீரென்று பண்டா வீட்டுப்பக்கமாய் சத்தம் கேட்டது. பதறிப்போய் "என்ன சத்தம் ஆரோவந்திருக்கிறாங்கள் போல இருக்கு. அய்யோ வீட்டில மனிசி பிள்ளையள் தனிய" என்று வீட்டை நோக்கி ஓட சிவமும் கூடவே போனான். பின்புற வயல் வரம்பு வழியாக நந்தாவதியும் பிள்ளைகளும் ஓடி வந்து கொண்டிருந்தார்கள்.

"அருநோசு வீட்ட ஆட்கள் நின்று கத்திறாங்கள்."

சிவம் அவர்களை அழைத்து வந்து நெல் மூட்டைகள் அடுக்கிவைக்கும் கொட்டிலுக்குள் நிற்கவைத்தான்.

"அருநோசு மெனிக்காவையும் பிள்ளையளையும் கூட்டிக்கொண்டு பின்வயலால பொலிஸ் ஸ்ரேசனுக்குப் போவதாயச் சொல்லியிட்டுப் போயிட்டார். நான் உங்களைத்தேடி இங்க வந்தனான்."

"நீங்க இதுக்க இருங்கோ நல்லாய் இருட்டின உடன உங்கள நான் பொலிஸ் ஸ்ரேசனில கொண்டுபோய் விட்டு விடுறன்."

சிவம் முற்றத்துக்கு வந்தபோது வேலாயுதம் சைக்கிளில் வந்து இறங்கினான். நடந்ததை அறிந்து அவனும் யோசனையுடன் நின்றான்.

"ரோட்டில கொஞ்சப்பேர் நிற்கிறாங்கள். இங்கயும் வாறாங்களோ தெரியேல்லை. பாப்பம்"

சிறிது நேரத்தில் நாலைந்துபேர் காணி வாசலுக்கு வந்தார்கள்.

"இங்கு இருந்த சிங்கள ஆட்கள் எங்கபோயிட்டினம்."

"ஏன் கேட்கிறீங்கள்."

"அவங்கட ஊரில நாங்கள் இருக்கேலாது எண்டால் எங்கட ஊரில அவையள் இருக்க ஏலுமே, இவையும் தங்கட இடங்களுக்கு போகட்டும், துரத்திவிடுவம்."

"அவங்கள் அங்க அநியாயம் செய்தால் நீங்களும் அதையே செய்யிறதே. இது சரியில்லைத் தம்பியவை."

வேலாயுதம் நிதானமாய்ச் சொன்னான்.

அப்போது முன் நின்றவர்களை விலத்திக்கொண்டு முன்னால் வந்தவன் கோபத்தோடு சொன்னான்.

"நீங்கள் சொல்லுவீங்கள், ரத்தம் வழிய ஓடி வந்த எங்களுக்கல்லோ தெரியும், என்ர அண்ணையை அப்படியே உயிரோட எரிச்சாங்கள், எத்தினைபேரை வாளால வெட்டினவங்கள், அடி வேண்டின எங்களுக்குத்தான் நோ தெரியும், இவையளுக்கும் நாலு அடி போட்டால்தான் எங்கட மனம் ஆறும், அடி வாங்கிக்கொண்டு நாங்கள்தான் ஓடி வர வேணுமே."

"அங்க தருமபுரத்தில சனம் சனமாய் வந்து குவியுதுகள், தங்கட மனிசன்மாரை வாளால வெட்டிப்போட்டாங்கள் எண்டு எத்தினை பொம்பிளையள் கதறி அழுகுதுகள் தெரியுமே.

அதுகளுக்கு என்ன மறுமொழி... சொல்லுங்கோ தம்பி"

"அநியாயம் தான், ஆனா என்ன செய்யிறதது, ஆரோ செய்யிறதுக்கு ஆருக்கோ தண்டனை குடுக்கிறதே. வேண்டாம், நாங்கள் மனிதாபிமானத்தோட நடப்பம்."என்றான் வேலாயுதம்.

அவர்களின் கோபமான கவலையான முகங்களைப் பார்க்க மனதுக்கு பாரமாக இருந்தது. இழப்பு ஏற்படுத்திய நியாயமான கோபம். வந்தவர்கள் ஒரு நிமிடம் பேசாமல் நின்றார்கள். பிறகு திரும்பிப்போனார்கள்

"அண்ணை! நிலைமை பிழைபோல கிடக்கு. பண்டா ஆட்களை பொலிஸ்ஸ்ரேசனில கொண்டு போய் விட்டுவிடுவம். இப்போதைக்கு தங்கட ஊருக்குப் போகட்டும், பிறகு பார்த்துச்செய்யலாம்."

"அதுதானடாப்பா நானும் யோசிக்கிறன். எங்கட சனம் அவ்வளவு மோசமாய் நடக்காதுதான். ஆனாலும் நொந்துவாற சனத்தை நம்பஏலாது."

"பொழுது நல்லாய் இருண்டின பிறகு நான் காரில ஏத்திக்கொண்டு போய் விட்டிட்டுவாறன்."

"ஓமடா பாவங்கள், நீ போய் காரை எடுத்துக்கொண்டு வா. நான் இங்கயே நிற்கிறன்."

சிவம் சைக்கிளில் வீட்டுக்கு ஓடினான். பராசத்தியிடம் விபரத்தைச்சொல்லி விட்டு காரை எடுத்துக்கொண்டு திரும்ப வந்தான். நன்றாக இருளும் வரை காத்திருந்தார்கள்.

மரியக்கண்டு சோறும் கருவாட்டுக்குழம்பும் வைத்து பண்டா நந்தாவதி குழந்தைகளுக்கு சாப்பிடக்கொடுத்தான். குழந்தைகள் பயத்தில் அழுதுகொண்டேயிருந்தார்கள்.

இரவு ஏழரை மணிக்கு மேலாகிவிட்டது.

காரின் முன்புறம் வேலாயுதம் ஏறிக்கொள்ள பண்டாவும் நந்தாவதியும் பிள்ளைகளும் பின் இருக்கைகளில் அமர்ந்து கொண்டார்கள். அவர்களின் முகம் பேயறைந்தது போல் இருந்தது.

"கவனமாய் போயிட்டு வாங்க, பயப்படாதீங்க, ஊருக்குப் போன உடன கடதாசி போடுங்க."

என்று சொல்லி கார்க்கதவை சாத்திவிட்டான் மரியக்கண்டு.

உட்பக்க பாதையால்போய் கரடிப்போக்கு சந்திக்குப்போகாமல் குறுக்காகப் போகும் கணேசபுரம் வழியாகப்போய் பின்பக்கமாய் பொலிஸ் நிலையத்தை அடைந்தார்கள்.

"நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்காமல் இப்ப போங்கோ, கொஞ்ச நாள் போக நிலமை பார்த்துவரலாம், வீட்ட நாங்கள் கவனமாய்ப்பார்த்துக் கொள்ளுறம்."

இறங்கிய பண்டாவும், நந்தாவதியும் அழுதுகொண்டே கும்பிட்டுவிட்டு பிள்ளைகளுடன் உள்ளே போனார்கள்.

அவர்கள் போய் நுழையும் வரை பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

சிவம் வீட்டுக்கு வந்தபோது ஒன்பது மணியாகிவிட்டது. கைவிளக்கை எரிய வைத்து பராசத்தி பார்த்துக்கொண்டிருந்தாள்.

"அப்பிடி பெரிய பிரச்சினையா நடக்குது. ஓடிவாற சனங்கள் எவ்வளவு பாவங்கள், பரமு வீட்டில அவையின்ர சொந்தக்கார ஆட்கள் வந்து நிற்குதுகள், அதுகளின்ர கதையளைக்கேக்க தலை விறைச்சுப்போகுது."

கவலையுடன் சொன்னாள்.

"கத்தியாலயும் வாளாலையும் வெட்டிறாங்களாம், அரசாங்கம் கூட பார்த்துக் கொண்டிருக்குதே. அதுதான் ஆகவும் பெரிய அநியாயம்."

"அப்ப சோனக ஆக்கள்..."

"அவைக்கு ஒருபிரச்சினையும் இல்லை. தமிழ் கதைக்கிற தமிழருக்குத்தான் அடியாம்."

நாடெங்கும் ஏற்பட்ட கொந்தளிப்பு கொஞ்சம் கொஞ்சமாய் அடங்கியது.

# தாமரைச்செல்வியின்

# பச்சைவயல் கனவு





மயிலர் கடையில் இருந்த பிலிப் வானொலிப் பெட்டியில் செய்திகளைச் சனங்கள் கூட்டமாய் நின்று கேட்டார்கள். பிரதம மந்திரியின் சிங்கள உரையின் தமிழாக்கம் ஒலிபரப்பானது.

இந்தச் சமயத்தில் தான் ஊரில் அப்பு இறந்துபோனசெய்தி அவர்களுக்கு கிடைத்தது. செய்தி கிடைத்த மதியமே தமது கார்களில் எல்லோருமாகப் புறப்பட்டார்கள்.

சிவத்துக்கு அப்புவின் முகம்தான் கண்ணுக்குள் நின்றது. செல்லமாய் அவனைத்திட்டுகின்ற குரல் இன்னமும் காதில் கேட்பது போல உணர்ந்தான்.

ஆனையிறவை அவர்கள் நெருங்கியபோது ஒரு வித்தியாசமான சூழ்நிலையை எதிர்கொண்டார்கள். வழக்கமாய் சில அலுவலர்களும் நாலைந்து பொலிசாரும் நிற்கின்ற தடை முகாமில் இன்றைக்கு நிறைய இராணுவத்தினர் நின்றிருந்தார்கள். அவர்கள் கைகளில் இருந்த துவக்குகள் வெய்யில் வெளிச்சத்தில் பள பளத்துக் கொண்டிருந் தன. தலைக்கவசங்களுக்கு கீழ் உள்ள முகங்கள் சுமுகமாக இருக்கவில்லை.

யக்கச்சியின் உட்புறத்து முகாமில் இராணுவத்தினர் இருப்பதாய்த்தான் இதுவரைஅவர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள். இராணுவத்தினரை நேராக இதுவரை பார்த்ததில்லை. இன்றைக்குத்தான் முதல் தடவையாய் இராணுவத்தைப் பார்த்தார்கள். ஆயுதங்களுடன் அவர்களை அந்தப் பச்சை உடுப்பில் பார்த்த போது ஏனோ முதுகுத்தண்டு குளிர்ந்து கொண்டு வந்தது. தமக்குள் ஏதோ கதைத்துக்கொண்டு வந்த இரண்டு இராணுவத்தினர் காரை நெருங்கி உள்ளே எட்டிப்பார்த்துவிட்டு மேலே போகச் சொன்னார்கள்.

நாடெங்கும் நடந்த பிரச்சினைகள் காரணமாய்த்தான் இங்கே வந்து நிற்கிறார்களோ என்று நினைக்கத் தோன்றியது. அப்புவின் காரியங்கள் எல்லாம் நடந்து முடிந்தது. கண்களில் நீர் தழும்ப கொள்ளி வைத்தார்கள். ஆச்சிதான் சுருண்டு போய்க் கிடந்தாள்.

எட்டுச்செலவு நடந்து முடிந்த பிறகும் ஒருவாரம் நின்று விட்டு அவர்கள் பரந்தனுக்குத் திரும்பினார்கள்.

நான்கு மாதங்களுக்குப் பின் பண்டா வந்தான்.

"இனி இங்க இருக்க எங்களுக்குப் பயமாய் இருக்கு. எங்கட காணியைவித்துப்போட்டு ஊரோடயே போய் இருக்கப்போறம். நீங்க எடுத்துக்கொண்டு காசு தந்தீங்க எண்டால் நல்லது."

வேலாயுதத்திடமும் சிவத்திடமும் சொன்னான்.

"இங்க நல்லாய் உழைச்சத விட்டிட்டு ஊரில போய் என்ன செய்வீங்கள்"வேலாயுதம் கவலையுடன் கேட்டான்.

"என்னவாவது செய்வம், வியா பாரம் பண்ணலாம், அதுதான் காணியை விற்கலாம் எண்டு நினைக்கிறன்."

வேலாயுதம் சிவத்திடம் திரும்பினான்.

"நல்ல காணி. நீ வாங்கிறியா?"

"அய்யோ என்னட்ட காசு இல்லையண்ணை. இப்பதான் றக்ரர் எடுத்தது. நீ வாங்கு."

"என்னட்டயும் அவ்வளவு காசு வராதுதான். ஆனாலும் நல்ல காணி பாப்பம்."யோசித்துக்கொண்டு நின்றான்.

ஒரு வாரத்தின் பின் பண்டாவிடம் காசு கொடுத்து அந்தக் காணியை வேலாயுதம் வாங்கிக்கொண்டான்.

"கொஞ்சக் காசு கடன்தான். ஆனா உழைச்சு அடைச்சிடலாம்."

முழுக்காசையும் வாங்கிக்கொண்டு பண்டா கண்ணீர் தழும்ப அவர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு போனான். பாவம் நல்லவன். பக்கத்தில் எவ்வளவு உதவியாய் இருந்தான்.

பண்டா போவதைப் பார்த்துக்கொண்டிருந்த அவர்களுக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. இனவாதம் மனிதர்களையும் மனங்களையும் தூரத் தூரப் பிரித்துவைத்து தன் குரூர முகத்தை காட்டிக் கொண்ட தன் ஆரம்பம் அது.

(தொடரும்...)

# திலீபம்

## வாடமுன்னொரு சேதி கூறடா




உண்ணாவிரதத்திற்கு புறப்படுமுன்

### இராசையா பார்த்தீபன்

ஜனனம்: 1963 நவம்பர் 29
வீரமரணம்: 1987 ஆவணி 26

மக்கள் மத்தியில்



குரலெடுத்ததோர் குயில் படுத்தது.
குமுறிநின்றதோர் புயல் படுத்தது.
தரமறுத்திடும் உரிமை பெற்றிடத்
தன்வயிற்றிலே... போர் தொடுத்தது
உரமெழுந்தினித் தடை உடைக்குமா?
உயிர்பிரியமுன் இது நடக்குமா?
வரமறுப்பவர் வருகை கூடுமா?
வலைவிரித்தவர் படைகள் ஓடுமா?
நெஞ்சிலாடிடும் கனவு மாளுமா?
நினைவிழந்திடும் பிஞ்சு வீழுமா?
அஞ்சிவாழ்ந்தவர் அரசில் ஏறவா?
அனலிலாடிய வேங்கை சாகவா?
நஞ்சுதின்றிட அஞ்சிடாதவன்
நல்லை வீதியில்...பாடை ஏறவா?
வஞ்சிபெற்றவா! வந்து பாரடா!
வாடமுன்னொரு சேதி கூறடா.
சாவுடன் அண்ணனின் சரித்திரம் முடியுமா?
சந்ததி சூடேறுமா?
பாவுடன் அண்ணனின் பாடைதோளேறுமா?
கனவுகள் ஈடேறுமா?
அண்ணன் திலீபனின் ஆசையீடேறுமா?
அன்னியர் படையோடுமா?
மன்னவன் தீயிலே மாண்டிடக் கூடுமா?
மக்களின் படை கூடுமா?
இந்தியக் காந்தியே! எங்களின் அண்ணனை
என்னென்று நீ எண்ணினாய்.
மந்திரப் புன்னகைமன்னனைச் சாய்த்திடில்
நெஞ்சினில் அம்பெண்ணுவாய்.

*-புதுவை இரத்தினதுரை (1987)*

நல்லூரின் வீதியில்











திலீபா!
உணர்வுகள் வீணாகாது
உலகமெல்லாம்
உன்புகழ் பேசும்!
கனவுகள் நனவாகும்
காலம் மிக விரைவில் கைகூடும்!

**மடுத்தாய் பல்பொறி உதிரிகள் வாணிபம்**

யாழ்சாலை, கரடிப்போக்கு, கிளிநொச்சி.

(சி-8508)



புது உலகம் கண்டிடவே உறுதி கொண்டாய்
புரந்தரனே! பார்த்தீபா! உயிரை ஈய்ந்தாய்
எது வரினும் சலிக்காத உள்ளம் தந்தாய்
என் நாளும் உனைநினைக்க மனதில் நின்றாய்.

**மைட்டீ நகைமாடம்**

நெடுஞ்சாலை, கிளிநொச்சி.

(சி-8509)



ஊரெழுவில் பிறந்து வந்த உயர்ந்த ஞானம் - தமிழர் உரிமைக்காய் தனையெரித்து ஒளிர்ந்த தீபம்!
சீரொழுகும் பண்பு நலம் கொண்ட சீலன் - எங்கள் சிந்தையிலே நிறைந்துறையும் திலீபன் எனும் நாமம்!

**கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கம்.**

**கிளிநொச்சி.**

(சி-8510)



ஊரெழுவில் உதித்த எங்கள் பார்த்தீபனே
ஊரெழுந்து கொண்டதடா உந்தன் பின்னே
யாரெழுவார் எம்முன்னே பகைவரென்று
வேரோடு சாய்ந்திடுவோம் உந்தன் பேரால்...!

**வன்னியன் தொலைத்தொடர்பு நிலையம்**

உள்நாட்டு, வெளிநாட்டு அழைப்புகளுக்கும்,
தொலைநகல்வசதிகளுக்கும்...

**கிளிநொச்சி.**
(வைத்தியசாலை முன்பாக)
071-2349572
FAX-071-2349574
071-2349580

கிளிநொச்சி
(நீதிமன்று முன்பாக)
071-2345621

தர்மபுரம்
071-2348626

மாங்குளம்
071-2345622

ஒட்டுசுட்டான்
071-2746008

வட்டக்கச்சி
071-2349664

கல்மடு
071-2349667

(சி-8511)



பன்னிரு நாளுருகி பசி கிடந்து
பார்த்தீபன் விழிமூடிப் போனான்
பதினாறு ஆண்டுகள் ஆனாலும்
வீரனின் தியாகத்தை மறப்போமா நாம்!

**கிராமிய அபிவிருத்தி வங்கி**

"முயற்சியாளர்களின் குடும்ப வங்கி"

(சி-8512)

# திலீபம்



„நான் என் உயிரிலும்
மேலாக நேசிக்கும் மக்களே!
உங்களிடம் ஒரு பெரும்
பொறுப்பை விட்டுச்செல்கிறேன்.
நீங்கள் அனைவரும்
பரிபூரணமாகக்
கிளர்ந்தெளவேண்டும்.
இங்கு ஒரு மாபெரும்
மக்கள் புரட்சி வெடிக்கட்டும்."

தலைவர் பிரபாகரன் நேரில் வருகைதந்த போது ஏற்பட்ட மகிழ்வில் தலைக்குக் கைகளைத் துணை கொடுத்து சரிந்திருந்து தலைவர் சொல்வதை செவிமடுத்துக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

## திலீபனின் பசி

செந்தமிழ் ஈழத்தின் விடுதலை தாருங்கள்!
திலீபனின் பசி அடங்கும்!
எந்தநாளும் எம்மை ஏமாற்றாதீர்.... மீண்டும்
இரத்தத்தின் கதை தொடங்கும்!


தித்திக்கும் எங்கள் தாய்மண்ணிலே தினம் தினம்
சிங்களவர் குடியேற்றமா?
எத்தனை புலிகளின் உயிரை எடுத்தீர்கள்..
இன்னமும் வெறியாட்டமா?

தழும்புகள் சுமந்தநம் புலிகள் பிறர்காலைத்
தாங்கவோ போர் தொடுத்தார்?
கொழும்புதான் தமிழ்மண்ணை ஆளுமாம்...அட எங்கள்
குழந்தைகள் இதற்கோ செத்தார்?

கொடுதலை எனும்நிலை வந்தாலும் புலிகள் தம்
கொள்கையை விடுவாரோடா?
எடு இதை எனச் சொன்னால் புலிகள் பிறர்வீசும்
எலும்பைப் போய்த் தொடுவாரோடா?

செந்தமிழ் ஈழத்தின் விடுதலை தாருங்கள்!
திலீபனின் பசி அடங்கும்!
எந்தநாளும் எம்மை ஏமாற்றாதீர்... மீண்டும்
இரத்தத்தின் கதை தொடங்கும்!


காசிஆனந்தன்
(1987)





இறுதி வணக்கம் செலுத்தும் தலைவர் பிரபாகரன்







பேச்சோடு செயலாக்கப் பெருமையுள்ள நம்பி - அவன் பிரிவாலே நாமழுதோம் உள்ளமெல்லாம் வெம்பி!
மூச்சினையும் தமிழீழ மண்ணுக்காய் விடுத்தான் -பெருமூச்செறிந்து முழுவுலகும் கண்கலங்கப் படுத்தான்.



**அலை ஓசை தொழில் நுட்பவியலகம்**

யாழ்சாலை, கரடிப்போக்கு, கிளிநொச்சி.

(சி-8513)



ஒரு சொட்டு நீர் கூட அவனருந்தவில்லை! உடலில் ஓடிநின்ற குருதிவற்றிக் காய்ந்ததுதான் உண்மை!
திருவோடு வாழ்கின்ற சிறுவயதுக் காளை - ஒளித்தீபமென எரிந்தணைந்தான் தியாகமலர்ச் சோலை!.

**நிமலன் வீடியோ புகைப்படக் கலையகம்**

துணுக்காய் சாலை,
மல்லாவி.

யாழ்சாலை,கிளிநொச்சி.

முல்லைச்சாலை,
புதுக்குடியிருப்பு.

(சி-8516)

எத்திசை மேவினும் பார்த்தீபன் நாமம் - இதய
சுத்தியோ டெங்குமே பேணிடக் கண்டோம்.
சத்தமில்லா தவன்செத் ததனால் தமிழ்த்தேசமே
நித்திய கீதமாய் திலீபனைப் பாடுது.



**இளவேனில் வாணிபம்**

நடுவப்பணியகம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.

(சி-8514)


திசையெட்டும் முழங்குதுபார் திலீபனது நாமம் - அவன்
திருவார்த்தை நம் வாழ்வில் ஒளியூட்டும் வேதம்!
விசைகொள்ள வேண்டுமடா தமிழீழ மண்ணில் - நாளை
விடிவொன்று வருமெங்கள் தமிழ் மக்கள் வாழ்வில்



**வைர மாளிகை**

எண்: 65, கண்டி வீதி, கிளிநொச்சி.

(சி-8515)




# வேட்டை

**தயாபரன்**

மேலே மரங்கள போர்த்தி யிருந்த விதானத்தில் மறைப்பிலி ருந்து ஆட்காட்டிப் பறவையொன்று ஓயாது கத்தியது.

"மிருகங்களின்ரை அசுமாத் தொண்டையும் காணேல்லை... நேற் றைக்கு முழுக்க முறிகண்டி சுற்றா டலில காடுகலைச்சு களைச்சுப்போய் வெறுங்கையோடு திரும்பின மாதிரித்தான் இன்றைக்கும் நேருமோ...?" வேங்கையன் அயர் வோடு கூற முன்னால் போன தங் கராசு அவசரமாகத் திரும்பி கைய மர்த்தினான்.

வேங்கையன் அப்படியே புதரோடு மறைந்து கொள்ள தங்கராசு சில நிமிட அவதானத்துக்குப் பிறகு தோளில் அணைத்த இடியனை இயக்கி 'டுபீர்' என்றான். பதுங்கி யிருந்த வேங்கையன் தன்னியக்கத் துப்பாக்கியோடு அவனைக் கடந்தான்.

"வேங்கையா, முயலுக்கு வெடி கொழுவிட்டது! வெடியோட பக்கத்தில நாயுருவிப் பத்தைக்குள்ள தூக்கியெறிஞ்சிட்டுது: உள்ள புகுந்துபார்...."

வேங்கையன் தரையோடு தவழ்ந்து சிறிது நேரத்தின் பின் குருதி கொப்பளிக்கும் முயலுடன். வெளி வந்தான். "பெரிய மிருகங்களை விழு த்த தீர்க்கவேண்டிய வெடியை இந்தச் சின்ன உருவத்துக்கு பாவிச்சால்...!"

"ச்சா,கொஞ்சம் விலத்திப் பிடிச் சுத்தான் அடிச்சனான். அப்பிடியி ருந்தும் முயல் புக்கையாய்ப் போச்சு: குடலிலும் காயம்... என்ன செய்ய..?"

"சட்டுப் புட்டுண்ணு ஒரு வேட்டைக்கறி தயார்பண்ண வேண்டி யதுதான். இல்லாட்டி இதையும் கொண்டு காட்டை அலசிப்போட்டு முகாம் திரும்பக்கிடையில் நாறிப் போயிடும்"

மளமளவென்று செயலில் இறங்கினார்கள்.

"வேங்கையா ஒரு கைய ளவு அவித்த இறைச்சியை பொலித் தீனில் பத்திரப்படுத்து முகாமில் வேலுவும் கதிரவனும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்.."

"நிச்சயமாக, நேற்றைய அலைச்சலில் சோர்ந்து படுத்தவர்கள் இன்னும் எழுந்திருக்க மாட்டார்கள். வேட்டையாடுதலின் அரிச்சுவடியை கற்றுக் கொள்வதற்குள் இருவருக்கும் போதும் போதுமென்றாகி விட்டது"

"வேங்கையா, வேட்டையா டுறது ஒரு நுட்பமான கலை: நிறைய நெளிவு சுழிவுகளை நடைமுறை அனுபவத்தில அறியவேணும்... வந்தவரத்தில மிருகங்களைச் சுட்டு எடுத்துக்கொண்டு திரும்புறதெண்டால் குறித்த இடத்தில ஏற்கனவே மிருகங்களை கட்டிப்போட்டாற் தான் சாத்தியப்படும்."

அவர்களின் நடைக்குக் குறுக்கே பரந்தவெளியொன்று குறுக் கிட்டது.

"இதைக் கடந்து அந்தப் பக்க காட்டுக்குள் இறங்கவேண்டாம், தங்கராசு ஜயசிக்குறு நடந்த சமயம் ஆமி பொயின்ற் அடித்து "இருந்த இடம் - இன்னும் கிளியர் பண் ணேல்லை."

அவன் சொன்னதைக் கேட்டு தூக்கிய காலை வைக்கத் தயங்கி யவன் நாலுகால் பாய்ச்சலில் ஓடிக் கொண்டிருந்த வாலறுந்த வீராவை சீட்டியடித்து அருகே அழைத்தான். இடியன் துவக்கை கமக்கட்டுக்குள் செருகியவாறு தொண்ணூறு பாகையால் திரும்பி வடக்கே பார்த்து நகர்ந்தான்.

"மாரிகாலம் ஆரம்பிக் கப்போகுது. இனியும் தாமதிக்காமல் நாளைக்கே பயிற்சிமுகாம் சீரமைப்பு வேலைகளைத் தொடங்கவேணும். அறுபதடியில ஒரு கொட்டில், மற்றது எண்பதடி.... நாலுபக்கமும் சுற்றிவர மண்ணில அரைச்சுவர் எழுப்பச் சொல்லி பயிற்சிமுகாமை பொறுப் பெடுத்திருக்கிற இனியவன் மாஸ்டர்



சொன்னவர். மூண்டு கிழமைகளில பயிற்சிமுகாம் இயங்கவேணு மென்றவர்"

"இனியவனை ஏற்கனவே எனக்குத் தெரியும். பாண்டியன் குளத்தில நடந்த பயிற்சிமுகாம் வேலைகள் நான்தான் 'கொண்ராக்ட்' பேசி செய்துகொடுத்தனான். ஆள் வலு கண்டிப்பான பேர்வழி! ஒப்பந்த நாளுக்கிடையில வேலை முடிக் காததுக்காக ஒரு வாரம் இரவுபகல் பாராமல் - வீட்டில மனிசி பிள்ளைக ளைப் போய் பார்க்காமல் சக்கையாகப் புழிஞ்சு போட்டார்." தங்கராசு தயக் கத்துடன் சொன்னான்.

"வேடிக்கைதான்! மனிசி, பிள்ளை யளைப் பார்க்காமல் இருந்தாலும் ஒரு கிழமை உள்ளூர்ச் சரக்கை நாக்கில நனைக்காமல் இருந்தனியே தங் கராசு...!"

காவிப் பற்களைக் காட்டி மெல்லச் சிரித்தவன், "வேலை தொடங்கி விட்டால் இப்பிடி நேரம்காலம் பார்க் காது காடளப்பது சாத்தியப்படாது.

பேசாமல் ஓய்வு நேரத்தில் முகாமின் பின்னால் மீந்து போன சாப்பாடு கொட்டும் கழிவுக் கிடங்கில் மிருகங் களை எதிர்பார்த்திருக்கலாம்.

போனகிழமையும் அந்தக் கிடங்குக்கு சாப்பிடவந்த பன்றி யொன்று வகையாய் மாட்டிக் கொண் டது. அறிஞ்சனியோ...?"

வேங்கையன் திடுக்குற்றான். "என்ன..பெரிய பன்றியோ?" அவன் குரலிலிருந்த கலவரம் தங்கராசு விற்குப் புதிதாயிருந்தது.

"ஒரு நடுத்தர அளவு கடு வன் பன்றி காலையில அயலில் தேடிப்பார்த்த போது பன்றிக்கூட்டம் வந்திருந்ததடையம் இருந்தது. நான் ஆச்சரியப்பட்ட விஷயமொன்று, பெரிய குளம்புகளின்ர அடையாளம் பதிச்சதரையில மூண்டு காலடிகள் மட்டும் சீராகக் கிடந்தது..."

"அது 'நொண்டியன்' பன்றி யப்பா! இனிமேல் அதைக் கண்டால் சுட்டுப்போடாதை தங்கராசு" என்று இடைமறித்தான் வேங்கையன்.

"எதிரியின்ரை மரணப்பொறி யிலிருந்து எங்களையும் முகாமையும் ஒரு தடவை காப்பாற்றியிருக்கு"

"ஆமியோ, எப்ப வந்தவன் அந்த அடர்ந்த காட்டுக்குள்ள..!" தங்கராசு ஐயத்தோடு கேட்டான்.

"ஓயாத அலைகள் -03 ஓங்கி அடிக்கத்தொடங்கின சமயம் ஜயசிக்குறுவும் பிசுபிசுத்துப்போக எதிரி எங்கட மண்ணில ஏவிவிட்ட கடைசி நாசகாரத் திட்டத்தை நீ அறிந்திருப்பாய்! தெரிந்தெடுத்த படை யினரை எங்களின்ரை வலுக்குறைஞ் சிருக்கிற பகுதிகளில நுழைத்து சில் சதிநடவடிக்கைகளை நிறைவேற்றி உடனடி வெற்றிகள் சிலவற்றைப் பெற நினைத்தான். எங்கட போராளி களை வெவ்வேறு களமுனைகளில அப்ப பரவலாக்க வேண்டியிருந்தமை அவனுக்கு வாய்ப்பாயிட்டது...

தெரிவு செய்த உச்ச இலக்கு களை வேட்டையாடுவதன் மூலம் இந்தப் போராட்டத்தின் பாய்ச்சலை மந்தப்படுத்த முனைந்தான்!"

அருகில் பயணிகள் பேருந்து பெருமூச்சு விட்டுக்கொண்டு போவது கேட்டது, பெரும்பாலும் புதுக்குடியி ருப்பிலிருந்து மதியம் புறப்படும் பேருந்தாக இருக்கவேண்டும்.

தங்கராசு அப்படியொரு சம்பவத்தில் உயிர்கொடுத்த புகழ் பூத்த மூத்த தளபதியின் பெயரைச் சொல்லி "அவர் கூட..." என்று இழுத்தான்.

"ஓம்...அந்த இடம் பக்கத் திலதான்" வலது திசையில் வீதிப் பக்கமாக கைகாட்டினான், வேங்கை யன்.

"சரி, பன்றிகள் எந்தவகை யில... எங்க உதவினதெண்டு சொல்லு?"

"எங்கட பாசறையில பின் காட்டோரம் சாப்பாட்டுக் கிடங்கின் பாதையில் மிதிவெடி புதைச்சிருந் திருக்கின்றான். சாப்பிட வந்த பன்றிக் கூட்டம் அகப்பட்டிட்டது!"

தங்கராசு திகைத்தான்

".... உடனடியாக காட்டை 'கிளி யர்' பண்ணின போது முகாமுக்குள்ள நுழைகிற பாதையில மிதிவெடி இணைப்போடு கூடிய இரண்டு கிளை மோர் வேறு....!"

"........."

"......மூண்டு கிழமைக்குப்பிறகு நொண்டியன் ஊனப்பட்ட பின்காலை இழுத்துக்கொண்டு கழிவுச் சாப் பாட்டை நாடி வந்தது. நாங்கள் அதைச்சுடேல்லை: ஊறுபட்ட உட லைச் சுமந்து கொண்டு தன்ர இயல்பு வாழ்க்கையை நடத்த விழையும் அந்த உயிரைக் கொல்ல எங்களுக்கு மனம் ஒப்பவில்லை."

"கேட்க ஆச்சரியமாயி ருக்கு, இப்போ ஒரு டசின் வரையி லான குட்டிகளை வேறு உருவாக்கி வம்சத்தை விரிவாக்கிக் கொண் டிருக்கே!" உண்மையில் வெடியன் தங்கராசுவிற்குக் கூட அதன்மேல் இரக்கம் பிறந்தது.

அவர்கள் நடைதளர்ந்து இரணைமடு அலைகரையை கடந்து முகாம் பாதையில் ஏறியபோது ஆதவன் விடைபெற்றிருந்தான்.

● ● ●

செவிப்பறையை அதிர வைத்த வெடியோசையால் அருட்டப்பட்ட வேங்கையன் நுளம்பு வலையை உதறிவிட்டு ஓடிவந்தான்: கையில் அரிக்கன் இலாந்தர்.

பரணிலிருந்து குதித்த வெடியன் தங்கராசு,கொஞ்சம் பொறு பன்றி குற்றுயிரில் கிடந்தால் மூர்க்க மாகத் தாக்கப்போகுது" சொல்லிவிட்டு சொட்கண்ணில் வெற்றுக் கோதை நீக்கிவிட்டு புதியதை நிரப்பி முன் னால் விரைந்தான். அதற்குத் தேவையே இருக்கவில்லை. அழுகிய உணவில் தலைபதித்து நாக்கைக் கடித்தபடி உயிரைப் போக்கியிருந் தது அது.

தங்கராசு குண்டு தைத்த காயத்திலிருந்து பெருகிய இரத் தத்தை விரல்களில் தோய்த்து இரும் புக் குழலில் பூசினான். தங்கராசு மட்டுமன்றி வேறு பரம்பரை வேட் டைக்காரர்களும் இவ்வாறு காரண மில்லாத சப்பிரதாயத்தை கைக் கொள்வதை வேங்கையன் கண்டி ருக்கிறான்.

விளக்கொளியில், வெடி யன் தங்கராசு பெருங்களமொன்றை வெற்றி கொண்ட பெருமிதத்தில் மிதப்பது தெரிந்தது.

"தங்கராசு, ஒவ்வொரு மிரு கமும் உன்ர கையிலயிருக்கிற ஆயு தத்தால சூடுபட்டு செத்துப் போகேக் குள்ள உனக்குள்ள அனுதாபம் எழுகிறேல்லேயே! வாயில்லாப் பிரா ணிகளை தினமும் வதைக்கிறோமே யென்ற குற்ற உணர்வு வாட்டுவ தில்லையா.....?"

"வேதனை, கழிவிரக்கம், மனச்சஞ்சலம் எல்லாம் துவக்கத்தில யிருந்தவைதான். ஆனா இப்ப பழகி விட்டுது: கமம், தச்சுவேலை, மீன் பிடி....இவைமாதிரி வேட்டையாடுறதும் தொழில்: இதிலும் அனுபவத்தில் அறியவேண்டிய நுணுக்கங்கள் அதிகமிருக்கு.....அரசாங்கங்களும் இதை சட்டரீதியாக அங்கீகரித்து 'லைசென்சு' கொடுக்கிறதே!

வேங்கையா, நீங்கள் ஒவ் வொரு சண்டையின் போதும் எத்த னையாயிரம் ரவைகளைச் சுடுகி றீர்கள்...! எவ்வளவு எதிரிகளின் கதையை முடிக்கிறீர்கள்... படுகாயப் படுத்துகிறீர்கள்! இவற்றால் உங்கள் மனம் நொருங்கிப்போவதில் லையோ...? போரை வெறுக்கின்ற நிலை ஏற்படுவதில்லையோ..?" என்று மடக்கினான் தங்கராசு.

"ஓ அதுவா... பகை கொண்ட நெஞ்சோடு எம்மை கரு வறுக்க வருபவனை - வேட்டையாட முனைபவனை எதிர்க்கத் தயங் கினால் மிச்சமேதுமின்றி அழிந்து போவோம்!"

விவாதத்தின் சூட்டோடு பன்றியின் உடலும் வாட்டிமுடிந்தது. மீந்து கிடந்த விறகுகளின் எரிதண லிலிருந்து கிளம்பிய வெக்கை அரு கில் நிற்கவிடாது விரட்டியது. "வன வளப் பிரிவு விரைவில் பன்றி வேட்டைக்குத் தடைச்சட்டம் கொண்டு வரும் போலுள்ளதே..!"

"ஏற்கனவே மான், மரை களை வேட்டையாடத் தடை போட்டி ருக்கு. இப்பிடியே தடைச்சட்டங் களைப் போட்டு இறுக்கினால் இதை நம்பியிருக்கிற எங்களின் கதி...?" தங்கராசுவின் கேள்வியில் நியாய மிருப்பதாகப்பட்டது.

"தங்கராசு இன்றைய நாளில உன்னை மாதிரி வேட்டைக்கெண்டு வெளிக்கிட்டவை எத்தினைமிரு கங்களின்ரை கதையை முடிச்சிருப் பினம். யோசிச்சுப்பார்! நிலமை இப்பிடியே தீவிரமடைஞ்சு தெண்டால் தேசிய சொத்தாக இருக்கிற உயிரி னங்கள் அருகி அற்றுப்போகும். பிறகு எங்கட நாளைய சந்ததி இதுகளை வேடிக்கை பார்க்கிறதுக்கு தெஹி வளைக்கோ அல்லது தமிழ் நாட்டிற்கோ சென்று மிருகக்காட்சிச் சாலையில் தான் பார்க்க நேரிடும்"

தொலைவில் மங்கிய 'டோர்ச்' வெளிச்சத்துடன் வேலு பதற்றத்துடன் வருவது தெரிந்தது. மண்கல் அரிவதற்கு நாட்கூலிகளைப் பிடித்து வர பரந்தன் போனவன் வேகமாக வந்தான்.

"தங்கராசு...தாமதிக்காமல் தர்மபுரம் ஆசுப்பத்திரிக்கு ஓடு கூரையில நீ செருகிவைச்சிருந்த இடியன் துவக்கு முழங்கி உன்ர மனிசிக்கு..."

● ● ●

நடுவானில் முகம்காட்டும் நிலாவின் சிக்கன ஒளியின் துணை யுடன் பரணில் காத்திருந்தான் தங்க ராசு. கையில் அன்று செல்லாயியின் உயிரைக் குடித்த அதே இடியன் துவக்கு...! அதனுள் உயர்ந்த அமுக்கத்தில் அடைக்கப்பட்டிருக்கும் உருளைச் சன்னங்கள் வரவிருக்கும் மிருக்ங்களின் உயிரைக் கவரத் தயாராக...

செல்லாயி -

மிருகங்களைக் குறித வறாது, ஈவிரக்கம் காட்டாது கொன்று போடும் அவன் உருக்கு நெஞ்சின் ➡

➡ ஒரு மூலையில் அன்பு,ஈரம்,கனிவு துளிர்த்ததே அவள் வருகையின பின்புதானே!

இந்த இருவாரங்களும் திக்பிரமை பிடித் தவனாக மூலையிற் சுருண்டு கிடத்தவனு க்குமூன்று பெண்குழந்தைகளின் பசிகிடந்த முகங்களைக். காணச் சகிக்கவில்லை.

சுடுகருவிகளைப் பார்க்கும்போதெ ல்லாம் பிணமாகிக் கிடந்த மனைவியும் உல கத்தைப் பார்க்கமுன்னரே அவள் வயிற்றினுள் தசைப்பிண்டமாக மாறிப்போன சிசுவுமே கண் ணில் தோன்றினார்கள். சுடுகருவிகளை அள்ளி அப்படியே அடுப்பினுள் செருகி தீயிட வேண்டும் போல் ஆவேசம்....ஆனால் அவனை நம்பிநிற் கும் குழந்தைகளின் எதிர்காலம்? அவன் பிறந்த நாளிலிருந்து கற்றுக்கொண்டதே வேட்டை யாடுதல் ஒன்றுதானே! கீழே சட்... சடசட வென தரையில் சுள்ளிகள் உடைபடும் ஒலி கேட்டு மனதை அலைத்த சிந்தனைகளை உதறிவிட்டு இடியனை தோளோடு அணைத்து புலன்களை கூர்மையாக்கினான்.

உர்....உர்....உர்ர்.... கிறுக் கிறுன்...



ஒன்று, இரண்டு, மூன்று... அஞ்சு என நிழலுருக்களாக தரையில் பரப்பியிருந்த கோதுமைமா பிட்டின் பின்னணியில் துலங்கின. இது நாள்வரையான அவனின் அனுபவத் தில் இவ்வளவு இலக்குகள் ஒன்றாய்ப் பொருந்தி வந்ததில்லை.

'மருந்துபற்றாது போனால் கைக் கெட்டியது வாய்க்கெட்டாமல் போய்விடுமோ...?' சொட்கன் எடுத்துவர மறந்தமைக்காக தன்னையே நொந்துகொண்டான்.

'சரி,இடியனை முழங்க வேண்டிய துதான். மருந்து பற்றினால் நூறுவீதம் வெற்றி: அல்லாது போனால் விளைவு பூச்சியம்'

நடுவில் தெரிந்த பெரிய கறுப்பை மையமாகக்கொண்டு விசைவில்லை இழுக்க பெருங்கனலுடன் சன்னங்கள் பறந்தன.

தங்கராசு பரணிலிருந்து குதித்து இறங் கினான். நனைத்துவைத்திருந்த தீப்பந்தத்துக்கு உயிர்கொடுத்த போது சுற்றிலும் பன்றிகள் மூச்சடங்கிக் கிடப்பதைக் கண்டான்.

'நடுத்தர அளவு பன்றிகள் மூன்று... அவற் றிலிருந்து விலகி வலப்பக்கம் அந்தப் பெரிய - விளைச்சலான பன்றி... இவ்வளவையும் விற்று காசாக்கினால் ஒரு மாத சீவியத்துக்கு தாராளமாகப் போதும்!'

தங்கராசு ஒவ்வொன்றாக வெளியே இழுத்துப் போட்டான். தனித்து இயங்கியதில் மூச்சு முட்டியது இறுதியாக நெற்றிவியர்வையை வழித்துக்கொண்டு முதுகு காட்டிக் கிடந்த பெரிய பன்றியை நெருங்கினான்.

தீப்பந்தத்தை அருகே பிடித்த தங்கராசு முகம் வெளிறினான். பின்னங்கால்களில் ஒன்றை இழந்திருந்த அதன் முலையைச் சுவை த்தவாறு சிறுகுட்டியும் செத்துக்கிடந்தது!

வேங்கையன் சொன்ன அவர்களின் நேசத்துக்குரிய நொண்டியன் பன்றி! குனிந்து செத்துக்கிடந்த குட்டியைத் திருப்ப அதன் தாயின் முலைகளிலிருந்து சொரிந்திருந்த பால் கடைவாய்வழியே கசிந்தது.

தங்கராசுவுக்கு நெஞ்சுக்கூட்டைஎதுவோ உலுக்குவதுபோல்... செல்லாயியுடன் அந்தப் பச்சிளம் சிசுவின் பிணத்தைச் சுற்றி நின்று மூன்று பெண்பிள்ளைகளும் ஓலமிட்ட காட்சி... அவனுள் ஜீவாத்மா விழித்துக்கொள்கிறது.

துவக்கைப் போட்டுவிட்டு வெறுங்கை களுடன் பற்றறுத்த முனிவனின் பக்குவத்தோடு போய்க்கொண்டிருப்பது வெடியன் தங்கராசு அல்ல என்ற செய்தி செத்துக்கிடந்த பன்றி அறிய வாய்ப்பில்லை. ●



# திலீப வணக்கம்

## திலீபா...



ஈழக்கதிரவனின் ஒளிபெற்ற முழுநிலவே
பாரதத்தின் பாசாங்கை பாருக்குணர்த்துதற்கு
பசித்திருக்கத் துணிந்தவனே அன்று -
உன்தேகம் தேய்பிறையானபோது
இந்திய நெஞ்சில் ஈரமிருக்குமென்று
எதிர்பார்த்திருந்தோம்
காந்தி தேசத்தில் கனிவிருக்கு மென்று
கண்ணீருடன் காத்திருந்தோம்
பயனுள்ள பதில் சொல்லும்பாரத நாடு
பௌர்ணமியாகும் பார்த்திப நிலவென்று
நம்பிக்கையோடு நாமிருந்தோம்
பன்னிரண்டாம் நாள் பதில் கிடைத்தது
அகிம்சை நிலவுக்கு அமாவாசை அன்றென்று
ஆனால் நீயே விடுதலை வானில்
விடிவெள்ளி
இரகசியமாய் எமை வழிநடத்தும்
ஒளிப்புள்ளி.

——— ச.சந்திரன்.

## தெருவெல்லாம் தீபங்கள்

தன்னிகரில்லா எங்கள்
தலைவன் வழிதனிலே
தன்மானம் காப்பதற்கு
தானை சென்ற புலிமகனே
நோன்பு கூட உன்னாலே
பெருமையிங்கு பெற்றதடா
இன்றெங்கள் ஈழமண்ணில்
நிகழ்வதெல்லாம் உன்னாலே....

மக்கள்புரட்சி இங்கு
வெடிக்கட்டும் என்றாய் நீ
மாற்றங்கள் பலப்பலவாய்
நிகழட்டும் என்றாய் நீ
நிச்சயமாய் உன்வார்த்தை
நிதர்சனமாய் ஆகுதையா
நிதமும் எங்கள் முற்றத்தில்
நிகழ்வதெல்லாம் உன்னாலே...

துணைப்படையாய் மக்களெல்லாம்
திரண்டெழுந்து கொண்டாரே
புலி வீரர்க் காதரவாய்
படைமுன்னே சென்றாரே
பச்சைவயல் வளர்த்திங்கே
பசிபோக்க முனைந்தாரே
பண்பான தமிழீழம்
படைத்திடலாம் உன்னாலே...

தெருவெல்லாம் தீபங்கள்
திலீபா உன் உருவங்கள்
குருவாகி எம்மவரின்
குறியாகி நிற்கின்றாய்
இரு இரு நீ எம்படைகள்
இரும்பாக நிமிரட்டும்
ஏய்ப்பவர்கள் கூட்டமிங்கு
அழியட்டும் உன்னாலே...

மாவன்னா

## அந்த இடத்தில் நானும் மீட்டப்படும்(மீளும்) இந்த செம்மலின் நினைவுகள்

மா . நகுலேஸ்வரன்


அதோ அங்கே!
அங்கேயே தான்!
கேட்கிறது அந்த
மணியின் ஓசை
நன்றாகவே கேட்கிறேன்.
மணி ஒலிக்க
பூசகர் கையில்
தீபம் ஏந்தி
ஆராத்தி செய்கிறார்
கந்தப் பெருமானுக்கு.
நல்லூர் கந்தன்
நம்மூர் கந்தனுக்கு!
வசந்த மண்டப
பூசை முடித்து
எம் பெருமான்
பவனிக்கு தயாராக
தேரெழுகின்றார்.
மயிலேறிய பெருமான்
தேரேறி வருகிறார்.
தேரோடும் வீதியில்
தேகம் சிலிர்க்க!
நானும் தேரின்
பின்னே பக்தியுடன்
வலம் வருகிறேன்
இந்த இடம்,..?
இது திலீபனின் இடம்
கந்தனே சாட்சியாய் இருக்க
திலீபன் உயிர் உருகி வழிந்த இடம்.



## இந்த நாள்

புதுக்கவி

இந்த நாள்..........
வானம் அழுத நாள்.
பூமி அழுத நாள்
காற்று அழுத நாள்
கதிரவன் கூட
கதறி அழுத நாள்
தேரோடும் வீதியிலே
நீரேனும் அருந்தாது
திடமோடு நோன்பிருந்த
திலீபன் என்ற தியாகச்சுடர்
அணைந்த நாள்
விடுதலைப் பறவை ஒன்று
சிறகொடிந்து விழுந்த நாள்
பார் போற்றும் எம் பார்த்தீபனை
நாம் இழந்த நாள்.






## சிறுவர்கதை

# எனது செல்லப்பிராணி

சில மாதங்களுக்கு முன் ஒரு சிட்டுக்குருவி தினந்தோறும் எங்கள் வீட்டுக்கு வந்து நாங்கள் முகம் பார்க்கும் கண்ணாடியைத் தனது அலகுகளால் கொத்தும்.



சிட்டுக்குருவி அடிக்கடி வருவதை அவதானித்த நாங்கள் அது கூடு கட்டப் போகிறது என நினைத்து பிஸ்கற் பெட்டி ஒன்றை வீட்டிற்குள் கட்டி விட்டோம். ஆனால் சிட்டுக்குருவி பெட்டிக்குள் கூடு கட்டாமல் வீட்டு முகட்டிற்குள் தானே ஒரு கூடு கட்டி தனது துணையுடன் வாழத் தொடங்கியது.

அதிகாலை ஐ ந் மணிக்கெல்லாம் எழுந்துவிடும் சிட்டுக்குருவிகள் கண்ணாடியை வந்து கொத்தும். குருவிகளின் கீச் கீச் சந்தம் கேட்டு நான் கண் விழித்து எழும்புவேன். நான் எழுந்து கிட்டப் போனால் அவை கூட்டிற்குள் சென்றுவிடும். நான் எழும்புவதற்குத் தாமதித்தால் என் காதருகே வந்து கீச் கீச் என்று கத்தும். நான் கண் விழித்ததும் அவை பறந்து விடும். ஒவ்வொருநாளும் இப்படியே நடைபெறுவதால் சிட்டுக்குருவிகள் எனது அன்புக்கும் பாசத்திற்கும் உரியவை ஆயின.

ஒரு நாள் எங்கள் விட்டுக்கு நுளம்பெண்ணை அடிப்பவர்கள் வந்தனர். நாங்கள் வீட்டிற்குள் இருந்த பொருள்களை வெளியே வைத்து உதவி செய்தோம். அவர்கள் நுளம்பெண்ணை அடித்தார்கள். வீட்டின் மேற்கூரைக்கு நுளம்பெண்ணை விசிறும் போது கூட்டுக்குள் இருந்து குருவிகள் கீச் கீச் என்று கத்திக் கொண்டுபறந்துசென்றன. அப்போது தான் நான் நினைத்தேன். கூரைக்குள் குருவிகள் இருப்பதை மறந்துவிட்டோம் என்று.

அன்றிரவு முழுவதும் எனக்கு நித்திரையே வரவில்லை. பறந்து சென்ற குருவிகள் மீண்டும் வந்து எங்கள் வீட்டிற்குடியிருக்குமா? என்ற ஏக்கமும் கவலையுமாக இருந்தது. பொழுது விடிந்தது குருவிகள் வந்து கண்ணாடியைக் கொத்தவே இல்லை. நான் ஏமாற்றத்துடன் எழுந்துபாய் சுற்றும் போது பாயில் நாலைந்து சின்னஞ் சிறிய சிட்டுக்குருவிகள் விழுந்து செத்துக்கிடந்தன. நாங்கள் எவ்வளவு பெரிய பாவத்தைச் செய்துவிட்டோம் என மனம் ஏங்கித்தவித்தது.




குருவிக்கென்று பெட்டி கட்டும் போது எவ்வளவு சந்தோசமாகக் கட்டினோம் இப்போது எங்கள் கவலையீனத்தால் அதன் அழிவுக்குக் காரணமாகிவிட்டோம்.

குழந்தைகளே! நாம் உயிர்களிடத்தில் அன்பாய் இருப்பது மட்டுமல்ல, அவைகளைப் பாதுகாக்கவும் வேண்டும்.

நா.தயாளினி

## வாரம் ஒரு குறள்



*"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க*
*தான் பிறிது*
*இன்னுயிர் நீக்கும் வினை"*

உயிர்களைக் கொல்லாமல் இருப்பது நல்லது. எமது உணவுக்காகப் பிற உயிர்களைக் கொல்கின்றோம். சிலர் தேவையில்லாமலும் பிற உயிர்களைக் கொலை செய்கின்றதைக் காண்கின்றோம். அந்த உயிர்கள் படும் வேதனையைக் காண்கின்றோம். நாம் அப்படித் துன்பப்படத் துணிவோமா? அடுத்தவர் எமக்குத் துன்பம் செய்ய அனுமதிப்போமா? ஆகையால் அடுத்தவருக்குத் துன்பம் செய்யாது இருக்கப் பழகுவோம். கொலையைத் தவிர்ப்போம்.

## சொற்சிலம்பம்-04

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கெ | பு | க | ம | ரி | வி | யு |
| து | டி | க் | ர் | டோ | கா | யி |
| சீ | க | கு | ய | தீ | ர | ந |
| ளி | லி | மா | வீ | டி | ர | கோ |
| கு | த் | த | பு | கி | ப் | தி |
| க | மோ | ம் | ந | தே | ன் | அ |
| மீ | சௌ | வீ | வை | டீ | ரு | து |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பிவையுங்கள்.

காட்டு மிருகங்கள் மூன்று

01) ..........................................
02) ..........................................
03) ..........................................

பறவைகள் இரண்டு

01) ..........................................
02) ..........................................

பெயர்

முகவரி :- ..........................................

சொற்சிலம்பம் -04
ஈழநாதம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.

## சொற்சிலம்பம் - 02 இன் விடைகள்

01. மல்லிகை.
02. முல்லை.

01. புலி
02. சிங்கம்.
03. யானை.

### சொற்சிலம்பம் - 02 இன்பரிசுக்குரியவர்

ர.அனோஜிதன்,
தரம் - 01,
மு/சிறி சுப்பிரமணிய வித்தியாசாலை.

### சொற்சிலம்பம் - 02இன் பாராட்டுக்குரியவர்கள்

01) க.மாலிகா, அச்சுவேலி,
02) கு.தமிழ்ப்பிரியா, கிளி/இராமநாதபுரம் ம.வி,
03) த.கஸ்தூரி, ஏழாலை மத்தி,
04) பே. கவிதா, வவுனியா.

## அழகு

மண்ணுக்கு நிறம் அழகு
மரத்துக்கு இலை அழகு
மலருக்கு மணம் அழகு
மனதுக்கு குணம் அழகு

கடலுக்கு அலை அழகு
கரைக்கு மணல் அழகு

தரணிக்கு தமிழ் அழகு
தமிழுக்கு குறள் அழகு

காந்தன்

## சிந்தனைக்கு சிலவரிகள்

தாயை மதித்தவன் தரணியை ஆள்கிறான்
தந்தையை மதித்தவன் தருமத்தை நாடுகிறான்.
உழைக்க மறந்தவன் ஊர்தூற்ற அலைகிறான்.
பணத்தைச் சேர்த்தவன் குணத்தை இழக்கிறான்
படிக்க மறந்தவன் பரீட்சையில் தோற்கிறான்.
நல்லதை நினைப்பவன் நன்மையைச் செய்கிறான்.
நடுநிலை வகித்தவன் நல்லாய் வாழ்கிறான்.

செ.தர்சினி,
கிளி/கறுக்காய்த்தீவு அ.த.க. பாடசாலை

## கைவண்ணம்



கோ.தர்சினி
மு/பாண்டியன்குளம் ம.வி.

## வெள்ளி விழாக்காணும் எமது வித்தியாலயம்

நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே நிறைந்த விசுவமடுப்பிரதேசத்தில் 1978ம் ஆண்டு கட்டப்பட்ட எமது வித்தியாலயம் பல அதிபர்களின் அயாராத உழைப்பினைப் பெற்று இன்று அதிபர் திரு போ - மாசிலாமணி அவர்களின் தலைமையின் கீழ் வெள்ளி விழாக் கோலம் பூண்டு நிற்கிறது.

ஆம், இருபத்தைந்து அகவைகளைப் பூர்த்தி செய்துவிட்ட எமது வித்தியாலயம் தனது படிப்படியான வளர்ச்சியில் க.பொ.த.உயர்தர வகுப்பில் விஞ்ஞான,கணித, கலை, வர்த்தகப்பிரிவுகளைக் கொண்டு விளங்குகின்றது.

எமது பாடசாலையில் முத்தமிழ் மன்றம் போன்ற பல மன்றங்களும், சாரணர் அமைப்பு போன்ற பல அமைப்புக்களும் இயங்கி மாணவர்களின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்கின்றன.

பல போட்டி நிகழ்வுகளிலும் மாவட்ட, மாகாண நிலைகளிலும் எமது பாடசாலை பங்கு பற்றும் தகுதியைப் பெற்றுள்ளது. எமது பாடசாலை வளவு பல ஏக்கர் விஸ்தீரணமுடையது.

விளையாட்டு, கல்வி, இயல், இசை, நாடகத்துறைகளில் தனக்கென ஒரு தனியிடத்தை நீண்டகாலமாகவே வகித்து வரும் எமது வித்தியாலயமானது எதிர்காலத்தில் முல்லைமாவட்டத்தின் பிரபலமான பாடசாலைகளில் ஒன்றாக மிளிரும் என்பதில் ஐயமில்லை.

வெள்ளி விழாக்காணும் எமது வித்தியாலயம் தனது வரலாற்றில் இன்னும் எத்தனையோ பல விழாக்களைக் கண்டு சிறப்புற மாணவர்களாகிய நாம் வாழ்த்துவதோடு, எம்மை உயர்த்தி நிற்கும் எமது வித்தியாலயத்தின் உயர்வுக்காகப் பாடுபடுவோமாக.

ஜெ.ஜெயூரன்,
மு/விசுவமடு.ம.வி.






# பாடசாலை போகவேணும்

-ஆங்கிலத்தில் குவான்ஹுவா-

மேற்படி விபத்தை கேள்விப்பட்ட ஆசிரியர் சாய் பாடசாலை முற்றத்துக்கு விரைந்து வந்தார். அந்த பெண்பிள்ளையினுடைய நெற்றியில் ஏற்பட்டிருந்த காயத்துக்குக் கட்டுப் போட்ட அவர், என்ன நடந்தது என்று விசாரித்து, என்ன நடந்தது என்று அறிந்ததும் ராய்க்கு நல்ல பேச்சுக் கொடுத்தார்.

ஆனால், ஆசிரியர் உள்ளே போவதற்கு என்று திரும்பியதுமே, திடீரென்று ஓடிவந்த அவன் இரும்பனின் மேலங்கிக் கொலரைப் பிடித்துக் கொண்டான். ஆசிரியர் அவர்களை பிரித்து விட வேண்டியதாயிற்று. பெரிதாக சத்தமிட்டபடியும் வசைபாடிய படியும். இன்னொரு சுற்று சண்டைக்காக ராய் ஓடிவந்தான். இதனால் கோபமுற்ற ஆசிரியர் அவனைப் பிடித்து கீழே தள்ளிவிட்டு இரும்பனின் கையைப்பிடித்து வகுப்புக்குள் அழைத்துச் சென்றார். இரும்பனைத் தாக்கியவனோ சிணு சிணுத்துக் கொண்டே தனது வீட்டுக்கு ஓடிப் போனான்.

ஆசிரியர் சாய் வகுப்பு தொடங்குவதற்கான மணியை அடித்தார்.மாணவர்கள் வகுப்புக்குள் செல்ல வரிசையாகிக் கொண்டிருந்த பொழுது ஒரு மனிதன் புயலைப்போல் உள்ளே வந்தான்.

"ராயினுடைய மகனின் தலைக்கு மேலே கூடு கட்டும் பறவையையும் தூக்கில் போட வேண்டும்" என்று உரக்கக் கத்திய அவன், "எனது எசமானன் கொடுத்த சோற்றை தின்றபின்னும் சின்ன முதலாளிக்கு தொல்லை கொடுக்க துணிந்தான். தன்னுடைய தேவைகளைக் கவனிப்பவர்களுக்கு முன்னால் நன்றியுடன் வணங்குவதற்குப் பதிலாக அவரையே தாக்கத் துணிந்தான்" என இரைந்தான். ஆசிரியரின் மேலங்கியின் கைப்பகுதியை பிடித்து இழுத்த இரும்பன், "நரகத்தின் இரண்டாவது ராசா வருகிறான். அவன் உங்களைத் தாக்கக்கூடும்" என்று எச்சரித்து விட்டான்.

"எனக்கு அவனுக்குப் பயமில்லை" என்று ஆசிரியர் சாய் பதில் சொன்னார். பண்ணையாரின் கையாளான காவோ ஹாய் - சென் என்ற அந்த மனிதன் இரும்பனை நோக்கி காறித்துப்பிவிட்டு, தன் முஷ்டியை உலுப்பிக் காட்டினான். "பிச்சைக்காரநாயே! அமைதி பேணும் குழுவுக்கு தர உன்னிடம் காசுஇல்லை. ஆனால் பள்ளிக்கு வருவதற்கு உன்னிடம் காசு இருக்கிறது. போடாவெளியே! நாற்றமெடுக்கிற பிச்சைக்காரர் எவரும் வளவுக்குள்ளேயே வரக்கூடாது என்று ராய் முதலாளி கூறியிருக்கிறார்" என்றான்.

அந்த கையாளை நோக்கி ஒரு அடி முன்னால் எடுத்து வைத்த இரும்பன், "இது உன்னுடைய பள்ளிக் கூடமா? அப்படியானால் இதை ராய் வளவுக்குள் கொண்டு போகலாமே." என்றான்.



அந்தக் கையாள் இரும்பனைத் தாக்க கையை உயர்த்திய பொழுது, இரும்பனைக் காக்கும் விதத்தில் அவனுக்கு முன்னால் வந்து நின்ற ஆசிரியர், கண்டிப்பான முறையில் அந்த மனிதனைப் பார்த்து விட்டு, "இங்கு எதற்கு வந்தாய்?" என்று கடுமையாக கேட்டார்.

ஆசிரியரை நோக்கி வஞ்சகமான பார்வையைச் செலுத்திய அந்த மனிதன் "நான் எதற்காக இங்கே வந்திருக்கிறேன் என்று நீ நினைக்கிறாய்? நான் பழிவாங்க வந்திருக்கிறேன். நீ எனது சின்ன முதலாளியை இழிவாக நடத்தினாய் அல்லவா?" என்றான்.

இரும்பனால் மேலும் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஆசிரியரின் பின்னாலிருந்து பாய்ந்து முன்னால் வந்த அவன், "இழி வாக நடத்தியதா? உன்னுடைய சின்ன முதலாளிதான் ஓட்டுத் துண்டால் அந்த பெண் பிள்ளைக்கு எறிந்தான்" என்றான்.

ஆசிரியர் இரும்பனை இழுத்து தடுத்து விட்டு, "யாரை நீ திட்டுகிறாய் என்பதை எங்களுக்குச் சொல்?" என்று அவனிடம் கேட்டார்.

"நான் யாரைத் திட்டுகிறேன் என்று உனக்குத் தெரியாதா?" என்று கத்திய அவன் உலகம் எங்கும் இருக்கும் ஏழைகள் மீது தனக்கு இருக்கும் வெறுப்பையெல்லாம் காட்டிய பார்வையை ஆசிரியர் மீது செலுத்தினான்.

"எனது சின்ன முதலாளியை இழிவுபடுத்த இந்தக் கூகுடும்பப் பரதேசிக்கு நீ உதவினாய் அல்லவா?"

ஆசிரியர் சாயின் ஆத்திரம் எல்லை மீறிப்போய்விட்டது. "இங்கே பார். இது ஒரு பள்ளிக் கூடம். மாணவர்கள் சின்ன முதலாளியாய் இருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன, அவர்கள் எப்படி ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டும் என்று வழிநடத்துவது ஒரு ஆசிரியரின் கடமைதான். ஆசிரியர் மீது வசைபாடி பாடசாலை நடப்பதற்கு இடையூறு விளைவித்துக் கொண்டி ருக்கும் நீ எப்படியான மனிதன்?"

தனது கையை வாசலை நோக்கி நீட்டியவர், அந்தக் கையாளை வெளியே போகும் படி ஆணையிட்டார்.

"அப்படியா..." என்று ஆத்திரத்தோடு தொடங்கிய அவன், மேலங்கியின் கைகளை மேலே இழுத்துவிட்டு, "இது நீ யார் என்பதை உனக்கு புரிய வைக்கும்" என்று கூறிக் கொண்டே ஆசிரியரின் முகத்தை இலக்கு வைத்து கையால் குத்தினான்.

ஆசிரியர் சாய் விரைந்து செயற்பட்டு, அவனது கையைப் பிடித்து வலுவாக அவனை பின்னால் தள்ளிவிட்டார். தன் முதலாளியின் காலைக்கழுவிப் பிழைக்கும் அந்தக் கைக்கூலி, இதனை எதிர்பார்க்கவில்லை. கிராமவாசிகள் அவன் மீது கடும் வெறுப்புக்கொண்டிருந் தாலும் அவன்மீது கைவைக்க இதுவரை எவரும் துணிவு கொண்டதில்லை. வசைபாடிக் கொண்டும் உறுமிக் கொண்டும் ஆசிரியரை நோக்கி இன்னொரு தாக்குதலுக்காக பாய்ந்து வந்தான்.

தமிழில்
வி.பி.யோசப்

(தொடரும்...)

---

(08ம் பக்கத் தொடர்ச்சி)

வத்தால் கடத்திச் சென்று கொலை செய்யப்பட்டார். இளையமகன் ராசா ENDLF இனரால் கடத்திக் கொலை செய்யப்பட்டார். கடைசி மகன் கிளி நோயால் சாவடைந்தார்.

இவ்வாறு ஏற்பட்ட துன்ப துயரங்கள் சோதனை வேதனைகளை நினைத்து வருந்தித் தளர்ச்சி அடையாது வாழ்க்கையில் ஏற்படுகின்ற சகலவற்றையும் சமாளிக்கின்ற தன்னம்பிக்கை. திறமை. நிதானம் என்பவற்றை ஐயா கொண்டிருந்தார்.

ஐயாவின் கவலைகள் எல்லாம் சிங்கள -இந்திய அரச படைகளின் வன்முறை காரணமாக மிக்க கொடூரமான துன்ப துயரங்களை அவல மரணங்களைச் சந்தித்து வரும் தமிழ் இனத்தைப் பற்றியேதம் இனத்திற்காகத் தங்களையே அர்ப்பணித்து வரும் போராளிகளின் இழப்புக்களை துன்பதுயரங்களைப் பற்றியதாகவே இருந்தது. அந்த உணர்வே ஐயாவிடம் ஆழமாகக்காணப்பட்டது.

இப்படியிருக்கையில் 21.11.1989. ஆம் ஆண்டு முதன் முதலாகத் தமிழீழம் எங்கும் மாவீரர் நாள் தேசிய நாளாக ஆரம்பித்துக் கொண்டாடப்பட்டது.

இவ்வெழுச்சிநாள் இந்திய இராணுவத்தினரின் இரும்புப்பிடிக்குள் இருக்கும்போதே கொண்டாடப்பட்டது ஒரு தனிச்சிறப்புக்குரியதாகும்.

இத்தகையதொரு புனிதநாளை ஐயா துணிவாற்றலுடன் தான் சிற்றூர் மக்களின் பூரண ஒத்துழைப்புடனும் பிள்ளையார் கோயிலை மையமாகவைத்துக் கொண்டாடினார்.

IPKF இனரின் முகாம் சிற்றூருக்கு மிக அண்மையில் மகாகமம் கிராமத்தில் இருந்தும் நெஞ்சுரத்துடன் தான் சார்ந்த ஊர் மக்களுடன் இணைந்து எழுச்சிமிகு உணர்வை வெளிப்படுத்தி மாவீரர்களுக்கு வீரவணக்கத்தினைச் செலுத்தினார்.

இந்நிகழ்வில் போராளிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

மாவீரர்நாளுக்கான சுவரொட்டிகளை சூரக்கல் முகாம் IPKF இனர் கிழித்தெறியும் செய்தி இவ்வூர் மக்கள் சிலரால் போராளிகளிடம். தெரியப்படுத்தப்படுகின்றது.

இதனை அடுத்து மேஜர் பவான். வினோத் தலைமையில் சிறு அணியினர் விரைவான துணிகரத்திடீர்த் தாக்குதலை குறித்த IPKF இனர் மீது தொடுத்தனர்.

இத் தாக்குதலில் ஒரு அதிகாரி உட்பட மூன்று IPKF இனர் கொல்லப் பட்டனர். இவர்களிடமிருந்து ஒரு SMG, இரு SLR, ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இவ்வாயுதங்களையும் காயமடைந்து பின்னர் வீரச்சா வடைந்த லெப். திவாகரனையும் இன்னும் காயப்பட்ட போராளிகள் இருவரையும் மிஞ்சி இருந்த நான்கு போராளிகளும் சுமந்து சுங்கான் குழிச் சிற்றூரை நோக்கி நகரலாயினர். பகல் நேரம் சாதகமற்ற இடத்தில் வைத்து இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதனால் பின்வாங்கல் விரைவாகச் செய்யப்பட வேண்டியதாக இருந்தது.

தமது உடல்வலுவிற்கு அப்பாற்பட்டு இச்சுமை இருந்ததினால் விரைவாகவே உடல் சோர்ந்து களைப் படைந்தனர். விரைவாகப்பின் வாங்கலுக்கு அன்று அனைத்து உடல் உறுப்புக் களும் மறுத்தன.

இந்நெருக்கடியை ஆபத்தை எதிர்கொண்ட போராளிகளை இச் சிற்றூர் மக்களின் மாட்டுவண்டில் சுமந்து பாதுகாப்பாகக்கொண்டு வந்து சேர்த்தது.

IPKF தமிழீழத்தை விட்டு வெளியேறிய 1990 ஆம் ஆண்டு ஆரம்ப காலப் பகுதியில் அமைதியான போர் ஓய்வு ஒன்று ஏற்பட்டது.

இவ்வமைதிச் சூழல் சில மாதங்கள் மட்டுமே நீடித்தது. இவ் ஆண்டின் மத்தியகாலப் பகுதியிலேயே இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகியது.

இப்போரின் ஆரம்பத்திலேயே கிண்ணியா பொலிஸ் இராணுவ முகாம்கள் தாக்கி அழிக்கப்பட்டன. இச் சம்பவங்களின் பின்னர் கடற்படை பீரங்கிப் படகுகளின் உதவியுடன் தரையிறங்கும் போது கடுமையான நேரடிச் சமரும் நடைபெற்றது.

இதன் போது தேவா. அன்ரன் ஆகிய இரு போராளிகள் வீரச்சாவடைந்தார்கள். இவ்விரு வித்துடல்களையும் முகாம் தாக்குதலின் போது காயப்பட்ட போராளிகளையும் வாகனம் சுமந்த வண்ணம் சுங்கான்குழிப் பாடசாலையைச் சென்றடைந்தது.

ஐயா சுறுசுறுப்பாக இயங்கலாயினார். காயப்பட்டபோராளிகளுக்கான உணவொழுங்கு. உடன் தண்ணீர்த் தாகத்திற்கு ஏற்ற பானம் தாயரித்தல் ஆகிய பணிகளைத் தானே முன்னின்று செய்து முடித்தார்.

வீரச்சாவடைந்த இரு மாவீரர்களின் (தேவா. அன்ரன்) ஆகியோரது வித்துடல்களையும் பட்டியனூற்றுக் குளமுடி விலுள்ள திடலில் இறுதி மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது. ஐயா தான் முதல் மண்ணைத்தூவியும். பெற்றோர்களுக்குரிய கடமை களையும் செய்து முடித்தார். இங்கு இன்னொரு சம்பவத்தையும் நினைவு கூருவது பொருத்தமானதாக இருக்கும். ஐயாவின் மகள் கிளி பின்னாளில் சாவடைந்த பொழுது பிள்ளைகளைத் தாட்டஇடத்திலேயே மகள் கிளியையும் அடக்கம் செய்ய வேண்டு மென்று சொல்லி அவ் விடத்திலேயே அடக்கம் செய்தார்.

இக் காலகட்டத்தில் சிங்கள அரச படைகளின் வன்முறைகள் உச்ச கட்டத்தை அடைந்தது. இச் சிற்றூரை விட்டு அனைத்துக் குடும்பங்களும் முழுமையாக இடம்பெயர்ந்து அகதி முகாம் வாழ்க்கைக்குள் கலந்து போனார்கள். ஐயா. மூத்தமகள். பேரப்பிள்ளைகளுடன் வன்னிக்கு வந்து சேர்ந்தார். ஆனால் மனையாள் உடல் ஊனமுற்ற மகள் பொன்னாளுடன் அங்கேயே தங்கி விட்டார்.

SADO ரவியினால் சுதந்திரபுரத்தில் ஒழுங்கமைத்துக் கொடுத்த துமிலன் குடியிருப்பில் குடியமர்ந்து ஐயா வன்னி வாழ்க்கையை ஆரம்பித்தார்.

இங்கு ஐயா ஓய்ந்து ஒதுங்கி இருந்து விடவில்லை. மாவீரர்களின் இறுதி நிகழ்வுகள். இயக்க நிகழ்வுகள் மற்றும் இயக்



கத்தினால் மேற்கொள்ளப் படும் பொதுப்பணிகள் அனைத்திற்கும் தன்னால் முடிந்த பங்களிப்பைச் செய்து புதுமைப்போக்கில் செயற்பட்டார்.

இக்காலப்பகுதியில் சந்திரிகா ஆட்சிக்கு வந்ததும் மீண்டும் அரசியல் தீர்வு மூலம்தான் தீர்வுகாண முடியுமென்ற பிரச்சாரத்துடன் பேச்சுவார்த்தைக்குவரலாயினர்.

இவ் அரசியல் சூழலை ஐயா எப்போதும் நம்பியது கிடையாது. தமிழ் மக்களின் நீதியான. சுதந்திரமான. நியாயமான எதிர்பார்ப்பிற்கு உட்பட்டவகையிலான தீர்வைச் சிங்களவர்களால் தரமுடியாது என்பதே ஐயாவின் அரசியல் நிலைப்பாடாக இருக்கும். நீதி இல்லாமல் ஒத்துப்போதல் யதார்த்தமற்றது. சிங்களவனுக்கு நல்லஅடி கொடுத்துத்தான் எமது உரிமையைப் பெறமுடியும் என்ற கருத்தையே தன்னுடன் பழகுபவர்களிடம் சொல்லிக் கொள்வார்.

மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகியது. இவ் வரலாற்றுக்கால கட்டத்தில் தான் அதிகம் போரியல் அதிசயங்கள் நிகழ்ந்தன.

யுத்தகால வலுச்சமநிலை மாறி விடுதலைப்புலிகள் இராணுவ மேலாதிக்க நிலைக்கு வந்த காலகட்டம்.

இக்காலப் பகுதியில் ஐயா துடிப்புடன் செயற்படும் ஒரு உற்சாகமான மனோநிலையில் காணப்பட்டார். தமிழினம் பெரும் படைப்பலத்துடன் தலைநிமிர்ந்து வாழும் காலத்தை தான் சாவடைவதற்கு முன் பார்க்கக் கிடைத்ததற்காகத் தேசியத் தலைவரைப் பெருமையுடன் பாராட்டிக் கதைப்பார்.

இறுதிக் காலங்களில் இளைய சந்ததியினருடன் தனது உணர்வலைகளையும். அனுபவங்களையும் பகிர்ந்து கொள்வதில் கூடுதலான நேரத்தைச் செலவிட்டார்.

ஐயாவின் மனைவி சுகயீனம் ஆக இருப்பதைக் கேள்விப்பட்டு 1999 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ஊர் சென்றவர் திரும்பி வரவில்லை. 81 வயதில் சாவடைந்தார்.

தாய் மண்ணைக் காப்பாற்றுவதற்காகத் தாய்மொழியைப் பாதுகாப்பதற்காகத் தம் சுயநலன்களைத் துறந்து துன்பப்படுவது போற்றப்படவேண்டிய ஒன்றேயாகும். அந்தவகையில் ஐயாவின் தன்னலமற்ற வாழ்வும் அர்த்தமுடைய ஒன்றாகவே நிலைத்து நிற்கிறது.

☞ சமூகத்தை ஒன்றாகப் பிணைக்கும் தங்கச் சங்கிலி, கருணை. - யோஹன் கேத்தே




## பசுமை நினைவுகள் தோழிக்கு

சிட்டுக்குருவிகளாய் நாம்
பறந்து திரிந்த வயல் வெளியில்
என் தோழி உன் தம்பியை கண்டேன்
பட்டாம் பூச்சி போல்–எம்மோடு
பறந்து திரிந்தவன் ஒற்றைக் காலோடு
நின்றானடி.....
புத்தகச் சுமையோடு அன்று வயல் வெளியில்
சிட்டெனத் திரிந்தவன்
துப்பாக்கி ஏந்தி துரிதமாய் நடக்கின்றான்
அவன் பின்னாலே உன் பள்ளி வாத்தியார்
பயிற்சி எடுத்தாராம்?
கல்லூரி வாழ்விலே நீ கண்ட கோவலன்
கழுத்திலே மாலையுடன் கரும்புலி நாள் அன்று
ஊர்வலம் வந்தான் படமாய்
சுடச் சுட கவி எழுதும் கணேசன் வாத்தியும்
களம் சென்று மாண்டாராம்
துணைப்படைக்கு போய் வந்த துரைஅப்பு
சொன்னாரடி.

**கவிப்பிரபா**



## விதி என்ன விதி

நாமெல்லாம் பறவைகள்
நமக் கேது கவலைகள்
ஆளுக் கோர் இலட்சியம்
வெல்வது நிட்சயம்
ஏன் நடக்கவில்லை

விதி என்ற கூட்டுக்குள் நாம்
விரும்பிய வாழ்க்கை
கிடைக்காது என ஏங்காதே.
வித்தகராக நாமிருக்கும் போது
விதி என்ன விதி
வென்று விடு விதிதனை

ஆசைகளை மனம் தனில் சுமந்து
சவாலுடன் எதிரிகளை அழிக்கும் எம்
ஆயுதப் படை தனைப்பார்
ஆ.....என வியந்து விடுவான் எதிரி கூட
அங்கு உனக்கும் இடமிருக்காம்

அச்சுவேலி–சுகந்தினி

## விலகின்

இருள் விலகின்
வெளிச்சமோடிவரும்
சோர்வு விலகின்
சுகம் நாடி வரும்
அடிமை விலகின்–நல்
வாழ்வு தேடிவரும்
தாழ்வு விலகின்
நட்பு கூடிவரும்
சண்டை விலகின்
சமாதானம் பிறந்துவரும்

க. அப்பன்



## வேஷங்கள்

சாயம் பூசிய புன்னகைகள்....
உயிர்ப்பற்ற பார்வைகள்.....
நகங்கள் உள்ளிழுத்து.....
கை குலுக்க நீளும் கரங்கள்...
முன் மறைத்து
முத்தம் தரும் கன்னங்கள்....
அருவருப்பூட்டும் இவ்வுறவுகள்
பாவகாரியமாய்ப் படுது.
ஆண்ணாகவோ பெண்ணாகவோ
வேண்டும் ஒரு மனிதன்
உறவு கொள்ள.

அலைமகள்



## சொல்லவேண்டி வந்த பொய்கள்



அண்மையில் எனது தோழி நோர்வேயிலிருந்து வருவதாக ரெலிபோன் எடுத்திருந்தாள். எனக்கோ பெரியதொரு சந்தோசம் அவளை. அவளின் குடும்பத்தைப் பார்க்கப்போகிறேன் என்று.

அந்த நாளும் வந்துவிட்டது.

எனது தோழி இங்கு என்ன மாதிரி இருந்தாளோ அதைவிட சற்று கண்ணுக்குக்குளிர்ச்சியாகவும் அவளின் பிள்ளைகள் நிஷா. சாளி இருவரும் தக்காளிப்பழம் போல தள தள எனவும் இருந்தார்கள். என்னைக்கண்டதும் ஓடிவந்து கட்டியணைத்தாள் என் அருமைத்தோழி தர்சி. தன்கணவர் பிள்ளைகளுக்கு ஏற்கனவே என்னை அறிமுகப் படுத்தியிருந்தாலும் நேரில் அறிமுகம் செய்து வைத்தாள்...

நீண்ட நாட்களின் பின் இங்குள்ளவர்கள் பற்றி நிறையவே கேட்டுக்கொண்டிருந்தார்கள் தர்சியும் அவள் கணவன் சுதாகரனும்... நானும் எல்லாவற்றையும் சொல்லிக்கொண்டே இருந்தன்.

ஒருமாத லீவில் வந்ததாகச் சொன்னார்கள். எனக்கோ அங்குள்ள கலாச்சாரம். நடைமுறை பற்றி அறிவதில் ஆர்வம் மேலிட தர்சியைத் துழைத்தெடுத்தேன்.

அவள் என்னைப் பார்த்துச்சொன்னாள்..."நீ எவளவு சந்தோசமாகவும். சுதந்திரமாகவும் தன்னிறைவோடையும் இருக்கிறாய். உன்னைப்பாக்க எனக்குப்பொறாமையாய் இருக்கு. ஆனால் அங்க நான் என்ர நிம்மதிய. சுதந்திரத்த எல்லாம் இழந்திட்டன்" என்றாள்.

ஏன் அப்பிடிச் சொல்லுறாள் என்று நினைக்க அவள் தொடர்ந்தாள்...

"காலையில சமைச்சு வீட்டக் கவனிச்சு விட்டு பிள்ளையள அவரோட விட்டிட்டு வேலைக்குப் போனா அங்க என்னையே பிழிஞ்செடுத்துத்தான் வீட்டு வேலை செய்யவேணும் இங்க மாதிரியில்ல அங்க முழுப்பலத்தையும் சேர்த்துத்தான் தேய்க்க வேணும்... அதோட சின்ன ஊத்தையள் இருந்தாலும் சும்மா விடமாட்டார்கள். கைஎல்லாம் தொப்பழம் வந்து வெடிக்கும்... நான் வீட்ட வர அவர் வேலைக்குப்போவார். அடுத்தகட்டம் எங்கட வீட்டக்கவனிச்சு படுக்கப்பொழுது சரி..... அதோடேயே அடுத்த நாளும் வேலைக்குப் போக வேணும்... பாவமடி நிஷாவும். சாளியும். எங்கட அரவணைப்பை நிறைய இழந்திட்டுதுகளடி." என்றாள் மனவேக்காடோடு...

அவர்கள் வந்திருக்கிறார்கள் என்றதை அறிந்து இன்னும் எங்கள் நண்பர். நண்பிகள் ஒருநாள் ஒன்று கூடிக் கூத்தும் கும்மாளமுமாக அந்தநாள் நினைவுகளோடு கலந்திருந்தபோது இன்னுமொரு நண்பி தர்சியிடம் கேட்டாள். " என்னடி வடிவாய் இருக்கிறாய் அங்க என்ன வேலையள் செய்யிறாய்" என்று.

அதற்கு அவள் என்னை ஓரக்கண்ணால் பார்த்துவிட்டு சடாரெனச்சொன்னாள் "நான் அங்க ஒரு பள்ளிக்கூடத்தில படிப்பிக்கிறன்." என்று.

பொ.நந்தினி

## குறுக்கெழுத்துப் போட்டி இல–39

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | | | | | ■ |
| 08 | | | | | ■ | 14 |
| | 16 | | ■ | 19 | | |
| | | 24 | 25 | 26 | | |
| 29 | | | | ■ | 34 | |
| ■ | | | | 41 | | ■ |
| 43 | ■ | | | | | ■ |

### இடமிருந்து வலம்

01. அகந்தை.
08. இனிமை
16. குதிரை.
19. எரிப்பதற்குப் பயன்படுவது.
26. ஆலம் குழம்பி உள்ளது.
34. கல்லிலே செதுக்குவது தலை கீழாக உள்ளது.
43. மலர்.

### மேலிருந்து கீழ்

01. கடை ஏழு வள்ளல்களில் ஒருவன்.
02. பார்த்தீபன் உபதேசம் குழம்பி உள்ளது.
14. மலையும் மலை சார்ந்த இடமும் குழம்பி உள்ளது.
24. நினைவு நாளில் வெளியிடப்படுவது .
25. இது புற்றெடுக்க பாம்பு குடிகொள்ளும்.
34. சீதையின் பிறப்பிடம் தலைகீழாக உள்ளது.
41. மடுவிற்கு எதிரானது.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.37 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. வசிகரித்தல்.
09. வஞ்சித்தல்.
15. அப்புத்தளை.
22. புத்திரன்.
31. தந்திரம்.
38. கடுக்கன்.

**மேலிருந்து கீழ்**

02. சிவப்பு.
04. சிரித்திரன்.
15. அதிசயம்.
17. புத்தகம்.
28. கமலம்.
37. தலை.
47. மறம்.

**குறுக்கெழுத்துப்போட்டி இல.37 இன் பரிசுக்குரியவர்**

சு. யோகதர்சினி,
09,முருகேசர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**குறுக்கெழுத்துப்போட்டி இல.37 இன், பாராட்டுக்குரியவர்கள்.**

க. துளசி,
வள்ளிபுனம்.

திருமதி.சி.சரோ,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

S.நிர்மலா,
நட்டாங்கண்டல்.

அ.கல்பனா,
கரடிபோக்குச் சந்தி,
கிளிநொச்சி.

ஆர். கம்சா,
10ம், வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

ம.சுமங்கலா,
உருத்திரபுரம் ம.வி,
கிளிநொச்சி.

**இளையவர்களே!**
**மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.**

குறுக்கெழுத்துப்போட்டி,இல.39
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

## வெற்றி உங்களுக்குத்தான்



### ஊக்கமாத்திரை

இலட்சியம் என்று சொல்லப்படும் குறிக்கோள் இரண்டு வகைப்படும். ஒன்று நீண்டகாலக் குறிக்கோள், மற்றொன்று குறுகிய காலக் குறிக்கோள், உங்களுடைய பல குறுகிய காலக் குறிக்கோள்களில் நீங்கள் காணும் வெற்றி உங்களுக்கு மிகுந்த நம்பிக்கையை அளிக்கிறது, இல்லையா? மாணவர்களே நீங்கள் நினைவில் கொள்ளுங்கள் எந்த ஒரு மனிதனும் அடிப்படைப் படிப்பைக் கற்றபின்பு தான் அவன் வைத்தியனாகவோ, ஆசானாகவோ மாறுகின்றான். உடனேயே நான் இவ்வாறு வரவேண்டும் என்று நினைக்கின்றவுடனே அவன் மாறி விடுவதில்லை: அதற்கு வர முயற்சி செய்யவேண்டும்.

அதனால் எவரேனும் பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெற்று விட்டால் அவன் கெட்டிக்காரன் போல இருக்கின்றான் என்று மலைத்து விடாதீர்கள்! நீங்களும் அவனைப் போல் நன்றாகப் படியுங்கள். நீங்களும் அவனைப் போல் முன்னுக்குவர முடியும். இதில் சந்தேகமேயில்லை. கிடைத்த வாய்ப்பை மிகுந்த தன்நம்பிக்கையுடன் பயன்படுத்திக்கொள்ளுங்கள் அவ்வளவுதான் நீங்களும் அதே பாதையைப் பின்பற்றினால் உங்களுக்கும் அதே வெற்றி கிடைக்கும்.அதன்பிறகு 'நம்மால் கூட இப்படி முடிந்துவிட்டதே' என்று நீங்களே உங்களைப் பற்றி மலைத்துப் போவீர்கள்.

எண்ணங்கள் அதிலும் தன்னம்பிக்கை கொண்ட எண்ணங்கள் எப்படிச் செயல்களாக சாதனைகளாக மாறுகின்றன. பார்த்தீர்களா? உங்களது இலட்சியத்தைப் பற்றி தினமும் சிந்திப்பதனால் அது நாளடைவில் உங்கள் மனதில் 'பசுமரத்து ஆணி போல' ஆழ்மனதில் பதிந்து எண்ணங்கள் எப்படியோ பிரபஞ்ச அறிவுடன் தொடர்பு கொண்டு இலட்சியத்திற்கான பாதையில் எண்ணம் நகர்கிறது. உங்கள் மனத்தை ஒரு சொர்க்கவாசல் என்று எண்ணிக்கொள்ளுங்கள். உயர்ந்த நல்ல எண்ணங்களை நிரப்புவதனால் உங்கள் வாழ்வில் நீங்கள் பல அதிசயங்களைப் படைக்கலாம். உங்களது ஆழ்ந்த விருப்பம், தன்நம்பிக்கை எவ்வளவு உயரமாகவுள்ளதோ அதே போல் உங்கள் வாழ்க்கையும் உயர்ந்து நிற்கும்.

மேலும் உங்களில் ஏதேனும் பலவீனமிருந்தால், அதனைப் பிறர் சுட்டிக் காட்டும் போது நீங்கள் கோபப்படக்கூடாது. ஏனெனில் உங்கள் பலவீனங்களை நீங்கள் உணர மாட்டீர்கள். மற்றவர்களுக்கே அது எளிதில் தெரியும். பலவீனமில்லாத மனிதனே கிடையாது. மாணவர்களே உங்களுடைய பலமும் பலவீனமும் தான் உங்கள் வாழ்க்கையின் போக்கை முடிவு செய்யும். இது உங்கள் பலவீனத்தை நிவர்த்திசெய்யும். உங்கள் பலத்தை வளர்த்துக்கொள்வதே சிறந்தது. உங்களிடம் எது எது பலமோ அவைகளையே உங்கள் வாழ்க்கைச் சக்கரத்தை சுழற்ற அனுமதியுங்கள்.

உங்கள் பலவீனங்களை வளரவிட்டால், அவை உங்களுடைய தன்நம்பிக்கையை வேரறுத்துவிடும். முயற்சியுங்கள் "முடியாது என்பது கிடையாது" முழுப்பலம் அளிக்கவும், தன்நம்பிக்கை தழைத்துச் செழிக்கவும், உங்களுடைய பலவீனங்கள் தடையாக இருக்க அனுமதிக்காதீர்கள்! வாழ்க்கை என்பது 'உள்ளிருந்து வெளியே போகும் ஒரு செயல்!' என்கிறார்கள் அறிஞர்கள். நீங்கள் அந்தச் செயலைப் புரிந்து கொள்ள வேண்டும். விதையில் முளை எப்படித் தண்ணீர் பட்டவுடன் பூரித்து முளைவிடுகிறதோ, அதே போன்று உங்கள் மனத்திலிருந்து எண்ணங்கள் வெடித்து வெளிவர வேண்டும். அதை விட்டு உங்கள் பலவீனத்தை எண்ணி எண்ணி நொந்து போகாதீர்கள்!

எந்தக் காரியத்தைச் செய்யும் முன்னே "முடியாது"சரியாகுமா? என்று முன்னே முடிவெடுக்காதீர்கள். முடியும் என்ற தன்நம்பிக்கையுடன் செயலாற்றுங்கள். வெற்றியின் இலக்கு நோக்கி முனைப்புடன் செயற்படுங்கள்: அதன் பின் உங்களை யாராலும் தடுக்க முடியாது.

உங்கள் திறைமைகளை வெளிப்படுத்த வாய்ப்பைத்தேடுவது அவசியம். வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரும் என்று எண்ணாதீர்கள்! அதற்காகக் காத்திராதீர்கள். நீங்கள் வாய்ப்புக்களை தேடிச் சென்று கண்டுபிடித்துச் செயற்பட வேண்டும். ஒரு மனிதனுக்குள்ள சிறப்பான தன்மையே அவன் செயற்படக் கூடியவன் என்பது தான். நீங்கள் "நம்மால் முடியும்" என்று எண்ணினால் போதும் வெற்றி உங்கள் கையில் வந்துவிடும்.

நீங்கள் ஒரு முறை தோற்றால் மனம் ஒடுங்கிப்போகாதீர்கள்! 'அடுத்த முறை வெற்றி பெறுவேன்' என்று நம்பிக்கை கொள்ளுங்கள். சைக்கிள் முதன் முதல் ஓடும் போது விழுந்து எழும்பி பின் நன்றாக ஓடுவீர்கள். இதுபற்றியெல்லாம் நீங்கள் ஆழ்ந்து யோசிக்க வேண்டும். மன உறுதியுடன் விரைந்து செயற்படுங்கள்.

தேவையற்ற கற்பனைகளைக் கடந்தால்தான் உங்கள் வாழ்க்கைச் சிறையிலிருந்து நீங்கள் விடுதலை பெற முடியும்! அதனால் நீங்கள் எப்பொழுதும் கவனமாயிருந்து உங்கள் மன நிலையை உறுதிப்படுத்தி மிகுந்த தன்னம்பிக்கை கொண்டு வாழ்க்கையில் ஈடுபடுங்கள் வெற்றி உங்களுக்குத்தான்.

**த.செந்தமிழ்**

# சில சிறு பத்திரிகைகளின் முடிவு!




## இலக்கியப்பகிர்வு

**— சிதம்பரன்**

**சிறுபத்திரிகைகளுக்கு** தோற்றக் குறிப்பு இருப்பது போலவே மறைவுக் குறிப்பும் இருப்பது தொடர்பாக ஏற்கனவே பார்த்துள்ளோம். அதற்கான காரணங்களையும் ஓரளவு அறிந்து கொள்ள முடிந்தது.

இந்த வாரம் சில சிறு பத்திரிகைகளின் மறைவுக் குறிப்புக்களை பார்ப்பது பொருத்தமாக இருக்கும். பல்வேறு பிரகடனங்களுடனும் விவாதப் பொருட்களுடனும் களமிறங்கும் சில சிறு பத்திரிகைகள் அனேகமான வேளைகளில் குத்துக்கரணம் அடித்து தமது வெளியீடுகளை நிறுத்திக் கொள்வதுண்டு.

இதற்கு பிரதானமான காரணமாக. பொருளாதார நெருக்கடியைச் சொன்னாலும் சிறு பத்திரிகைகளை தொடக்குபவர்கள் எந்த வேகத்துடன் தொடங்கினார்களோ. அதே வேகத்தில் சலிப்படைந்து போவதும் ஒரு காரணமாக அமைகிறது.

அது தவிர சூழல் மாற்றத்தினால் .தீவிரமான தமது கருத்துக்களை மாற்றிக் கொள்வதும் எதிர்க்கருத்துக்களுடன் சமரசம் செய்து கொள்வதும் வேறு சில காரணங்களாகின்றன.

இரண்டு தொடக்கம் ஐந்தாறு இதழ்கள் வரை வெளிவந்து நின்றுபோன சிறு பத்திரிகைகள் ஏராளம்.சில இருபது முப்பது வரைகூட நீளும்.

ஆனால் ஒரேஒரு இதழுடன் நின்று போன ஒருசிறு பத்திரிகை பற்றி வல்லிக் கண்ணன் அவர்களின் குறிப்பு பின்வருமாறு அமைகின்றது.

''வெளிச்சம்'' என்றொரு சிறு பத்திரிகை நல்லமுயற்சியுடன் புதுமையான விடயங்களுடன் தொடங்கியது. நமது பண்பாட்டில் கவிந்திருக்கும் இருட்டை இந்த ஒரு சின்னஞ்சிறிய அகல் விளக்கின் ஒளியினால் ஒழித்து விடமுடியும் என்று நாங்கள் மனப்பால் குடிக்கவில்லை. மாறாக எல்லோரையும் போல இருட்டில் எங்களால் முணுமுணுத்துக்கொண்டிருக்க முடியாது என்பதனாலேயே இந்த வெளிச்சத்தை வெளியிடுகின்றோம்.

தன்னலத்தைத்தவிர வேறெதைப்பற்றியும் சிந்திக்க இயலாத சிந்தனையாளர்களின் கையில் நமது இலக்கியம் இசை நாடகங்கள், திரைப்படம், ஓவியம் ஆகிய எல்லாக்கலைகளும் ஒப்புவிக்கப்பட்டுள்ளன என்பது எங்களது குற்றச்சாட்டு.

உண்மையில் ஆன்மாவிலிருந்து பிறந்து எந்தவித முக மூடியும் அணியாமல் உலாவரும் எழுத்துக்களால்தான் நமது இலக்கியத்தை காப்பாற்ற முடியும் என்பது எங்களது நம்பிக்கை.


எங்களது எழுத்துக்கள் எங்களிடமிருந்து பிதுக்கி எடுக்கப்பட்டவை அல்ல. ஒரு மலர் மலர்வது போல ஒருசெடி வளர்வது போல இயல்பாக எழுந்தவை. எங்களின் எழுத்து எங்களைச் சுற்றி உள்ள மக்களின் குரல் நாங்கள் வாழும் காலத்தின் எதிரொலி.

எங்களது நம்பிக்கை எல்லாம் ஒரு சின்ன மெழுகு வர்த்தியின் வெளிச்சத்தை அணைக்கக்கூடிய அளவிற்கு இருள் இந்த உலகில் இல்லை என்பதுதான்.

கவிஞர் இந்திரன் அவர்கள் த.கோவேந்தன் அவர்களின் துணையுடன் வெளியிட்ட வெளிச்சம் இதழ் மேற்கண்டவாறு தன் கருத்துக்களைத் தெரிவித்தது.

1979யூன் மாதம் அதன் முதலாவது இதழ் வெளி வந்தது. அதுவே அதன் இறுதி இத ழாகவும் அமைந்து விட்டது. முதலாவது இதழுடன் வெளிச்சம் மரணித்தது கவலைக்குரிய விடயமே.

யாழ்ப்பானத்தில் 1980ல் தனது முதலாவது இதழை வெளியிட்ட "புதிசு" என்ற சிறு பத்திரிகை ''ஈழத்து இலக்கியம் ஆரோக்கியமான சூழ் நிலையில் இருக்கிறது என்ற ஒரு சிறிய வட்டத்தினது போலி மாயையினை நிரந்தரமாக நிதர்சனமாக்க எண்ணி நாங்கள் இப்பணிக்குள் கால்களை இறக்கியிருக்கின்றோம்'' எனப் பிரகடனப்படுத்திக்கொண்டு வெளியீட்டில் இறங்கியது.




1985 நவம்பரில் தனது பத்தாவது இதழை வெளியிட்டது. அந்த இதழின் முதலாவது பக்கத்தில் அது பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

இது பத்தாவது இதழ் தொடங்கி ஐந்து வருடங்களில் தான் இது சாத்தியமானது. வருடத்திற்கு இரு இதழ்கள் காலாண்டிதழ் என்று தான் முன்னர் அறிவித்திருந்தோம். அது பொய்யாகத்தான் போயிற்று. என்ன காரணம்? வேறும் காரணங்கள் இருக்கலாம். மூன்று காரணங்கள் மனசுள் தட்டுப்படுகிறது. முக்கிய காரணம் சூழலும், காலமும், இது நாங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியதே. சூழலும் காலமும் எங்களை வேறு வேலைகளுக்குத்தூண்டுகின்றன. "புதுசு"வின் வேலையையும் ஏதோ ஒரு விதத்தில் பின்னடையச் செய்கின்றன. வெல்லப்பட முடியாததாக இருக்கின்றன அவை. இருப்பினும் வெல்வோம் என்று உறுதியாக நம்புகின்றோம். இரண்டாவது காரணமாக படைப்புக்கள் கிடைக்காமையை குறிப்பிடலாம். மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே படைப்புக்களைத் தெரிவு செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு உங்கள் ஆதரவை வேண்டி நிற்கிறோம். மூன்றாவது காரணம் பொருளாதார நெருக்கடிதான். கணக்குப்பார்த்தபோது சில ஆயிரங்களை நாங்கள் இழந்து விட்டிருக்கிறோம். இது பற்றி அதிகம்சொல்ல ஒன்றும் இல்லை. இதுவும் முக்கியகாரணம் தான். ஆதரிக்க வேண்டுகிறோம்.

பத்து இதழ்களிலும் நாங்கள் சாதித்தது என்ன? மிகவும் சொற்பமே. திரும்பிப் பார்க்கின்றோம். சில விஷயங்கள் பூரிப்பைத் தருகின்றன. சில விஷயங்கள் துக்கத்தை உண்டு பண்ணுகின்றன. மக்களிடம் சரியாகச் சென்றடையவில்லை. சிலநூறு பிரதிகளே அச்சாகின்றன. எங்கே பிழை? எங்களிடம் தான் அது இருக்கின்றது என்று மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கின்றோம். இனிவரும் இதழ்களில் அதனைத் திருத்துவதற்கு இயலுமான அளவு முயல்கின்றோம். உங்கள் ஆலோசனைகளையும் எதிர்பார்க்கின்றோம்.

சூழல் நம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதே எழுதிக்கொண்டிக்கிறோம். எம் நாட்டில் என்னென்னவோ நடக்கின்றன. அச்சு இயந்திரத்தில் "புதுசு"வின் பிரதிகள் உருளும் போது நம் நாட்டிலும் பல தலைகள் உருளுகின்றன. யாரினால் இதனை நிறுத்தமுடியும்? அதன் தீர்வு என்ன?

தீர்வு தெரிந்த ஒன்றே, அதைநோக்கிய பயணமே தேவைப்படுகின்றது. பய ணத்தில் நாம் அடையப் போகும் இலக்கு அரைகுறையாக இருக்கமுடியாது. முழுமக்களின் சுதந்திரத்தையும் உறுதிசெய்து கொள்வோம். "புதுசு"அந்த வழியில் தன் பயணத்தைத் தொடரும். அது ஒன்றே சரியான வழி என்றும் நம்புகின்றது. படைப்புகளும் அதனை வெளிக்காட்டும்.

வெல்லப்படமுடியாதது நம் சக்தி "புதுசு" தோழமையுடனும், நேசத்துடனும் உங்கள் கைகளை இறுகப் பற்றுகிறது.

இதற்குப் பிறகு "புதுசு" வெளிவந்ததை உறுதிப்படுத்த முடியவில்லை. சூழலின் யதார்த்தம் இதுவே. எந்த யதார்த்தம் அவர்களை பத்திரிகைகளை தொடங்க வழி சமைக்கின்றதோ அதுவே அவர்களை பத்திரிகைகளை கைவிடவும் செய்கின்றது.

சிறு பத்திரிகைகள் தொடர்பாக கடந்த இரண்டு வாரங்களாக சில விடயங்களை இப்பகுதியில் பார்த்த சூழ்நிலையில் சிறிது காலம் காணாமல்போய் இருந்த அஷ்ர.்.ப் சிஹாப்தீன் அவர்களை ஆசிரியராகக்கொண்ட "யாத்ரா" என்ற கவிதை இதழின் பதினோராவது இதழ் கிடைத்தது. கவிதை இதழுக்கான காலப் பகுதியாக குறிப்பிடப்பட்ட பகுதி நவம்பர் 2002 யூன் 2003 ஆகும்.

இதனை ஏன் இங்கு குறிப்பிடுகின்றேன் எனின் சிறுபத்திரிகை வெளியிடுவதில் உள்ள நெருக்கடிகளை புரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தினால்தான்.

யாத்ரா இதழில் "கடைசிப்பக்கத்திற்கு முன்பக்கம்" என்ற தலைப்பில் அப்பக்கத்தில் எழுதப்பட்டுள்ள முதல் பந்தியினை இங்கு தருகின்றேன்.

''நீண்ட நாட்களுக்குப்பிறகு சந்திக்கின்றோம். இந்த வார்த்தை பொதுவாக எல்லா சிற்றேடுகளிலும் அதன் ஆசிரியர்களால் திரும்பத்திரும்ப சொல்லப்படுவதுண்டு. சிற்றேடுகளின் தாமதம் இயல்பானது. அதற்கான காரணங்களையும் வாசகர்கள் அறிந்தேயிருக்கின்றார்கள் என்பதால் அவற்றைநாம் சொல்லப்போவதில்லை. கூடியவரை உரிய காலத்தில் சஞ்சிகையைக்கொண்டுவர முயற்சிகளை மேற்கொள்ள முனைகிறோம் என்பதை மாத்திரம் இப்போதைக்கு உங்களுக்குச் சொல்லிவைக்கிறோம்.''




கலீல் ஜிப்ரானின்,
தோட்டத்திலிருந்து
பொறுக்கியவை இவை.

### கவிஞர்கள் பற்றி....

கவிஞர்கள் மகிழ்ச்சி
இல்லாத மனிதர்கள். அவர்கள்
உற்சாகம் எவ்வளவு உயரத்தை
எட்டிப் பிடித்தாலும் அவர்கள்
கண்ணீரால் சூழப்பட்டிருப்பர்.

### காதலைப் பற்றி...

உலகிலுள்ள ஒரே சுதந்திரம்
தான் காதல். ஏனென்றால்
சமுதாயச் சட்டங்களையும்,
இயற்கையின் விதிகளையும்
மீறச்செய்து உயிரை
மேலுயர்த்துவது அது ஒன்று
தான்.

### இணைப்பைப் பற்றி...

துக்கப்படும்
ஆன்மா அதே போன்ற
இன்னொன்றுடன்
இணையும் போது மட்டுமே
நின்மதி அடையும்.

### தீரம் பற்றி...

தீரம் ஓர் எரிமலை.
அதன் மடியில் சலனத்தின்
விதைகள் எப்போதும்
வளர்வதில்லை.

### சிறப்பைப் பற்றி...

வாழ்வின் துயரங்களை
எதிர்கொள்வது அமைதிக்குள்
உனை
அடைத்துக்கொள்வதை விட
சிறந்தது.

### இதயம் பற்றி...

நரகம் சித்திரவதையில்
இல்லை. நரகம்
வெறுமையாகிப் போன
இதயத்தில் தான்
இருக்கிறது.

### முதல் முத்தம் என்பது...

வாழ்வின் அமிர்தம்
நிரம்பிய கிண்ணத்திலிருந்து
குடித்த முதல் சொட்டு.
மனத்தை மயக்கி
ஆன்மாவைத்துயரப்பட
வைப்பதைப் பிரித்துக்காட்டும்
கோடு அந்தரங்கத்தில்
இன்பவெள்ளம் பாய்ச்சும்
நிச்சயம்.
புரிந்து கொள்ளமுடியாத
கடந்த காலத்துக்கும்
பிரகாசமான
எதிர்காலத்துக்குமான
இணைப்பு. உணர்வுகளின்
மௌனத்துக்கும் அவற்றின்
கானத்துக்குமான இணைப்பு.
வாழ்வின் பாடலுக்கு
முதல் வரி
இதயம் ஒருஅரியாசன
மாகவும் காதல் அரசனாகவும்,
கற்பு கிரீடமாகவும் இருக்க
நான்கு உதடுகள்
உச்சரிக்கும் ஒரு வார்த்தை

— பொறுக்கி

சுதந்திரத்தைப் பிரகடனம் செய்வதால், எவரும் சுதந்திரம் அடைந்து விடுவதில்லை. — ஜார்ஜ் ஸாந்தாயனா


# பின்தங்கிய கிராம மக்களுக்கு சூரிய மின்கலம் வழங்கல்

தனிநபர் தமது வீடுகளில் சுய தேவையை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கு சூரிய மின்கலம் (Solar) உதவுகிறது. சூரிய ஒளியில் இருந்து சூரிய மின் கலத்தின் மூலம் (Solar) A.C மின்னைப்பெற்று பற்றியில் சேமிப்பதன் மூலம் மின்சாரம் பெறப்படுகிறது. இலங்கையில் நீர் மின்சாரத்தின் மூலமே மின் சாரம் பெறப்படுகிறது. அதுவும் நாடு பூராகவும் மின் வழங்க முடியாத நிலையில் உள்ளது. ஏனெனில் நீர் மின்சாரம் பற்றாக்குறையாகக் காணப்படுகிறது. வடக்கு கிழக்கைப் பொறுத்த மட்டில் நீர் மின்சாரத்தை நம்பிஇருக்க முடியாத நிலை உள்ளது.

ஏனெனில் வன்னிப் பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் இங்கே நிறைய மக்கள் வாழ்கின்றனர். இவ்விடங்களில் இருந்து கல்வி கற்கும் மாணவர்கள் குப்பி விளக்குகளிலேயே கல்விகற்க வேண்டிய நிலையில் உள்ளனர். அதனால், கண் பார்வை கூட பாதிப்பு அடைந்திருக்கிறது.

தற்போதைய காலமானது கணனி மயமாக்கப்பட்ட காலம். இக்கால கட்டத்தில் நாமும் ஈடுகொடுக்க வேண்டியவர்களாக உள்ளோம். எனவே நாமும் மின்சாரத்தில் தன் நிறைவு காணவேண்டுமானால் இலகுவில் கிடைக்கக்கூடிய சூரிய மின் கலத்தைப்(Solar) பெற்று பயன்பெறலாம்.

எதுவித எரிபொருளையும் பயன்படுத்தாமல் இயற்கையாகச் கிடைக்கும் சூரிய ஒளியைப்பயன்படுத்தி (Solar)



சூரிய மின்கலம் மூலம் பெறப்படுவதால் எரிபொருளுக்கான செலவு இல்லாமலே போகின்றது. மற்றொரு நன்மை இவற்றினால் சூழலுக்கு எதுவித பாதிப்புமில்லை. இச்சக்திக்கான மூலக்கரு சூரிய வெப்பத்திலேயே தங்கியுள்ளது.

பின்தங்கிய கிராமங்களைத்தெரிவு செய்து அவ்விடங்களிலுள்ள பொது இடங்களுக்கு பொருண்மிய மதியுரையகம் அமெரிக்க புலம் பெயர் மக்களின் அனுசரணையுடன் இரவு நேரக்கல்வியை மேம்படுத்தும் நோக்கில் சூரிய மின்கலத் தொகுதியை வழங்கியுள்ளது. முன்பள்ளி, கிராமமுன்னேற்றச் சங்கம், பொதுமண்டபம், அரசினர் பாடசாலைகள் போன்ற பொது இடங்களுக்கு(Solar) சூரிய மின்கலம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு காந்திகிராமம், ஊற்றுப்புலம், இரணைமாநகர், யூனியன்குளம், சோழநகர், விநாயபுரம், கிஸ்ணபுரம், மலையாளபுரம், சாந்தபுரம், பாரதிபுரம், மாயவனூர், சம்புக்குளம், 10 வீட்டுத்திட்டம், தட்சணா மருதமடு, வட்டக்கண்டல், முள்ளிக்குளம், சேமமடு, மன்னகுளம், நவ்வி, குமரபுரம், பூநகரி, உருத்திரபுரம், கண்ணகிபுரம், குமுளமுனை, தேராவில், விசுவமடு, வேணாவில், பூதன்வயல், நாவற்காடு, ஆறுமுகத்தான்குளம், இளங்கோபுரம், சிறுவர்பூங்கா ஆகிய இடங்களுக்கு (Solar) சூரிய மின்கலத்தொகுதியை பொருண்மிய மதியுரையகம் பாடசாலைச்சிறுவர்களின் கல்வி கற்றலை மேம்படுத்தும் முகமாக இனாமாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எஸ்.கே

# பொருண்மிய வாசல்

(சி-8282)

## எங்கள் மண்ணின் மாண்பு

சிதம்பரதிரு



பொதுமக்களுக்கு பயன்தரும் திட்டம் ஒன்று அம்மக்களின் பங்களிப்புடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எல்லோருக்கும் முன்மாதிரியாக செய்யப்பட்ட இத்திட்டமானது மாளிகாவயல் பாலம் புனரமைப்பாகும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள நான்கு கிராமசேவகர் பிரிவுகளில் இருக்கும் மக்களை ஒட்டுசுட்டான் கிராமத்துடன் இணைக்கும் பாலமே மாளிகா வயல் பாலமாகும்.

இப்பாலமே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லை மாவட்டச்செயலகத்தின் நிதி உதவியுடனும், பிரதேச மக்கள் பங்களிப்புடனும் முழுமையாக புனரமைக்கப்பட்டுள்ளது.

ஐந்நூறு குடும்பங்களுக்கு மேல் கொண்டிருக்கும் முத்துவிநாயகபுரம், கற்சிலை மடு, கணேசபுரம், தட்டையர் மலை ஆகிய கிராமங்களைச்சேர்ந்த மக்கள் இப்போது சிரமம் இன்றி தமது பயண்ச்சுமை குறைந்து சந்தோசமாக பயணம் செய்கின்றனர்.

1998 ஆம் ஆண்டிலிருந்து வாகனப் போக்கு வரத்துக்கு முற்றாக தடைப்பட்ட நிலையிலே பழுதடைந்திருந்தது. இந்நிலையிலேயே ரூபா 35000 பெறுமதியான இதன் திருத்த வேலைகளுக்கு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ரூபா 10000 பெறுமதியான கட்டட உள்ளீடுகளை வழங்கியது. அத்துடன் ரூபா.25000 பெறுமதியான மக்களின் பங்களிப்பையும் ஒருங்கிணைத்து இரண்டு நாட்களில் இவ்வேலையை பூர்த்தி செய்தது.

இவ்வாறான செயற் பாடுகள் மக்கள் மூலமே அவர்களின் சேவைகள் பூர்த்தி செய்யப்படும் ஒரு முன்னோடியான செயற்பாடாக அமைந்துள்ளது.


31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 16 01 1941

மறைவு 28 08 2003



அமரர் வைத்தியலிங்கம் மகேசதாசன்

சிவன் கோவில் தெற்கு வீதி
வல்வெட்டித்துறை.

28.08.03. அன்று காலம் சென்ற எமது குடும்பத்தலைவனின் மறைவுச்செய்தி கேட்டு உடன் வந்து உதவி புரிந்தோர்க்கும், மரணச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு 27.09.03 சனிக்கிழமை அன்னாரின் வல்வை இல்லத்தில் நடை பெறும் வீட்டுக் கிருத்தியங்களில் கலந்து கொள்வதோடு, மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்;
சோ. லெச்சி அண்ணா.
தொட்டியடி.
விசுவமடு.

அன்னாரின் பிரிவில் வாடும்,
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும்
குடும்பத்தினர்.

(3787)



வீரத்தின் வரலாறு தாங்கி

வெளிவருகின்றது

யாழ்ப்பாணம், கிளிநொச்சியில்.



ஒக்டோபர் 01

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின்

நெருப்பாற்று நீச்சலிற் பத்தாண்டுகள்

நூல்வெளியீடு

களநிகழ்வுகள், விழுதுகள், உண்மைப்பதிவுகள் ஆகியவற்றைத் தாங்கியும் இதுவரை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியில் இருந்து வீரச்சா வடைந்த மாவீரர்களது பெயர் விபரங்களைத் தாங்கியும் நிலா பதிப்பகத்தினரால் அழகிய வர்ணப்பதிப்பு செய்யப்பட்டு வெளிவருகின்றது.

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி



# அனுமார் பதில்கள்

● **அனுமாரே! ஒவ்வொரு தடவையும் தேசியக்கொடி ஏற்று வதை தடுக்கச் செல்லும் கண் காணிப்புக் குழு விளக்கமளித்தபின் ஏற்றுக்கொண்டு செல்கிறதே?**

மது,
வள்ளிபுனம்.

விளக்கம் கெட்டவர்கள் என்று இப்படி பத்திரிகையில் குத்திக் காட்டுவது பண்பில்லை மது.

குமார்,
கிளிநொச்சி.

பொழுது படக் காதலிப் பவர்களை விட கொஞ்சம்பர வாயில்லை.

● **ஆற்றல் நிறைந்த எழுத் தாளர்கள், கவிஞர்கள் அதிகமாகப் பேசிக்கொள்ளமாட்டார்கள் என் கிறார்களே நீங்கள் என்ன சொல் கிறீர்கள்?**

க.இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி.

என்னை அவர்களிடம் மாட்டியிருக்கிறீரே. நான் இதற்குப் பதில் சொல்ல அவர்கள் என்னை ஆற்றல் அற்றவன் என்று சொல்ல ஏனையா வம்பு.

● **அனுமாரே! பட்டும் பட்டும் திருந்துகிறார்கள் இல்லையே இந்த வாகன சாரதிகள்.**

ஆர். சிந்து,
வள்ளிபுனம்.

இப்பிடி நீர் டக்ளசுடன் ஒப்பிட்டு அவர்களை எழுதக்கூடாது.

● **அனுமாரே! குத்துக் கரணத்தை ஒலிம்பிக்கில் கொண்டு வந்தால் என்ன?**

காண்டீபன்,
நுவரெலியா.

ஏன் கூட்டணிக்கு தங்கப் பதக்கம் பெற்றுக் கொடுக்கப் போகிறீர்களா...

● **ஹாய் அனுமாரே! புலிகளுடன் ரணில் எதைக் கொண்டு பேசவர வேண்டும்.**

என்.சுரேஸ்,
கல்வியங்காடு.

நிச்சயமாகப் புல்லைக் கொண்டல்ல.

● **யாழ்ப்பாணத்துக் கோயில்க ளெல்லாம் இப்பொழுது ஒளிமயமாய் இருக்கிறதே அனுமாரே. எதனால்**

பாஸ்கரன்,
வட்டக்கச்சி.

நீர் நினைக்கிறீர் தேங்காய் எண்ணெயால் என்று. ஆனால் அப்படியல்ல....

● **கலோ அனுமாரே! பொழுது போக்காகக் காதலிப்பவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

● **ஹாய் அனுமாரே! தற்கால பெண்கள் ஒருவருடன் கதைத்துக் கொண்டு இன்னொருவருக்கு கழுத்தைக் கொடுக்கிறார்கள். ஏன் இப்படிச் செய்கிறார்கள்**

பே.ஜெனார்த்தன்,
கிளிநொச்சி.

பின்ன ஒருவருக்கு கழுத் தைக் கொடுத்துவிட்டு இன்னொரு வருடன் 'கதைத்து'த் திரியச் சொல்லுகிறீரா!

● **அனுமாருக்கு வணக்கம்! உங்களுக்கு யாராவது எதிரிகள் இருக்கிறார்களா? இருந்தால் யார் என கூற முடியுமா?**

இ.நிஷா,
முரசுமோட்டை.

எனது பேனாதான். தப்பாய் அது எதுவும் எழுதிவிட்டால் கதிரை காலியாகிவிடும்.

● **அனுமார் அவர்களே! தற்போது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாலம் ஒன்றை அமைக்கவிருக்கிறார்களே.**

க.நகுலேஸ்வரன்,
முள்ளியவளை.

கவனித்துப்பாரும் பேச்சு வார்த்தை தொடர்பில் இந்தியா அவ்வப்போது கடுப்பாகினால், இல்லை சந்திரிகா அவர்களோடு நெருக்கமாகினால். ரணில் இந்தியா வுக்கு ஒருக்கால் ஓடிப்போய் பாலம் பற்றிக் கதைத்துவிட்டு வருவார். விளங்கவில்லையா? ஆனானப் பட்ட ஆட்கள் தாங்கள் என்று அவர்கள் நினைக்க ரணில் அவர்களுக்கே குடுமி கட்டுகிறார்.

● **அனுமாரே! தமிழீழத்தில் தமிழீழ வானொலி, புலிகளின் குரல் ஆகியவற்றிலும், பத்திரிகைகளிலும் மாதங்களை ஆங்கிலத்தில் கூறு வதன் அல்லது எழுதுவதன் காரணம் என்ன?**
**உதாரணம்: புரட்டாதி - செப்ரெம்பர்.**

த.தர்சினி,
விஸ்வமடு.

புரட்டாதி தமிழ் மாதம். எனவே தமிழ்த் திகதியைத்தான் பயன்படுத்த வேண்டும். ஆங்கிலத் திகதியைப் பயன்படுத்தும் போது ஆங்கில மாதத்தின் பெயரைத்தான் பயன்படுத்த வேண்டும். இல்லை யேல் குழப்பமாகிவிடும்.

உதாரணம் : ஜனவரி -15 தை முதலாம் திகதி என மாறிவிடும்.

● **மைடியர் அனுமாரே! காதலுக்கு கண்ணில்லை என்று பலர் சொல்கிறார்களே, உண்மையிலேயே காதலுக்கு கண்ணில்லையா?**

தனலஷ்மி,
மாணிக்கபுரம் றெட்பானா.

இல்லாமல்தான் இருக்க வேண்டும். அல்லாவிட்டால் எல்லோரையும் கண்ணீர்விட வைத்துவிட்டு அதுமட்டும் சௌகரியமாகத் திரிகிறதே

● **நவாலியில் குண்டு போட் டார்களாம், நல்லூருக்குப் பூத்தூவு கிறார்களே இவர்களையெல்லாம் எந்த வகையில் அடக்குவது.**

வள்ளுவன்,
கிளிநொச்சி.

எந்த வகையில் என்றாலும் பரவாயில்லை. முதலில் அடக்க வழிபாரும்.

● **அனுமாரே! நிலையான ஒரு சமாதானம் ஏற்படாத நிலையில் பலர் ஒரு சுதந்திர நாட்டில் கிடைக்க வேண்டியதெல்லாம் இங்கே கிடைக்க வேண்டுமென நினைக்கிறார்களே. இவர்களைப்பற்றி தாங்கள்....**

க. கஜானி,
யாழ்ப்பாணம்.

கவிஞர் புதுவையின் அப்போதைய வரி ஒன்று இப்பொழு தும் ஞாபகத்தில். "மழையே இன் னும் தூறவில்லை; ஏன் ஒழுக்குச் சட்டிக்கு ஓடித்திரிகிறாய்." பொருத்த மாயிருக்கிறதல்லவா.

● **அனுமாரே! படித்தவர் அதிலும் ரொம்பப்படித்தவர்கள் தப்புச்செய்து முட்டாள் என்ற பெயரை பட்டமாகப் பெறுகிறார்களே? இதற் கென்னகாரணம்.**

சர்மா,
வட்டக்கச்சி.

முதலிலேயே அப்படி யானவர்களுக்கு அதைக் கொடுக் காததுதான் காரணம். ●

விடுவிக்கப்பட்ட வன்னியில் அறிவியல் பூங்கா
ஈழத்து வெளியீடுகள்
அறிவியல்
மொழி
விடுதலைப்போராட்டம்
பெண்ணியம்
இலக்கியம்
பகுத்தறிவு
சகல பாடநூல்கள்
பாடஉபகரணங்கள்
கிளிநொச்சி
விசுவமடு
வட்டக்கச்சி
முள்ளியவளை
புதுக்குடியிருப்பு
கந்தபுரம்
மல்லாவி
முழங்காவில்
குறைந்த விலை
அறிவமுது பொத்தகசாலை
T.P-021-2223961
(சி-8520)

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –36

நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.




## படத்திற்கு மெருகூட்டுங்கள் –36

............................................................
............................................................
............................................................
............................................................

பெயர் : ..............................................
முகவரி : ..............................................
..............................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –35



சு.சோபியா,
8ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

### பரிசுக்குரியவரிகள்

பார்த்த இடமெல்லாம் பாதுகாப்பு வலயங்கள்
பள்ளிக்குப்போனால் ஆமிபார்த்து விடுகிறான்
பயிற்சிக்குப்போனால் வயது காணாதாம் – நாகர்
கோவிலில் "ஒட்டுணு"வா எமை காத்தார்.

### பாராட்டுக்குரிய வரிகள்

*தீனா குறுப்பில் தான் நேற்றுவரை இருந்தேன்.*
*திருந்தி விட்டேன் இன்று தமிழ்ப்புலிகள் வரவால்*
*சண்டித்தனம் புரிந்த சங்கிலியைக்கொண்ட*
*சைக்கிள் கடை தொடங்கி விட்டேன் குடாநாட்டில்*

த.க.லிங்கராசா
கிளிநொச்சி.

*நானா வந்தேன் தெருவுக்கு*
*தானா பசித்த தொழிலிதுதான்*
*ஊரார் சைக்கிலில் ஊர்கோலம்*
*உண்ண இல்லை பிடி சோறு.*

தேஜஸ்,
நீர்வேலி.

*பாலகன் நெஞ்சில் குடும்பத்தின் பாரம்*
*பாணுக்கு வழியின்றி பரிதவிக்கும் சோகம்*
*இன் நிலை பகைவனின் கண்ணுக்குப் போதும்*

வி.விஸ்வசூரியன்,
திருநெல்வேலி,

*நீ பிறந்த வீடு தெரியாத உனக்கு*
*தாய்லாந்துப் பேச்சு காட்டுமே என்றாய்*
*நாடெல்லாம் போய் நடந்தாலும் பேச்சு*
*உன் வீட்டுக்கு போக படைவிலகாது இப்போ*

எம்.சிறிதரன்,
கிளிநொச்சி.

*இறு மாந்திருந்தேன் - துன்ப*
*இருள் பாதி விலகுவதாய்*
*இல்லையினி சமாதானம் எனில் -*
*என்கையில் இருப்பதே காணும் கதை சொல்ல*

சு.கார்த்திக்,
வன்னி.

*விழிகளில் ஏக்கமேன் தம்பி*
*வழிகளில் தடைகளா? இல்லை*
*தொழிலினில் சுணக்கம்.*

கண்ணாளன்,
கிளிநொச்சி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்**
புதுக்குடியிருப்பு **வழங்குகின்றது.** கிளிநொச்சி.




இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.